சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# உபோற்காதம்.

சங்கமிரீஇய வழுதிநாட்டகத்தே, செந்தமிழ் கமழ்வுறூஉம் பொதியமாவரையின் பாங்கருள்ள திருநெல்வேலியம்பதியிலே, சைவவேளாளகுலத்திலே, நல்லொழுக்கத்திற்றலைநின்றோராய் விளங்கிய ஆனந்தக்கூத்தர் என்பார்க்கு, அவர்மனைவியராகிய மயிலம்மையார் திருவயிற்றிலே, தமிழ்நாடுசெய்தவத்தானே சித்தாந்தத்தையுஞ் செந்தமிழையும் அத்தாணிமண்டபத் தரசிருத்துவான் சமயசந்தானசாரியருந் தவத்திற்கதித்த அகத்தியனாரும் பிறறைனோன்றோருருக்கொளீஇ வந்தாலொப்ப ஒருவர் திருவவதாரஞ்செய்து, முக்களாலிங்கர் என்னும் பிள்ளைத்திருநாமம்பெற்றுச் சகலநற்குணங்களோடும் வளருவாராயினர். அவர், ஐயாட்டைநேர்ந்துழிச் சத்திநிபாதமுடையவராகிப் பிறவிப்பெருந்துன்பக்கடலினின்றுங் கரையேறக் கருத்துற்றுச் சிவதலயாத்திரையைக் காமுற்றுச்சென்றூர் திருவாவடுதுறையையடைந்து ஞானசிரியராகியபின்வேலப்பதேசிகசுவாமிகளைத் தரிசித்து, அவர்பாற் சைவசந்நியாசமும், சிவதீக்கையும்,

"சிவஞானயோகிகள்" என்னுந்திக்காநாமமும்பெற்று. மெய்கண்டசாத்திரமும், பண்டாரசாத்திரமுங்கேட்டு எளிதிலே தென்மொழிக்கடலும் வடமொழிக்கடலும் முற்றுருங் குணர்ந்து விளங்கினர்.

இவ்வாறுங்காலத்து அமிழ்தினுமினிய நந்தமிழுணங்கு செய்த அருந்தவமேலீட்டானே முனிவர்பிரான் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியவுரைகளிலுள்ள ஆசங்கைகளை நீக்கி நன்குதெரிக்கத் திருவுளங்கொண்டு அந்நூற்கட் பாயிரத்திற்கும் முதற்சூத்திரத்திற்கும் "சூத்திரவிருத்தி" யெனப்பெயர்பெற்ற வோரகலவுரையும், நன்னூலுக்குச் சங்கரநமச்சிவாயப் புலவர்செய்தபுத்துரையாகிய "விருத்தியுரை"த் திருத்தமும், அவஞானமகற்றுஞ் சிவஞானபோதத்திற்குச் சிற்றுரையும் எப்பாடியங்களுமிதற்கு நிகரன்றெனயேவரும் போற்றத் திராவிட மகாபாடியமெனப்பெயர்பெற்ற விருத்தியுரையும், சிவஞானசித்தியார் சுபக்கத்திற்குப் பொழிப்புரையும், சிவதத்துவவிவேகமூல சுலோகங்களின் மொழிபெயர்ப்பும், காஞ்சிப்புராணமுதற்பாக மொழிபெயர்ப்புஞ் செய்தருளினர். அன்றியும், பவஞானமகற்றியுயவான் றவஞான மருத்து நஞ் சிவஞானயோகிகள் சுத்தாத்துவித சைவசித்தாந்தச் செறிபொருளாந் தீதில்பொருள்களை யெல்லா மெம்போலிய ருணர்வதற்குப் பேருபகாரஞ் செய்யு மாற்றலுடைத்தாந் தன்மையையும், தெய்வத்தமிழ்மொழி மேன்மேலுஞ்சிறப்புறீஇ யோங்குமாற்றையுந்திருவுளத்தடைத்து

நங்கள் சித்தாந்தத்தானே புறச்சமயத்து ளொன்றுவைத்து நிராகரணஞ் செய்யப்பட்டதூஉம், இன்னமும் பலப்பல வான்றோரானே "தருக்கதாண்டவம், தருக்கலீலாசமர்த்தனம்"என்னு மின்னோரன்ன நூல்களான் மறுக்கப்பட்டதூஉமான தார்க்கிக மகோததியுள், இளைஞருமெளிதி னுணர்தற் கேற்ற பெருந்தகைமையுடைய தருக்கசங்கிரகத்துள் அன்னம்பட்டீய மென்னுமுரையைவடமொழியினின் றும்மொழி பெயர்த்தருளினர்.

அது பன்னெடுநாள் அச்சுவிமானமேறப் பெறு திருக்க, நற்றவ வறிவுமாட்சி யுடையராய்,செந்தமிழையுஞ் சித்தாந்தத்தையுஞ் செவிலிபோற் போற்றி வளர்த்தவராய் விளங்கிய பெருந்தகை ஆறுமுக நாவலரவர்கள் அந்நூல் சிதறுண் டழிந்து போகாமே பதிப்பித்துப் பெரும்பேற்றினைப் பெற்றனரென்பது எவரும் அறிந்ததே. சிறப்புற்ற புலவர்கள் எந்நாளு மிருக்கப்பெற்று விளங்கிய நந்தேயத்திற்கு அவர்போந்து செய்த பேருதவிகள் எண்ணில. அவை எக்காலத்தும் மறக்கத்தக்கனவல்ல வென்பதனைத் தகவிலர்நீங்க மற்றையேவரு மறிவர். அவர் தேயவேறுபாட்டினைக்கருதாது கல்வி மேம்பாட்டினைக் கருதவேண்டுவது கல்வி, அறிவு முதலியவற்றின் பயனும் நிலைபெறுந் தகவுடைமை மேற்கொண்டார்தஞ் சிறப்புடைச்செய்கை என்பது தானே போதரும்.

சிறப்புற்ற புலவர்கண்முன் பேசுமாற்ற விழந்தார் சிலர், நல்லூழ்வந்து கைகூடப் பெருமையாற் பொரு மையாற் "குற்றமே தெரிவார் குறுமாமுனி, சொற்றபாவினு மோர்குறை சொல்வரால்" என்றதற்கேற்பப் பலவாறுகப் பேசி யவலமுறுவதோடு, செய்ந்நன்றி கோறலா முய்தியில் குற்றமுமியற்றிப் பாவத்திற் கிலக்காவர். இவருரை நல்லறி மாக்க ளல்லரா மாக்கள் அவைக்களம் படுவதூஉம் நல்லறி மாக்கள் செவிக்களம் படுவதல்லதூஉமாம் புரையுரையாம் வெற்றுரையென ஒருபுறமொதுக்குவதே கடனென்பது.

தருக்க சங்கிரகத்தின்மேற்சூத்திரமும் தருக்கசங்கிரக தீபிகையின்கீழ் விளக்கமு மியற்றப்பெற்று 'அளவியல் என் னுந் தருக்கவிளக்கம்' எனப் பெயருறீஇ நிலவுவது இந்நூல். இந்நூலினை யியற்றிய நல்லாசிரியர் வைதிகச் சைவராம் சோமசுந்தரப் பிள்ளை யென்பார். இந்நூலினுட்சிலவிடங் களில் நம் யோகீந்திரர் சங்கிரகத்தின்மேற் பிள்ளையவர்கள் சூத்திரமியற்றியது ஒழுங்குபற்றியும் ஒற்றுமைபற்றியுமாக லின் நிறையறிமாந்தர் வெறுப்புறுரென்க. இன்னுந் தருக் கப் பகுதியில் விளக்கஞ்செய்துபோதருவன பலப்பல விருப் பினும் அவற்றையெல்லா மிந்நூலாரோரா இச் சேறலென்னோ வெனின் கூறுதும். முன்னூலொடொப்ப வாயுங்கான் மற் றொன்று விரித்தலென்னும வழூஉ வரமேனுக்கி மாதவப்பெருந் தகை யோகிக ளுரைத்தவற்றிற்கே விளக்கங்கண்டாரென் பது.

பிள்ளையவர்கள், தாம் இந்நூலினை அச்சிடுமாறு சில ர்க்கறிவித்தும் அன்னோர் "அவ்விழைவை எம்பாற் செலுத் தக் கடவதன்று" எனக் கூறியதாக பூசுகற்பகாம்பிகை சமே தராய் விளங்குங் கபாலீச்சரத்தாரினைக் கண்டு தொழ ஓர் நாள் நந்திருமயிலைக்கு வந்தார் எம்பாற் பகர்ந்தனர். அந் நூலின் நுண்மாண் பொருளினையறியும் அறிவாற்றலாதி யன பொருந்தப் பெறுதே மாயினும் எஞ்சிவஞான யோகி கண் மாட்டுள அன்பு பிடர்பிடித் துந்தலானே எவ்வாற்று னும் பதிப்பித்தலே முறையென வொப்பி அவ்வாசிரியரி டம் "பதிப்பித்துத் தருது"மெனக் கூறி யவர்வயினின்றுங் கரலிகிதத்தினை வாங்கினேம்.

இதை எங்ஙனம் பதிப்பிப்பதென்று கருதியிருந்த எமக்குப் பரோபகார சிந்தையுடன் சென்னைப் புரசையிற் சிறுமியர்க்கு இந்துமத போதனை போதிக்குநிமித்தந் தரும பாடசாலை வைத்துக் கற்பித்தலாஞ் சீறம் வளர்க்குஞ் செல்வராம நே. முனிசாமிமுதலியாரவர்கள், அப் பாடசாலைப் பரிபாலனத்திற்கென்றே யமைத்துள்ள தமது 'கணேச அச்சி யந்திரசாலையில்' அச்சிட்டுத் தருவதாகத் தரும சிந்தையுடன் வாக்களித்து அங்ஙனே அச்சேற்றியுங்கொடுத்தனர். இதனை அச்சிடற்குரிய கடிதமுதலியவற்றை யன்புடன் வுபகரித் துதவினோர், மாதவச சிவஞானயோகிகண் மாட்டன்புடை மை தங்குடிக்கு எந்நாளுங் கிழமையாயுள தென்பதனைத் தெரிக்க அப்பெரியார் பெயரினையே புனைந்தவரும் எஞ்சோ

தர முற்றோன்றலாரும் ஆகிய **சிவஞானப் பிள்ளையவர்களும்,** எமக்குக் கெழுதகை நட்பினுழுவலன்புறீஇ நற்றுணையா நிற்கும் **நமச்சிவாய முதலியாரவர்களுமே.** இம்மூவர் செய்த நல்லுதவிகட்காக உவப்புடன் நன்றி பல்காற் கூறுங் கடப்பாடல்லது வேறொன்றியற்ற வறியகில்லா தெந்நெஞ்சம்.

இந்நூலினை அச்சிடுங்காலத்து இன்றியமையாத் துணையாயிருந்து பலவிதவுதவிகளு மன்புடனுதவிய சீர்வாய்ந்த நண்பினராம் பெருந்தகை **சதாவதானம் - நா. கதிரைவேற் பிள்ளையவர்களுக்குக்** கைம்மாறாக வேறொன்று மியற்றாது அவர்தம்மைஎம்மனத்தகத்துநிறீஇ என்றும்பிரிவுறாதிருத்தலாகிய வொன்றினையே செய்ய விரும்பியுளேம். புலமையிற் சிறந்த இவர் எம்போலியர்கட்குச் செய்யுமுதவி பெரிதும் பாராட்டக்கடவதே. கற்றோரெனப்படுவோரெவ்வொருவரானும் வெளிப்படையாகவேனும், புகழேந்தியைப் புகழ்ந்த ஒட்டக்கூத்தரைப்போற் கரவடமாகவேனும் வியப்பாநிற்பச் சைவசித்தாந்த பரிபாலனஞ்செய்யும் இவருதவியை யெனையரும் விரும்பற்பாலதே.

தருக்கசங்கிரகத்துள் அன்னம்பட்டீய மென்னுமுரையைத் தமிழினில் மொழிபெயர்த்தருளிய **திராவிடமாபாடிய முனீந்திர சிவஞான நிட்டானுபவ மூர்த்திகட்குப்** புன்மையேஞ் செய்யுமாகிடப்பனவென்? அந்நூலினை யாவரும் வாசித்துய்ய அச்சுவிமானமேற்றிய சற்கருமாநுட்டாநசீலராம்

ஆறுமுக நாவலரவர்கட்கும், கல்லாமாந்தர் கற்பதுவேண்டியும், நல்லறிவுடையோர் நயப்பதுவேண்டியும், விளக்கமியற்றிய தமிழ்ப்புலவர் சோமசுந்தரப்பிள்ளை யவர்கட்கும் எஞ்ஞான்றுஞ் செயக்கடவதாய நினைத்தலையும், வாழ்த்தலையும், வழுவா தாற்றுகின்றாம்.

இந்நூலில் நன்குவிளக்கப்பெறாச் சிலபாகங்கள் நல்லுரை யெழுதப்பெற்று இரண்டாம்பதிப்பில் வெளிவரும். தார்க்கிகமுணர்ந்தபுலவோர்ஒற்றுமைநயத்தால், இந்நூலில், இன்னபாகத்திற் குறைபாடுளது, இன்னதுவிரித்துரைக்கக் கடவது, ஈது மாறுபொருள்கொண்டுளது என்று அவ்வப்பாகங்களை யெடுத்துக்காட்டி யுபகார நெறிநின்றுரைப்பரேல் அச்சிரியர்க்கு மனமார நன்றிசெலுத்துவதோடு, அவை மாண்பொருளெனத்தோற்றின் அடுத்தபதிப்பில் அத்திருத்தத்துடனும் திருத்தஞ்செய்த மாண்பினர் நற்பெயருடனும் வெளியிடச்சித்தம். அங்ஙனமன்றி "விசேடணவிசேடியங்களின் சம்பந்தங் கவராத வுணர்வு நிருவிகற்பம்"எனக்கூறவறியாது "ஜாதி, குணம், கிரியை, பொருள் முதலியவற்றின் வேறுபாடின்றி, இஃதொன்று வேன்னும் வஸ்துவின்சத்துவமாத்திரத்திலுண்டாகுஞ் ஞானம்" என்பது முதலாகக்கூறுவார் புரையுரைகள் எம்மாற் கவனிக்கப்படமாட்டாவென்பதறியத்தக்கதே.

ஆசிரியர் சிவஞானயோகிகள் மொழிபெயர்த்தருளிய 'தருக்கசங்கிரகதீபிகையும்' அதற்குப் புத்துரையாம் இத்

# உபோற்காதம்.

'**தருக்கவிளக்கமும்**' எந்நாளும் இந்நிலவுலகின்கண் நிெ
மாறு முழுமுதற்கடவுளாம் பரசிவத்தின் றிருவருளை
ங்குகின்றாம்.

திருச்சிற்றம்பலம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்.

---

திருமயிலை,
பராபவஹு
பங்குனிமீ ௧௨.

இங்ஙனம்,
சே. சோமசுந்தரன்

## சிறப்புப் பாயிரம்.

அருளிருக்கும் விழியுடையான் அன்பிருக்கு மொழி யுடையான், தெருளிருக்கு மனமுடையான் சிவநேச நினை முடையான், இருளிருக்குங் குழலுமையா ளிடமிருக்கும் பெருமான்மேற், பொருளிருக்கும் பாவுடையான் பொய் யாத நாவுடையான். (௪)

பொன்பாட்டின் மண்பாட்டிற் பூவையர்கள் கலவியிலாம்
இன்பாட்டின் மனஞ்செலுத்தி யிவ்வுலகில் வாழாதான்
அன்பாட்டி லாடுகின்ற வம்புலவன் றாண்மறவான்
என்பாட்டி லிச்சைவைத்த வெழிற்சோம சுந்தரவேள். (௫)

ஆங்கவற்றிற் சுருக்கமதற் கமைந்தபல சூத்திரமும்
பாங்குடனே தீபிகைக்குப் பசுந்தமிழில் விருத்தியுமாய்
நாங்களுள மகிழ்சிறக்க நயமாக வரைந்தளித்தான்
ஈங்கவற்றை யச்சதனி லிசைபெறவே பதித்தனனால். (௬)

வண்டீர மலர்குடையும் வாசமலர்ச் சோலையெலாம்
பண்டீர வஞ்சுகங்கள் பரசிவனார் புகழ்பாடும்
கண்டீர வங்களுடன் கரியிருந்து துயில்கூரும்
துண்டீர நன்னாட்டிற் றொன்மயிலா புரியதனில்.

கருவிளையாட் டிரிந்தொருநாங் கதிவிளையாட் டடைபா
மருவிளையாட் டிமிர்கடப்ப மாவனத்திற் சிவனியற்றுந்
திருவிளையாட் டுடன்பெரிய திருத்தொண்டர் புராணமு
குருவிளையாட் டமர்வாத வூரரருங் கோவைகுறள்.

உச்சியப்பர் விழியிரத்தம் ஒருவேடன் கண்டுதன்கண்
வச்சியப்புங் காளத்தி மான்மியமும் புலவருச்சி
நச்சியப்பும் புகழ்பூண்ட நறுந்தமிழிற் காவியமாக்
கச்சியப்பன் செய்தருளுங் காந்தமுதற் பலநூலும். (௬)

உள்ளியம் பலவுரவோர் ஒருங்கிருந்து கேட்டுவக்கத்
தெள்ளியம் பலவரிய தீந்தமிழிற் பிரசங்கம்
அள்ளியம் பலப்புலமை யாரவமர்ந் துரைசெய்தோன்
வெள்ளியம் பலப்புலவன் விரும்புசுத னெனத்தோன்றி. ()

வாழ்வுடையான் சங்கரனார் வாரிசத்தாட் கெந்நாளுந்
தாழ்வுடையான் பலநூலுந் தக்கவர்பாற் றேர்ந்தவற்றில்
ஆழ்வுடையான்கேள்விமுயன்றஞ்செவிக்கேயுணவுகொளுஞ்
சூழ்வுடையான் புகழ்ச்சோமசுந்தரப்பேர்ப் புண்ணியனே.

உ

கணபதி துணை

# மு க வு ரை

———

சிறப்புப்பொருந்தி விளங்காநின்ற கயிலையங் கிரியின்கண் சிவபெருமானால் உமாதேவியார்க் குபதேசிக்கப்பட்ட தெய்வமொழி யிரண்டனுள், ஒன்றாய் . அநாதியாய் ஓர்தனி முழுமுதன்மொழி யாய் உயிர்கள் தமக்குரிய உறுதி நான்கினையும் எளிதிற் பெற்றுய் யத்தரவல்லதாய் நின்று நிலவுவது தெய்வச் செந்தமிழ் என்பது.

அரியபெரிய தமிழென்னுந் தாயினைத் தளர்வறநின்று விளங் குமாறு பாதுகாத்தோம்பல் தமிழறி நன்மக்கள் அனைவர்க்குந் தீர் திறனில்லாக்கடனாம். அவருள்ளும் உலகின்கண் இன்னதொன் றில் தாம் செய்யற்பால தின்னதென இனிதுணரவல்ல கடனறி காட்சிவல்லோர் தமிழினைப் பாதுகாத்தோம்பி அதுபரவி நின்று பயன்பட்டு நிலவுமாறு தம்மாலியன்றதைச்செய்ய முன்னின்று முயலல்வேண்டும் என்பது அவர்தாமே தெரிந்துகொளத் தக்க தாகலின் அன்னோர் அதன்கட்பராமுகஞ் செயற்பாலரல்லர். செய் வதுண்டெனின் தமிழிற்பிறந்து, வளர்ந்து, தமிழிற் பயன்கொண்டு வாழ்ந்தின்புறும் நன்றியை மறக்கவொண்ணா அவர் தகுதிக்கழகன் மைகண்டு வருந்தி இன்றமிழ் எழுந்தோங்கி நின்று நிலவுமாறு செய்தருள எல்லாம் வல்ல முழுத்தனிமுதற்பொருளைத் தாழ்ந் திறைஞ்சி வேண்டற்பாலதே செய்யத்தக்கதாம்.

இவ்வுலகின்கட் பெறுதற்கரிய பெருமையும் அறிதற்கரிய அவதியுமுடைய மக்கட்பிறப்பைப் பெற்றுவைத்தும் உயர்ந்தோரான் மக்கள் எனப்பிறித்துச் சுட்டப்படுஞ் சிறப்பிற்கேதுவாகிய கல்வி, அறிவு, ஒழுக்கம் இலராயிற் பிறந்தும் பிறவாதாரேயாவர். ஆகலின் கல்வியிற் பயின்று புலமை நிரப்பவேண்டுங் கடனறிகாட்சியோர்க்குச் சொன்னூலாகிய இலக்கணம் பொருணூலாகிய தருக்கம் என்னுமிரண்டும் இன்றியமையாச் சிறப்பினவாய சாதனமென்பதூஉம் அவற்றுள்ளும் சொல்லினுஞ் சிறந்தது பொருள்என்பது எல்லார்க்கும் ஒப்பமுடிந்ததாகலினானும் தன்மொழியினர்க்கேயல்லது ஏனையர்க்குப்பயப்படாத இலக்கணம்போலாது எக்காலத்து எந்நாட்டு எம்மொழியினர்க்கும் ஒப்பப்பயன்படுவதாகலினானும் இலக்கணத்தினும் சிறப்புடைத்துத் தருக்கமென்பதூஉம் யாவர்க்கும் எளிதிற் புலப்பட விளங்குந் தடைதவிர் துணிவாமெனவுணர்க.

அன்றியும் இந்நூலினிறுதிக்கட் கூறப்படுமாற்றான் மக்கட்குரிய பயன் நான்கனுட் சிறந்த வீடுபேற்றிற்கும் தருக்கநூல் சாதனமென்பது இனிதுபெறப்படுவதொடு "எண்ணெழுத்திகழேல்" "எண்ணும் எழுத்துங் கண்ணெனத்தகும்", "எண்ணென்பவேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங் கண்ணென்பவாழுமுயிர்க்கு","எண்ணாகி யெழுத்துமாகி", "ஆற்றினளவறிந்து கற்கவவையஞ் சாமாற்றங் கொடுத்தற்பொருட்டு" என்றற்றொடக்கத்துத் தீஞ்செந்தமிழின் தெய்வச்சுருதியானும் பெறப்படுதலின் தருக்கநூற்சிறப்பினை அறிவுடையார் தாமே தெரிந்துகொளவிட்டு விடுவதன்றி விரித்துரைக்கப்புகின், ஏ! ஏ! இவன்றிறம் என்னை என நகைவிளைத்தற்கேதுவாகலின் இம்மட்டினின்று அமைவுறுதலே நன்று. எண்ணெனினும் தருக்கமெனினும் அளவையெனினும் ஒக்கும்.

பலவளமிகுந்த பாண்டிநாட்டின்கட் சங்கமிருந்து தமிழாராய்ந்து, தம்முயிரினும் இனிதெனக்கொண்டு தளர்வறத்தாங்கி வளமிக வோம்பி நலந்தர நந்தமக்குளமகிழ்ந் துதவியருளிய அருந்தவச் செல்வராகிய நம்பெருந்தகை முதியோர் தருக்கநூற்சிறப்பு இத்துணைத்தென்பன இனி யுணராரல்லராகலான் தருக்கநூல் ஒன்று எவ்வாற்றானும் இயற்றப்பட்டு அக்காலத்தேனும் இருந்திருத்தல் வேண்டுமென்பது மறுத்துரையாடற்பால தொன்றன்று.

இனி இக்காலத்துச் சிவஞானச் செல்வராய் அவதரித்திருந்த சிவஞான முனிவர் செந்தமிழின் மொழிபெயர்த்தருளிய தருக்க சங்கிரக தீபிகையிற் கற்றோரும் மற்றோரும் எளிதெனக்கண்டு விரும்பிப் பயின்று பயன்பெறற்பொருட்டுச் செந்தமிழ்க்கோர் சிறப்புடை அங்கமாய் ஓர் கருவிநூலாய் நின்று நிலவுமாறு எல்லாம் வல்ல இறைவனதருளை முன்னிட்டுச் செந்தமிழ் நூன்முறைமைக் கேற்பச் சங்கிரகத்தின் மேலே சூத்திரமும் அதன்கீழே வேண்டுமிடத்து இயன்றமட்டில் விளக்கமும் இயற்றப்பெற்று அளவியல் என்னும் தருக்கவிளக்கம் எனப்பெயர்வாய்ந்து விளங்குவதாயுளது இந்நூல் என்க.

---

# ஸ்ரீசிவஞான யோகிகள் வரலாறு.

---

### தரவு கொச்சகக் கலிப்பா.

பூமணக்கும் பொழின்மணக்கும் பொழிற்கெழில்கூர் தருமுகமாய்த், தூமணக்கு மொருபொருநைத் துறைப் புனல்பாய் வளத்ததுவாய், நாமணக்கும் புகழ்படைத்து நல மணக்கும் புலமணக்குந், தேமணக்குந் தமிழ்மணக்குந் தெ ன்பாண்டித் திருநாட்டில். (க)

மருந்துநிகர் மொழிமடவார் மைந்தரொடு மாட்டயரப், பொருந்துவளம் பலசெறியும் பூஞ்சோலை புடையுடைத்தா ய்ப், பருந்துநிசான் றென்றுமொளிர் பாவநா சப்பதிப் பாற், றிருந்துபுகழ் விக்கிரம சிங்கபுர மெனும்பதியில். (உ)

பொன்பூத்த பெருஞ்சிகரப் பொதியவரை நிதியமெ னுங்,கொன்பூத்த நெடியகுணக் குறியமுனி யருள்புலமை, முன்பூத்த வேழுதலை முறைவாய்ந்த முழுத்தவத்து, பின் பூத்த புகழ்பாண்டி வேளாள குலதிலகர். (௩)

அணிதருமம் பலக்கூத்த ரவர்மனையார் வடமீ ம்
பணிதருகற் புடையநலம் பரவுமயி லம்மையார்
துணிதருமற் றிவர்தம்பாற் றாவறிவங் குரித்தென்னத்
திணிதருமெய் திருந்தொருவர் திருவருளா லவதரித்தார்.()

## ஸ்ரீசிவஞான யோகிகள் வரலாறு.

முக்களா லிங்கமென மொழிபிள்ளைத் திருநாம
நக்களா வுறப்பூண்டு நந்துபிறைக் கொழுந்தனையா
ரக்களா வரனருளா லையாண்டின் மேனெடிதின்
பக்களா தரத்தோதும் பள்ளியமர்ந் தருளினார். (ரு)

பள்ளியமர்ந் தருணாளிற் பரவுபுனற் சோணாட்டு
வள்ளியவா வடுதுறையில் வாழ்நமச்சி வாயகுரு
வொள்ளியமென் மலர்க்கழலே யுளத்துன்னு முனிவர்சிலர்
நள்ளியவான் புகழ்மிகுமந் நகர்வீதி வரக்கண்டார் (சு)

கண்டுபணிந் தெழுந்தடிகேள் கடையேனி லடைந்தமுது
கொண்டுபின ரெழுந்தருள வேண்டுமெனக் குறையிரப்ப
மண்டுபிரி யத்தவரு மழவுருவப் பெருந்தகையார்
தொண்டுபடற் கிரங்கியவர் தூயமொழிக் குடன்பட்டார்.

திருந்துசுவைக் கறியமுதுந் திருவமுதுங் கொண்டருளி
யருந்ததியென் னம்மையென்றோ ரழகியசெய் யுளும்பாடிப்
பொருந்துமவர் செலப்புறத்தே போயிருந்த தந்தையார்
வருந்துதலி றம்மனைவாய் வந்துநிகழ்ந் ததையுணர்ந்தார்.

உணர்ந்தவுடன் மைந்தரொடு முறுவர்பாற் போய்வணங்கிப்
புணர்ந்ததிரு வருட்பெருமைப் புத்திரனார் குறிப்புணர்ந்து
தணந்தனர்சென் றனரீன்ற தந்தையா ரம்மைந்தர்
மணந்தனராய் முனிவரொடு வழிக்கொண்டு நடந்தனரால்.

வரையகமுங் கருங்கான மருவகமும் வயன்மருதத்
தரையகமு மெம்பெருமான் றானங்கள் பலவணங்கி

விரையமைந்த சோணாட்டு மிளிர்திருவா வடுதுறையி
னுரையமைந்த திருமடத்தி னுட்புகுந்தா ருவமையிலார்.

புக்கவர்பன் னிரண்டகவை பொருந்தியொளி ரஞ்ஞான்றே
தக்கவராய் முண்டிதராய்ச் சந்நியா சத்திறம்பூண்
டுக்கவர்தந் தலைமாலை யொருங்கணிவார் திருவருளாற்
றிக்கவரு ளதிசயிப்பச் செழுங்கலைகள் பலபயின்றார். (௧௧)

ஆயபெரும் புகழ்த்திருச்சிற் றம்பலதே சிகர்நாண்முன்
மேயபெருங் கருணையுரு வேலப்ப தேசிகர்தாம்
பாயதிரு வாணமெனப் பகர்தீக்கை செயப்பெற்றுத்
தாயனையார் சிவஞான முனிவரெனத் தனியமர்ந்தார். (௧௨)

வடகலையிற் றென்கலையின் மாறிலா விலக்கியமுந்
தொடர்புடைய விலக்கணமுந் தோலாத தருக்கமுமற் [று
றிடனுடைமெய்ப் பொருட்கலையு மெக்கலைய முழுதுணர
திடமுடைய வநுபூதிச் செல்வராய்ச் சிறப்புற்றார். (௧௩)

சிறப்புறுகொள் காப்பியக்கூத் திரவிருத்தி முதற்பலவு
மறப்பயில்பெரும் புகழ்க்காஞ்சி மான்மியமும் யமகமுதற்
பெறப்படுமந் தாதிகளும் பிறங்குமிவை முதற்பலவு
முறப்பயில வினிதியற்றி யயர்பரிபூ ரணமுற்றார். (௧௪)

# தருக்க சங்கிரக தீபிகையின் வரலாறு.

வைதிகசாத்ரம் மீமாஞ்சை, நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், வேதாந்தம் என ஆறும். அவற்றுள், மீமாஞ்சை சைமினிமுனிவரானும், நியாயம் கௌதமமுனிவரானும், வைசேடிகம் கணாதமுனிவரானும், சாங்கியம் கபில்முனிவரானும், யோகம் பதஞ்சலிமுனிவரானும், வேதாந்தம் வியாசமுனிவரானும், சூத்திரரூபமாகச செய்யப்பட்டன. அவை த்ரிசனமெனவும் பெயர்பெறும். கௌதமமுனிவர் அக்கபாதர் எனவும் பெயர்பெறுவர்.

அவற்றுள், நியாயம் வைசேடிகம்என்னும் இரண்டும் தருக்கநூலெனப்படும். இவற்றையும் இவற்றின் வழிநூல்களையும் வியாக்கியானங்களையும் நன்குணர்ந்த மகாபண்டிதராகிய அன்னம்பட்டர் ஏறக்குறைய இருநூற்றைம்பதுவருடத்துக்குமுன் தருக்கசங்கிரகம் எனப்பெயரிய ஒருநூலும், அதற்குத் தருக்கசங்கிரகதீபிகை எனப்பெயரிய ஒருவியாக்கியானமும் இயற்றினர். இவ்வன்னம்பட்டர் தெலுங்கர். இவர் மாபாடியத்துக்குக் கையடர் இயற்றிய வியாக்கியானத்துக்கு உரையுஞ் செய்தனர்.

இத்தருக்கசங்கிரகம் சிறுவரும்எளிதிலுணரும்பொருட்டு மிகச் சுருக்கிச் செய்யப்பட்டமையால், யாண்டும் தருக்கநூல் கற்கப் புகுவோர் யாவரும் முன்னர் இதனையே கற்கின்றனர். இதற்குப் பல வியாக்கியானங்கள் உள. அவற்றுள்,—

௧. தருக்கசங்கிரகதீபிகை. இது நூலாசிரியராலே செய்யப்பட்டது. இதனை அன்னம்பட்டீயமென வழங்குவர். இது தருக்க

சங்கிரகத்துக்குச் செய்யப்பட்ட வியாக்கியானங்கள் எல்லாவற்றுள்ளும் மிக அரிதிலுணர்தற்பாலது. இது மூந்நூற்றைம்பது கிரந்தமுடைத்து. இவ்வியாக்கியானத்துக்கு ஐந்து வியாக்கியானங்கள் உள. அவற்றுள்,—

1. அநுமதீயம். இது மாத்துவராகிய அநுமதாசாரியராலே செய்யப்பட்டது. இவர் கர்ணாடர். சற்றேறக்குறைய நூற்றுநாற்பது வருடத்துக்குமுன் தேகவியோகமெய்தினர். இவ்வநுமதீயம் ஆறாயிரங்கிரந்தமுடைத்து.

2. நீலகண்டீயம். இது பல்லாரியில் இருந்த தெலுங்கராகிய நீலகண்டசாத்திரியாராலே செய்யப்பட்டது. இவர் ஏறக்குறைய எழுபதுவருடத்துக்குமுன் காசியிலே தேகவியோகமெய்தினர். இந்நீலகண்டீயம் ஆயிரத்திருநூற்றைம்பது கிரந்தமுடைத்து. இதற்குத் தெலுங்கராகிய இராமபத்திரபட்டராலே இராமபத்திரீயம் என ஒருவியாக்கியானம் செய்யப்பட்டது.

3. தருக்கசங்கிரகத்துக்கு நிருத்தி செய்த பட்டாபிராம சாத்திரியாரும் தருக்கசங்கிரகதீபிகைக்கு ஒருவியாக்கியானம் செய்தனர்.

4. முகுந்தபட்டீயம். இது முகுந்தபட்டராலே செய்யப்பட்டது.

5. தீபிகாப்பிரகாசிகை. இது தமிழ்நாட்டில் இருந்த தெலுங்கராகிய நரசிங்கசாத்திரியாராலே செய்யப்பட்டது. இவர் சித்தாந்த முத்தாவலிக்குப் பிரபை எனப் பெயரிய ஒருவியாக்கியானம் செய்தனர். இவர் ஏறக்குறைய எண்பது வருடத்துக்கு முன்னே தேகவியோகமெய்தினர். பிரகாசிகை ஆறுயிரங் கிரந்தமுடைத்து.

௬. நியாயபோதினி. இது கௌடரும் தருக்கபாடாப் பிரகாசஞ்செய்தவருமாகிய கோவர்த்தன மிசிரராலே செய்யப்பட்டது. இது நானூறுகிரந்தமுடைத்து.

௭. நிருத்தி. இது தமிழ்நாட்டில் இருந்த தெலுங்கராகிய பட்டாபிராம சாத்திரியாராலே தமதுபுத்திரியின் பொருட்டுச் செய்யப்பட்டது. தருக்க சங்கிரகத்துக்குள்ள வியாக்கியானங்கள் எல்லாவற்றுள்ளும் இது மிக எளிதிலுணர்தற்பாலது. இவர் ஏறக்குறைய எழுபது வருடத்துக்கு முன்னே தேகவியோக மெய்தினர். இந்நிருத்தி அறுநூறு கிரந்தமுடைத்து.

௮. சித்தாந்த சந்திரோதயம். இது கிருஷ்ண தூர்ச்சடிதீக்ஷிதராலே செய்யப்பட்டது. தருக்கசங்கிரகத்துக்குரிய வியாக்கியானங்களுள் தருக்கசங்கிரகதீபிகை யொழித்தொழிந்த மற்றெல்லாவற்றினும் இது மிக அரிதினுணர்தற்பாலது. இது ஆயிரத்துமுந்நூறு கிரந்தமுடைத்து.

௯. தருக்கசங்கிரக சந்திரிகை. இது மகாராட்டிரராகிய முகுந்தபட்டராலே செய்யப்பட்டது. இது ஆயிரத்திருநூறு கிரந்தமுடைத்து.

மகாமகோபாத்தியாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலைய
அடையாறு, சென்னை-20.

௬. பதகிருத்தியம். இது கௌட க்ஷத்திரியராகிய சந்திரசசிங்கராலே செய்யப்பட்டது. இது கங்கைக்கரையிலுள்ள நாடுகளிலே கற்கப்படுகின்றது. இது ஆயிரங்கிரந்தமுடைத்து.

எ. தருக்கசங்கிரகோபநியாசம். இது மகாராட்டிர சந்நியாசியாகிய மேருசாத்திரியாரலே செய்யப்பட்டது. இது தார்க்கிகர்களாலே மிக நன்குமதிக்கப்படுகின்றது: இது ஐஞ்ஞூறு கிரந்தமுடைத்து.

தருக்கசங்கிரகமும், தருக்கசங்கிரகதீபிகை என்னும் வியாக்கியானமும், கைலாசபரம்பரைத் திருவாவடுதுறைச் சித்தாந்தபானுவாகிய நமச்சிவாயமூர்த்திகண்மரபில் சிவஞானசுவாமிகளாலே, தமிழின்மொழிபெயர்த் தருளப்பட்டன.

உ

கணபதி துணை.

அளவியல் என்னும்

# தருக்கவிளக்கம்

## பாயிரம்.

திருவருள் கூர்ந்து சிறப்பருள் யானை
யிருதாள் வாழ்த்தி யியல்பொடு வணங்குதும்
விரும்பு மளவியல் விளக்க மேலா
மருஞ்செந் தமிழி னுக்குதற் கினிதே. (௧)

தமிழ்மா முனிவரன் றாண்மலர் வணங்கி
யமிழ்தின் வைத்துளத் தன்பாற் றுதுமே. (௨)

அருஞ்செந் தமிழி னளவை பாடியம்
விரும்ப வருளி விருத்தி செய்த
பெருந்தவ முனிதாள் பேணிப் பணிவாம். (௩)

பலகா லாய்த்துப் பயிலற் குரித்தா
நிலவு நாலு ணிணையி னரிய
தளவை நாலை யணைய தின்றே (௪)

என்றா லெனினு மிலையுல கிறந்த
தெனினு முணர்தற் கெண்ணா லரிதால். (ரு)

உலகோர் வகையி னுறுவ தென்றுஞ்
சொலினுணர் வகையே துனும்வேற் றுமைதான்
விளங்க வுணர்வை விளக்குவ தெண்ணால். (சா)

ஓர்த்துய்த் துணர்த லொழியக் கேட்டன்
மாத்திரத் தெண்ணால் வராதுணர் தற்கே. (எ)

அறிவித் தாலன் றறிவுறா தெனினு
முயன்று பலகான் முன்பின் கூட்டிப்
பயிலல் விடாது பற்றற் பாற்றே. (அ)

ஒட்டி யுணரற் பாலதை யொட்டல்
விட்டு நோக்கல் விண்டுற வாங்காங்
குணர்ந்ததை மறந்த துணர்வா காது
நணுந்தடை போக்கி நாடிக் கொளலே. (கூ)

பெயரே தன்மை பிணிக்கு மியையே
யிவைமூன் றுணரி னெண்ணா லெளிதால். (க0)

இயல்போ டியல்பி யென்னு மிரண்டு
மியையக் கூட்டி யெண்ணு தொன்றை
யொழித்தொன் றுணரி னுணர்வுற லின்றால். (கக)

இனதோர் சொல்லோ டிச்சொற் புணரின்
மனுமர பான்வரை மாண்பொரு ளிதுவென்
றுணர்வ தின்றே லுறுபய னின்றே. (க௨)

உரையே கருவி யுணர்தற் கெனினு
மொருபொரு ளாழா துரையே நோக்கி
நிற்பி னுணர்ச்சி நிகழா தன்றே. (௧௩)

பொருளொன் றெனினும் பொருந்தடை புணர்த
லொருவ லிரண்டா னுள்ளுங் கருத்தின்
மருவும் வேற்றுமை மாண்புணர் வார்ப்பெறின். (௧௪)

ஒருமுறை முடிய வோதிப் பின்னர்ப்
பலகாற் சொல்லைப் பயனும் பொருளைப்
பிரித்துக் கூட்டிப் பேணிப் பயில்க
கருக வாயிற் கேட்டல் கடனும். (௧௫)

பயிலலின் விடாது பலகா லுழந்து
மயலற் றுணர்வுற வலநெறி யின்றே. (௧௬)

பயிலா நூலின் வழக்குப் படிமேனர்
மயலற வந்நூன் மரபா னறிக
முயன்று வருந்தி முட்டுறு தொழிக. (௧௭)

உய்த்தோர் நுண்பொரு ளுணர்ந்த தாவ
தெய்ப்பின் றெளியார்க் கினிது புலப்படத்
தப்பறக் காட்டித் தருவ தாகும். (௧௮)

தொல்காப் பியங்கீரன் சூழ்ந்த வுரைமுதலா
வெல்லுரைதாங் கல்லான் மிகுதமிழு - நல்ல
தருக்க மெழுத்தறியான் கல்வியுஞ் சாற்றிற்
பெருக்கம் பயனிலைபாழ் பின் (௧௯)

சுட்டடிச் சொல்லே சூழற் பாற்றே. (௨௦)

தன்கோள் பிறன்கோள் சார்ந்து வருவதி
னின்ன திஃதென வெண்ணினர் கொளலே. (௨௧)

இன்மை யுணர்ச்சி யெதிர்மறை யுணர்ச்சி
யன்றிப் பிறப்ப தாயி னின்றால். (௨௨)

ஒருநிக ரனவா யுறுபல பொருளிற்
சார்பொதுத் தன்மை சாதி யாமல். (௨௩)

வரைந்து கோடல் வரம்புட் படுத்தல்
பார்க்கின் வேறு படுப்பது மாகும். (௨௪)

தடையுடை மையினாற் சாதி யாகா
தடைவுறு தன்மை யுபாதி யாமால். (௨௫)

கணமொன் றிரண்டு கழியக் குணமுறும்
வினைகண நான்கின் மேனில் லாதால். (௨௬)

பொருள்குணந் தொழிற்குப் புகன்முதற் காரணந்
தெரிபொரு ளென்னச் செப்பு நாலே. (௨௭

அறியப் படுவ தாம்புலன் விடயம். (௨௮)

புணர்தல் வடிவுடைப் பொருள்யா வையினு
நினையின் மேலிடு நிறைவென் வியாபகம். (௨௯)

கூறுவ தொன்றிற் குற்றம் வரினே
தேறடை கொடுத்துத் தீர்ப்பது மரபே. (௩௦)

பிறிதோ ராற்றாற் பெறப்படு வதுதா
னினதின் முன்னே யினது நிற்ப
தென்பது நேரே யெய்தப் படாது
பிறிதொன் றானே பெறப்படு வதுபிற. (௩௧)

ஓர்வினை நிகழ்வ துறுசெயல் காரியம்
பேர்வற முற்றுப் பெறுவ தென்ப. (௩௨)

மருவு மொன்றை வருதடை போக்கி
வரையறுத் தினிது மாண விளக்கப்
புணர்க்கப் படுவது போற்றடை விசேடண
முணர்ச்சி வகையன் றுணர வராதது. (௩௩)

அடையோ டியைபில் லாமை நீக்குவ
திடுபிறி தடையோ டியைபு நீக்குவ
தென்றடை யிரண்டா மியலு மென்ப. (௩௪)

உணர்வெனப் படுவ துயிருளங் கொண்டு
புணரப் பொருளைப் பொருந்துவ தொன்றா
லுணர்ந்தது மீள வுணரப் பட்டாங்
குணர்வும் புலனை வுணரப் படுமேன்
முன்னிக ழுணர்வே மொழிபின் னுணர்வென்
றிருதிற னாகு மேய்ந்தது கவர்ந்து
கருவி யாதலுங் கண்டனர் கொளலே. (௩௫)

பின்னிக ழுணர்வென் பதுதான் பேசின்
முன்னிக ழுணர்வே மொழிபதன் புலனே

மன்னுந் தன்மை மருவுங் கிழமை
யென்னு நான்கு மன்னுங் காட்சி
யுணர்வா யுளத்தி னுறுவது தானே. (௩௬)

அநுப லத்தி யாயிற் காட்சி
யின்மை யென்னு மெதிர்மறைப் பொருளி
னுண்மையி னுணர்வாங் குறுமை யென்ப. (௩௭)

ஒன்றின் மிடைந்த நிறைவு வியாப்பிய
மின்றி யமைமடா தீண்டுட னிகழ்ச்சி
யொன்றும் வியாத்தி வியாப்பிய முரைப்பின்
முன்னுற மொழிதன் முறைமை யென்ப. (௩௮)

தன்மை யுடைய தனைத்து முள்ளுறத்
தன்மையின் வைத்துச் சாற்றுதன் மரபே. (௩௯)

துணிபொருள் கணிற்குத் தோன்றிப் புலப்படத்
துனப்பெறல் பெறுதி துணிதல் வேட்கை
புணர்வ தல்லதைப் பொருத்துறு விருப்பம். (௪0)

துணிபொருட் பெறுதியிற் றுணிதல் வேட்கை
புணரும் பக்கத் திலக்கணம் போக்கும்
வினையுள தாகலின் விலக்கற் பாற்றே. (௪௧)

என்று மின்மைக் காகா ததிர்மறை
யின்றி யாங்கமை. யாமை யெனப்படு
மன்றி விட்டக லாமையு மாகும். (௪௨)

சேற லின்றிச் செறியோர் முறையின்
மாறு கொளத்தான் வருவது பிறழ்ச்சி. (சங)

ஒன்றுந் துணிபொரு ளொருவா தெனலா
னின்றித் துணிபொரு ளிருப்பதன் றேது
வென்பது தன்னு னின்றிப் பிறழ்ச்சி
யொன்றுட னிகழ்ச்சி யின்றி யமையா
தென்ப தெய்தலி னஃதடை யெனப்படும். (சச)

ஒன்றிற் றொன்றி யதனிற் றொன்றற்
பாலதைத் தோன்றப் பண்ணுவ தாகி
மேவுவ திடையின் வியாபா ரம்மே (சரு)

இன்றி யமையா நீண்டட னிகழ்ச்சி
யொன்று மறையா னுறுவ துணரின்
மிடைவத னின்மையை விட்டொரு வாது
மிகுவத னின்மை மேவுவ தாகும். (சசா)

அதுபிறி தாகா ததுவே யாதற்
குறுமொரு தன்மை வடிவாந் தன்மை
யொன்றி னுறுவ தாவ தொன்றால். (சஎ)

இல்வழித் துணிபொரு ளிராத வேது
வுள்வழித் துணிபொரு ளுள்ள தாவது
சொல்லடை யடுத்த வியாத்தி யென்ப. (சஅ)

உடனுறப் பலசேர்ந் தொருநிலைக் களந்தா
னிடனென் றேயா யிருப்ப தொன்றும். (சகூ)

எதிர்மறை யாயொன் றேயுங் காலை
யெய்துந் தன்மை யெதிர்மறைத் தன்மை. (௫0)

இன்மை பலவகை யியைதற் கெதிர்மறை
யொன்றே யாதலு முறவரை வதுதான்
படைத்து மொழியப் படுவ தாதலு
மின்றி யமையா வெண்ணுங் காலே. (௫க)

மன்ற வாணனை மனத்திடை நிறுவிவண் டுறைசை
வென்றசீர் நமச்சி வாயமெய்க் குரவனை வணங்கி
யென்றனைப் பொரூஉ மிளையவர்க் கினிதுணர் வுதிப்பத்
தென்றமிழ்ச் சொலாற் செயப்படுந் தருக்கசங் கிரகம்.

மலைமகண் மணந்த வுலகினுக் கிறையவன்
கலைமக ளாசான் கான்மலர் வணங்கிக்
கிளர் பொருட் டருக்கசங் கிரக
மிளையோ ருளங்கொள வியம்புவ னுரையே.

எடுத்துக்கொண்ட நூல் இடையூறின்றி இனிது முடிதற்பொருட்டுச் செயற்பாலதென ஆன்றோரொழுக்கத்தான் அனுமிக்கப்படும் சுருதியின் விதிக்கப்பட்ட வழிபடுகடவுள் வணக்கமாகியமங்கலம் மாணாக்கர்க்கு அறிவுறுத்தற் பொருட்டு யாப்பினுல் யாத்து, அதனான் முடிபெய்தும் பொருள் உணர்த்துகின்றார். அற்றாக, மங்கலம் இனிதுமுடிதற்குக் காரணமன்று, மங்கலங்கூறியவழியும் நன்னூல் முதலியவற்றின் முடிவுகாணாமையின், மங்கலங் கூறாத வழியும்தொல்காப்பிய முதலியவற்றின் முடிவு காண்டலின்,உடன் பாட்டினும் எதிர்மறையினும் நியமந்தப்புதலின் எனின்;—நன்று

சொன்னாய்; நன்னூல் முதலியவற்றின் இடையூற்றின் மிகுதிப் பாட்டான் முடிவுபேறின்று, தொல்காப்பிய முதலியவற்றின் நூற்குப் புறமாகவே மங்கலஞ் செயப்பட்டதாகலின். நியமந் தப்பியதுயாண்டையதென்க. அற்றேல், மங்கலஞ் செயற்பாலதென்பதற்குப்பிரமாணம் என்னையெனின்;—ஆன்றோரொழுக்கத்தான் உண்டென்று அனுமிக்கப்படுஞ் சுருதியே பிரமாணமென்க. ஈண்டனுமானமாமாறு,—'மங்கலஞ் செயற்பாலதென வேதத்தின் விதிக்கப்பட்டது, உலகநடையும் பழிப்புமல்லாத ஆன்றோரொழுக்கமாகலின், வேள்வி முதலியனபோல' எனக்காண்க. உண்டி முதலியவற்றிற் சேறலை நீக்குதற்கு 'உலக நடையல்லாத' என்றும், இரவின் கட்டென்புலத்தார்கடனேம்பல் முதலியவற்றிற் சேறலை நீக்குதற்குப் 'பழிப்பல்லாத' என்றும், கூறப்பட்டது. பயனில செய்யற்கவென, நீரடித்தல் துரும்புகிள்ளுதல் முதலியவையும், பழிக்கப்படுதலின், 'உலகநடையும் பழிப்புமல்லாத ஒழுக்கம்' எனவே அமைதலின், 'ஆன்றோர்' என்றது விளங்குதற்பொருட்டு. 'ஒழுக்கம்' ஆசரித்துவருதல்.

* விதிக்கப்பட்ட மங்கலஞ் செயற்பாலதென அறிவுறுத்தற்பொருட்டு என இயைத்துக்கொண்டுணர்க. அறிவுறுத்தல் - தெரிவித்தல். அனுமித்தல் - ஆராய்ந்து துணிதல். தப்புதலின், காரணமன்று என ஒட்டுக. உடன்பாடாவது கூறியவழியும் முடிவுகாணுமை என்பது, எதிர்மறையாவது கூறாத வழியும் முடிவுகாண்டல் என்றது என்க. அனுமிக்கப்படுஞ் சுருதிஎன்றது சுருதிமுழுவதும் இக்காலத்தின்மையான். நியமம்—முறை. சேறல்—செல்லல். அஃதே முன்னர் வரும் அதிவியாத்தி எனப்படுவது என்க. இரவு—இரா.

இதன்பொருள் வெளிப்படை. 'திறவுதல்' நிலைபெறுத்துதல். 'வென்ற' மேம்பட்ட. இளையோராவார் கோடலும் உள்ளத்தமைத்தலும் வல்லுநர், குழவிப்பருவத்தரல்ல ரென்பதாம். 'இனிதுதித்தல்' வருத்தமின்றி யுதித்தல். 'உணர்வு' பதார்த்தஞானம். 'தருக்கம்' தருக்கித்துத் தெரிக்கப்பட்டன: அவை திரவியமுதலிய பதார்த்தங்கள். 'சங்கிரகம்' அவற்றைச சுருக்கிக்கூறுதல். தருக்கநூல்கள் பலவுண்மையின் ஈண்டுப் புதிதாகத் தருக்கநூல் கூறுவதெற்றுக்கென்னு மாசங்கை நீக்குதற்கு, அந்நூல்கள் விரிவுடைமையின், அவை அறிவான் முதிர்ந்தோர்க்கேயாமென்பார் இஃது 'இளையவர்க்கு' என்றும், இந்நூற்பயன் கூறுவார் 'இனிதுணர்வுதிப்ப' என்றுங் கூறினர்.

* தருக்கித்தல்—ஆய்தல்; எண்ணல். ஆசங்கை—ஐயம்.

பாயிரமுற்றிற்று.

உ

கணபதி துணை.

### அளவியல் என்னும்

# தருக்கவிளக்கம்.

## பதார்த்தம்.

க. பொருள்குணங் கருமம் பொதுச்சிறப் பொற்றுமை
யின்மை யுடன்பொரு ளேழென மொழிப.

(இதன்பொருள்.) திரவியம், குணம், கருமம், சாமானியம், விசேடம்,சமவாயம் அபாவம் எனப் பதார்த்தங்கள் ஏழுஎன்றவாறு.

திரவியம் - பொருள். குணம் - பண்பு. கருமம் - தொழில். சாமானியம் - பொதுமை. விசேடம் - சிறப்பு. சமவாயம் - ஒற்றுமைச்சம்பந்தம். அபாவம் - இன்மை.

திரவியம், குணம் என்பது பதார்த்தங்களைப் பகுக்கின்றது. பதப்பொருள் பதத்துக்குப்பொருளெனவிரிதலின், பதத்தாற் பெயரிட்டு வழங்கற்பாலதாந்தன்மை பதார்த்தத்துக்குப் பொதுவிலக்கணமாதல் கூறப்பட்டது. அற்றேல் அஃதாக, திரவியமுதலாகப் பகுத்தசெவ்வெண்ணால் ஏழென்னுந்தொகை தானே பெறப்படுதலின், ஏழென்றல் பயனில்கூற்றாமெனின்;—அற்றன்று, அது பகுத்தவற்றின்மேற் பதார்த்தமில்லையென்னும் பொருட்டாகலின். அற்றேல், மேற்பதார்த்தம் அளவையானளக்கப்படும் பொருளா

யின் விலக்குதல்கூடாது, அன்றாயிற் பிரதியோகியுணர்ச்சியின்றி அபாவவுணர்ச்சி பெறப்படாமையின் விலக்கியதனாற்பயன் என்னை யெனின்;—அற்றன்று, தொகைகொடாதொழியிற் பதார்த்தத்தன்மை திரவிய முதலிய ஏழனுள் ஒன்றன்கண் வியாப்பியமாகாதெனவும் பொருள்படுமன்றே, அது நீக்குதற்பொருட்டு ஏழெனல்வேண்டுமென்க. மேலும் இவ்வாறே காண்க. தத்தமபாவத்திற்குத் தாந்தாம் பிரதியோகியாகிய தத்தமுணர்ச்சி பெற்றாலன்றித் தத்தமபாவவுணர்ச்சி பெறப்படாதென்பது தருக்கநூற்றுணிவு.

* பதார்த்தம்-பெயர்ப்பொருள், பொருளெனவும்படும்.

* பதார்த்தம், பொருளெனப்படுதல், பதார்த்தம் பொருளாயின் என்றற் றொடக்கத்தனவற்றான் உணர்க.

*செவ்வெண்—எண்ணிடைச்சொலின்றிஎண்ணிநிற்குஞ்சொற்றொடர். பொருட்டு - பொருளது. மேல்-ஏழின்மேல். மேற்பதார்த்தமில்லை என்றதற்கு வியாப்பியமாகாததில்லை என்பது கருத்து என்றது, வரையறைப்படுவது வகையல்லது பதார்த்தம் இனைத்தென அளவுபடுவதன்மையான். அன்றாயின் - பொருளன்றாயின். பிரதியோகி - எதிர்மறை. வியாப்பியமாதல் - அடங்குதல். மேலும் இவ்வாறே காண்க என்பது முன்னர்வருந் தொகைகட்கும் இவ்வாறே கொள்க என்றவாறு.

உ. மண்புன லனல்கால் வெளிபொழு தாசை
யான்மா மனதோ டொன்பதும் பொருளே.

(இ - ள்) அவற்றுள், திரவியம் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், காலம், திக்கு, ஆன்மா, மனம் என ஒன்பதுவகைத்து (எ - று.)

அவற்றுள், திரவியம் எ - து. திரவியத்தைப் பகுக்கின்றது. 'அவற்றுள்' என்பது திரவியமுதலிய எழுனுளென்றவாறு. திரவியம் ஒன்பதுவகைத்தெனக் கூட்டுக. 'பிருதிவி' என்பது அவை இவை யென்கின்றது. அற்றேல், இருள் பத்தாந்திரவியமாதலுண்மை யால், திரவியம் ஒன்பதென்பதென்னை? அது திரவியமாதல், 'இருள் கருவடிவிற்று, இயங்குகின்றது' என்னும் வாதையில்லாத உணர்ச்சி வலியாற் கருமைப்பண்பிற்கும் இயங்குதற்றொழிற்கும் பற்றுக்கோ டாதலுண்மையின், பெறப்பட்டது; அது, வடிவுடைமையின் ஆகாய முதலிய ஐந்தனுள்ளும், உருவுடைமையானும் இடையறுதியங்கா மையானும் வாயுவினும், ஒளிவடிவிற்றன்மையானும் வெம்மையின் மையானும் தேயுவினும், குளிர்ச்சியின்மையானும் கருவடிவிற்றாக லானும் நீரினும், நாற்றமுடையதன்மையானும் பரிசமின்மையா னும் நிலத்தினும், அடங்குவதன்றாகலின், இருள் பத்தாந்திரவிய மென்பது பெறப்படுமாலோவெனின்;— அற்றன்று, இருள் வடி வுடைப்பொருளன்று, ஒளியோடுங்கூடாத விழியாற் கவரப்படுத லின், ஆலோகத்தினபாவம்போலும்; வடிவுடைப்பொருள் விழி யாற்கவர்தற்கு ஒளியே காரணமெனக்கருதப்படுதலின், பேரொளி யுடைய தேயுப்பொதுமையின் அபாவமே இருளென்பது பெறப் படுதலினென்க. 'இருள் ஆண்டியங்குகின்றது, கருவடிவிற்று' என் னும் உணர்ச்சி மயக்கத்தாற்றோன்றியதேயாம்: ஆதலிற் பொருள் ஒன்பதேயென்பது பெற்றாம்.

*அவை - ஒன்பது திரவியம். வாதை - தடை, தகுதியின்மை. அடங்குவதன்று என்றதை, ஐந்தனுள்ளும் என்றற்றொடக்கத்தன வற்றொடு தனித்தனிக் கூட்டுக. ஆலோகம் - பேரொளி.

*அற்றன்று, பெறப்படுதலின் எனவும், இருள் அபாவம்போலு மெனவும், கருதப்படுதலின் அபாவமே இருள் எனவும், கூட்டிக்

கொண்டுணர்க. விழியாற்கவர்தற்கு ஒளியே காரணம் என்பது மேல் ஆலோகத்தின் அபாவம்போலும் என்றதை வலியுறுத்திய வாறு. அஃதேல் இஃது என்சொல்லியவாறோ எனின், வடிவுடைப் பொருள் விழியாற்கவர்தற்கு ஒளியேகாரணம் என்பதற்கு மாறுபட, இருள் ஒளியொடுங்கூடாத விழியாற் கவரப்படுதலின் ஒளியினதபாவமே இருள் அல்லது வடிவுடைப்பொருளன்று எனக் கூறியவாறு.

1. ஈண்டியல் புள்யா தெனினுங் குற்ற
மூன்று மின்றி மொழியு மிலக்கியத்
தன்மை வரைந்து தான்கொள் வதனோ
டின்றி யமையா தொப்ப விருப்ப
தறையு மிலக்கண மாயி னதுதான்
வேறு படுத்தல் விளங்க வழங்கற்
கேது வாய்நின் றிருவகைத் தென்ப.

(இ - ள்.) பொருண்மைச் சாதியுடைமையாதல் குணமுடைமையாதல்பொருட்கு இலக்கணமெனக்கொள்க. இலக்கணம் அவ்வியாத்தி, அதிவியாத்தி, அசம்பவம் என்னும் முக்குற்றங்களும் நீங்கிய தன்மை. அதுவே சிறப்பியல்பென்றுரைக்கப்படும். சிறப்பு இலக்கியததன்மையை வரைந்துகொள்வதனோடு நியதமாய் ஒப்ப நிற்பது. பிறவற்றினின்றும் வேறுபடுப்பதே இலக்கணமெனக் கொள்ளின், வேறுபடுத்தலினும் அபிதேயத்தன்மை முதலியவற்றினும் அதிவியாத்தி நீக்குதற்கு அதின்வேறாயவென இயல்பிற்கு அடைகொடுக்கற்பாற்று. அபிதேயம் - பெயரிட்டுவழங்கற்பாலதாந் தன்மை. வழங்குவதூஉம்இலக்கணத்திற்குப் பயனாகக்கொள்ளின், அவ்வடை வேண்டாவென்றுணர்க, வேறுபடுத்தலும் வழங்குதற்

பொருட்டேயாகலின் எனக்கொள்க. அவ்வியாத்தி இலக்கியத்தி னேகதேசத்தின் இலக்கணமில்லாமை: அது 'ஆவிற்குக்கபிலநிறத் தன்மை.' அதிவியாத்தி இலக்கியமல்லாததன்கண்ணுமிருப்பது: அது 'ஆவிற்குக்கோடுடைமை'. அசம்பவம் இலக்கியமுழுதினுமின் மை: அது 'ஆவிற்கு ஒற்றைக்குளம்புடைமை' என்க. குணமுடைமை திரவியத்திற் கிலக்கணமென்றல்பொருந்தாது. முதற்கணத்திற்றோ ன்றி அழிவுபடுங்குடத்திலே அவ்வியாத்திக்குற்றம் வருமாலோவெ னின்;—அற்றன்று. குணத்தோடொருங்கு நிற்பதாய்உண்மைத்தன் மையின்வேறாய சாதியுடைமை என்பது கருத்தாகலின்என்க. அற் றேல், 'உருவமொன்று சுவையின்வேறு' என்னும்வழக்குண்மையின், உருவமுதலியவற்றின் அதிவியாத்தி வருமாலோவெனின்;—அற்ற ன்று, ஒருபொருளோடு ஒற்றித்துநிற்றலால் அதுபற்றியே அவ்வாறு வழங்குவதல்லது பண்பிற்குப் பண்புகோடல் பொருந்தாமையின்.

* இனிப்பொருட்கு இலக்கணங் கூறுமுகத்தானே இலக்கணத் திற் கிலக்கணங்கூறிய தொடங்கிற்று. பொருட்கிலக்கணமாவது இயல்பினனவும், அதன் இலக்கணம் இயல்புளனவுங் கோடற்பாற்று. பொருண்மைச்சாதி, பொருண்மையாகிய சாதியெனவிரியும். பொ ருண்மை - பொருளாதற்றன்மை. அஃதாவது மண்முதலிய திரவி யம் ஒன்பதினும் ஒப்பநிற்பதோர்பொதுத்தன்மை. அஃதோர்சாதி எனப்படும். பாயிரத்துக்காண்க. குணம்—நாற்றம் உருவமுதலியன. உடைமை—உடைத்தாதற்றன்மை. பொருண்மைச்சாதி என்பது பொருட்கு இலக்கணம்ஒருதலையான்வேண்டற்பாற்று என்றவாறு. பொருளை வேறுபடுத்துணர்தற்கும் எடுத்தாளுதற்கும் இலக்கணம் ஏதுவாகலான் என்க. இதன்பொருட்டு எனப்படும்பயன் இன்றா யின் இலக்கணமும் இன்றாகல்வேண்டும்என்பது.

*அச்சிறப்பியல்பினுள் ஒன்றாய 'பிறவற்றினின்றும் வேறுபடுப் பதே' எனத்தந்துரைக்க. வேறுபடுத்தலினும் அபிதேயத்தன்மை

முதலியவற்றினும் அதிவியாத்திவரும். என்னை? வேறுபடுப்பதாய இயல்பு, இலக்கியத்தன்மையைவரைந்து கொள்வதனோடு நியதமாய் ஒப்பநிற்பதுபோல, வேறுபடுத்தற்றன்மை முதலியவும் இலக்கியத்தன்மையை வரைந்து கொள்வதனோடு நியதமாய் ஒப்பநிற்பனவே யாகலான்.

* வேறுபடுத்தலை விதந்துபிரித்துக்கூறியது அதுநவீனமதத்தில் வேறுபடுப்பதாகவும் பிராசீனமதத்தில் வழங்குதற் பயத்ததாகவும் கொள்ளப்படும் என்பது தெரித்தற்பொருட்டு. வேறுபடுத்தல், வேறுபடுப்பதை நோக்க இலக்கணத்திற்குப் பயனும், வழங்குவதை நோக்க இலக்கணமாகவும், வழங்குவது பயனுக்குப் பயனாகவும் கருதக்கிடத்தல் காண்க. வேறுபடுத்தல் இயல்பு, வேறுபடுப்பது இயல்பி. இயல்புஎனினும், தருமம்எனினும், தன்மைஎனினும் ஒக்கும். இயல்பி, தருமிஎன்பன ஒருபொருட்கிளவி. பண்பிற்குப்பண்பு இன்று எனவும் தருமத்திற்குத் தருமம் உண்டெனவும் கொள்ளப்படும். அதின்வேறாய - வேறுபடுத்தலின்வேறாய. வேறாய, என அடைகொடுக்கற்பாற்று என்பது வேறாயஇயல்பு, வேறுபடுத்தற் பொருட்டேயாகலின், வேற்றியல்பாய வேறுபடுப்பதே இலக்கணம், அல்லன இலக்கணமல்ல எனக்கோடற்பாற்று என்றவாறு. வழங்குவதூஉம் இலக்கணத்திற்குப் பயனாகக்கொள்ளின் எனவே அஃது இலக்கணம்பயனுடைத்தென்றற்கும், அப்பயன்றான் வழங்குதல், வேறுபடுத்தல் என இருவகைத் தென்றற்கும் ஞாபகமாவதுணர்க. ஞாபகம் - அறிவிப்பது.

* அவ்வடைவேண்டாஎன்பதுவழங்குவதூஉம்இலக்கணத்திற்குப் பயனாகக்கொள்ளின், வேறுபடுத்தலும் வழங்குதற்பொருட்டே யாகலின், வேறுபடுத்தற்றன்மையும் இலக்கணம் எனவே கோடற்பாற்றுஎன்றவாறு. பிறவற்றிற்கும் இஃதொக்கும். எனவே எவ்வியல்

பாயினுமாக வேறுபடுத்தலாதல், வழங்குதலாதல் ஓர்பயனுடைத்தாய், இலக்கியத்தன்மையை வரைந்து கொள்வதனொடு நியதமாய் ஒப்பநிற்பதே இலக்கணம் என்பதூஉம், அவ்வாறு நின்று இலக்கணமாகும் இயல்புகளுள் ஒன்றைவிலக்கி ஒன்றைக்கோடல் பொருந்தாது என்பதூஉம் இதனாற்போந்த பயனாதல் காண்க.

*குணமுடைமை திரவியத்திற் கிலக்கணம் என்றதற்குக் கருத்து என இயையும். அழிவுபடுங்குடத்திலே அவ்வியாத்திக்குற்றம் தங்கும், ஆண்டுக்குணம் வாராமையின். திரவியந்தோன்றி ஒன்றிரண்டு கணமானபின்பன்றி அதன்கட் குணம் வாராதென்பது தருக்கநூற்றுணிவு. பாயிரத்துக்காண்க.

*திரவியத்தன்மை என்றது அடைகொடுத்துச் சாதி என்றது இலக்கணமும் இலக்கியத்தன்மையும் ஒன்றாகாமை தெரித்தற்பொருட்டு. இலக்கியத்தன்மையாவது இலக்கணத்தான் வரைந்து கொள்ளப்படும் தன்மை என்பது.

*உண்மைத்தன்மையின் வேறாய என்றொழியாது குணத்தோடொருங்குநிற்பதாய் என்றது உண்மைத்தன்மையின் வேறாய சாதிக்குக் குணகருமங்களின் அதிவியாத்தி வாராமற்பொருட்டு. நிற்பதாய் வேறாய என ஒட்டுக.

*கூறியதொன்றன்கட் குற்றம்வரின்அடைகொடுத்தலாற் பரிகரித்தன் மரபாமாறு பிறாண்டும் வருவதுகாண்க. பாயிரம்பார்க்க.

*கருத்தெனவே, தோன்றியபொழுதே யழிவுபடுவதன்கண் குணமின்றேனும் குற்றமின்று, ஆண்டுள்ள சாதிகுணத்தோடொருங்கு நிற்பதாவதே சாலுமாகலான்.

*குணந் தானுள்வழி இலக்கணமாவதாவது குணத்திற்குத் திரவியம் இடனாதற்றன்மை.

*உருவமுதலியவற்றின்கண் திரவியத்தின் குணமுடைமையாய இலக்கணத்திற்கு அதிவியாத்திவரும் என்றது, வழக்குண்மையின், ஒன்றுமுதலிய குணமுடையனபோலத் தோன்றலின், உருவமுதலியன, ஒன்றுமுதலியகுணத்தோடு ஒருங்குநிற்பதாயும், உண்மைத் தன்மையின் வேறாயும், உள்ளசாதியை யுடையனவாகலான். ஒருபொருளொடு ஒற்றித்து நிற்றலாவது ஒன்றுமுதலியவும் உருவமுதலியவும் ஒருதிரவியத்தின்கண் ஒன்றுபட்டு நிற்றல் என்பது. ஒற்றித்து, சமவேதித்து, ஒன்றுபட்டு என்பன ஒருபொருட்பன் மொழி.

௩. வடிவஞ் சுவையிரு நாற்ற மூறெண்
ணளவு வேற்றுமை புணர்ச்சி பிரிவு
முன்மை பின்மை திண்மை நெகிழ்ச்சி
சிக்கென லோசை யுணர்ச்சி யின்பந்
துன்பம் விருப்பம் வெறுப்பு முயற்சி
யறமறம் வாதனையொடு குணமறு நான்கே.

(இ - ள்.) குணம் உருவம், இரதம், கந்தம், பரிசம், சங்கை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், குருத்துவம், திரவத்துவம், சிநேகம், சத்தம், புத்தி, சுகம், துக்கம், இச்சை, வெறுப்பு, முயற்சி, தர்மம், அதர்மம், வாசனை என இருபத்துநான்கு வகைத்து. (எ - று.) சிக்கெனல் - சிநேகம்.

குணம். எ - து. குணங்களைப் பகுக்கின்றது. குணமாவது திரவியம் கருமம் என்னுமிரண்டற்கும் வேறாய்ப் பொதுவியல்புடையது, குணத்தன்மையாகிய சாதியுடையதெனினுமாம். அற்றேல், எண்மை, மென்மை, வன்மைமுதலியனவும் உண்மையின், குணம்

இருபத்துநான்கென்றதென்னையெனின்;— அற்றன்று, திண்மையின் அபாவமே எண்மையாகலானும், அவயவக்கூட்டவிசேடமே மென்மைவன்மைக ளாகலானு மென்க.

ச. எழும்பல் விழுதல் வளைத னிமிர்த
னடத்த லுடனே கருமமைம் வகைத்தே

(இ - ள்.) கருமம் எழும்பல், வீழ்தல், வளைதல், நிமிர்தல், நடத்தல் என ஐவகைத்து. (எ-று.)

கருமம். எ-து. கருமத்தைப பகுக்கின்றது. கருமமாவது சையோகத்தின் வேறாய்ச் சையோகத்திற்கு அசமவாயிகாரணமாயுள்ளது, கருமத்தன்மையாகிய சாதியுடையதெனினுமாம். சுழற்சி முதலியன நடத்தலின் அடங்குமாகலின், ஐந்தென்றல் பொருந்துமாறுணர்க.

*சையோகத்தின் வேறாய் என்றது,சையோகமுஞ் சையோகத்திற்கு அசமவாயிகாரணமாகலின், அதன்கண் அதிவியாத்தி வாராமற்பொருட்டு. அசமவாயி, இதனைக்காரணங்கூறுழிக் காண்க.

ரு. பொதுமை மேல்கீ ழெனவிரு வகையே.

(இ - ள்.) சாமானியம் பரம், அபரம் என இருவகைத்து.

சாமானியம். எ-து. சாமானியத்தைப் பகுக்கின்றது. மிகுதியினிருப்பது பரசாதி. குறைவினிருப்பது அபரசாதி. சாமானியம் முதலிய நான்கினுஞ் சாதியின்று.

சா. மன்னிய பொருளின் கண்ணவா யவற்றின்
வேற்றுமை தெரிப்பன பலவாஞ் சிறப்பே.

(இ - ள்.) விசேடம் நித்தியப்பொருள்களினிருப்பன. அவை எண்ணிறந்தனவேயாம். (எ-று.)

விசேடம். எ-து. விசேடத்தைப் பகுக்கின்றது. நித்தியப்பொருள்களாவன பிருதிவிமுதலிய நான்கின் பரமாணுக்களும், ஆகாய முதலிய ஐந்துமாம்.

எ. ஒற்றுமை யாப்பஃ தொன்றே யென்க.

(இ - ள்.) சமவாயம் ஒன்றுதானே. (எ-று.)

சமவாயம். எ-து. சமவாயத்திற்கு வேறுபாடு இல்லை யென்கின்றது.

அ. முன்னின்மை பின்னின்மை முற்று மின்மை
பொன்றினொன் றின்மையென் றின்மை நான்கே.

(இ - ள்.) அபாவம் முன்னபாவம், அழிவுபாட்டபாவம், முழுதுமபாவம், ஒன்றினொன்றபாவம் என நான்குவகைத்து. (எ-று.)

அபாவம். எ-து. அபாவத்தைப் பகுக்கின்றது.

---

## க. திரவியம்.

கூ. மண்ணீ ரனல்கான் முறையே நாற்றந்
தட்பம் வெப்ப மூற்ற மாகி
மெய்ப்பொரு ளழிபொருண் மேவு மென்க.

அணுக்கண் மெய்ப்பொருள் காரிய மழிபொருள்
பிருதிவிநித்திய வநித்திய வணம் பெறும்
நிலையணுப் பொருணிலை யில்லது காரியம்
அதுவே:—

உடல்பொறி விடய மூவகைப் படுமே
நம்மனோர் யாக்கை மண்கூற் றுடம்பு
நாற்றங் கவர்வது நாசியி னுனியே
மண்கல் முதலிய விடய மாகும்.

(இ - ள்.) இனி இவற்றினியல்பாவன:—

பிருதிவியாவது நாற்றமுடையது. அது நித்தம்,அநித்தம் என இருவகைத்து. நித்தம் பரமாணுரூபம்;அநித்தம் காரியரூபம். மறித்தும், சரீர இந்திரிய விடயவேறுபாட்டால் மூவகைப்படும். சரீரம் நம்மனோர்க்குள்ளது. இந்திரியம் கிராணம்; நாற்றத்தைக் கவர்வது. அது நாசிநுனியில் இருப்பது. விடயம் மண், கல் முதலியனவாம்.

பிருதிவியாவது. எ - து. உத்தேசமுறையானே முதற்கட் பிருதிவியினிலக்கணங் கூறுகின்றது. உத்தேசம் பெயர்மாத்திரையானே பொருளை எடுத்துரைத்தல். யாண்டும் உத்தேசமுறைமைக்கு இச்சையே காரணம். நாற்றமுடைமை பிருதிவியினிலக்கணமாயின், நறுநாற்றப்பொருளும் தீநாற்றப்பொருளுமாகிய அவயவங்களான் ஆக்கப்படுந்திரவியத்தின் ஒன்றுக்கொன்றுமாறுபாட்டால் நாற்றமுண்டாகாமையின், அவ்வியாத்திக்குற்றந் தங்கும்: ஆண்டு நாற்றத்தோற்றம் பொருந்தாதென்னற்க, அவயவநாற்றம் புலப்படுதலின், அவ்விரண்டன் கூட்டத்தாலுய கலப்புநாற்றமொன்றெனக் கோடல் பொருந்தாமையின்; இன்னும், தோன்றிய பொழுதே அழிவுபடுங்குடத்தினும் அவ்வியாத்தி வருமாலெனின்;— அற்றன்று, நாற்றத்தோடு ஒருங்கிருக்கும் பொருண்மைக்கு அபரமான சாதியுடைமையென்பதே கருத்தாகலின். அற்றேல், நீர்முதலியவற்றின் நாற்றம் புலப்படுதலின் அதிவியாத்தி வருமாலோவெனின்;—அற்றன்று, உடன்பாட்டானும் எதிர்மறையானும் ஆண்

டுப் பிருதிவிநாற்றமே கொள்ளக்கிடத்தலின். அற்றாயினும், காலம் எல்லாவற்றிற்கும் பற்றுக்கோடாகலின் எல்லாவிலக்கணங்கட்குங் காலத்தின்கண் அதிவியாத்தி வருமாலோவெனின்;—அற்றன்று, எல்லாவற்றிற்கும் பற்றுக்கோடாதற்கேதுவாய சம்பந்தத்திற்கு வேறாய சம்பந்தத்தானே இலக்கணத்திற்குரிமை கோடலின்.

*உத்தேசம் உபதேசமுறையின் ஒன்று. அதனை, வேதாந்த நூலெலாம் விளங்க நன்குணர்த்தும் வேதாந்தசூளாமணியெனு நூலின், "அனையவனததிகாரம்" "அறியவுணர்த்துறு" என்னும் செய்யுட்களிற் காண்க.

*உத்தேசமுறை "மண்புனலனல்கால்வெளி" என்னுஞ் சூத்திரத்தின்கட் பெறப்படும் நிறுத்தமுறை என்க.

*ஒருஙகிருககும் சாதியென ஒட்டுக. பொருண்மை, ஈண்டுத் திரவியத் தன்மை.

*உடன்பாட்டாற் கொள்ளக்கிடத்தலாவது, யாண்டு நாற்றமுண்டு ஆண்டுப்பிருதிவி யுண்டு என்பது.

*எதிர்மறையாற் கொள்ளக்கிடத்தலாவது,யாண்டுப் பிருதிவியின்று ஆண்டுநாற்ற மின்று என்பது என்க.

*உரிமை-பற்றுக்கோடாதற்குத் தகுதி, ஏதுவாந்தன்மை, ஏற்புடைமை.

அது நித்தம். எ - து. பிருதிவியைப் பகுக்கின்றது. அழிவுபாட்டபாவத்திற்கு எதிர்மறையாகாததுநித்தம். அதற்கு எதிர்மறையாவது அநித்தம்.

*அழிவுபாட்டபாவத்திற்கு எதிர்மறையாகாதது - அழிவுபாடில்லாதது.

மறித்தும். எ - து. வேறோராற்றாற் பகுக்கின்றது. சரீரம் ஆன்மாவின் போகத்திற்கிடம். எதனால் வரைந்துகொள்ளப் பட்ட ஆன்மாவிற்குப் போகம் நிகழும், அது போகத்திற்கிடம்; அதுவே சரீரமென்பதாம். போகமாவது இன்பத்துன்பங்கள் புலப்படத் தோன்றல். சத்தமல்லாத உற்பூத விசேடகுணங் கட்குப் பற்றுக்கோடாகாது, ஞானத்திற்குக் காரணமாய மனக் கூட்டத்திற்குப் பற்றுக்கோடாயுள்ளது இந்திரியம். சரீரமும் இந் திரியமுமல்லாத எல்லாம் விடயமென்க. எனவே, நாற்றமுடைய சரீரம் பிருதிவிசரீரம், நாற்றமுடைய இந்திரியம் பிருதியிந்திரியம், நாற்றமுடையவிடயம் பிருதிவிவிடயமாதல் இலக்கணமென்பது பெற்றாம்.

*பற்றுக்கோடாகாதென்றது செவி ஒழிந்த பொறி பற்றுக் கோடாவதின் வேறாகலான். நாற்றமுடைய இந்திரியம் எனவே பற்றுக் கோடாகாது என்றதற்கு மாறுகொள்ளுமாற் பிறவெனின், ஆண்டுநாற்றம் அநுற்பூதமாகலிற் கொள்ளாது என்க. உற்பூதம், இதனை உருவமுதலிய நான்கன்றன்மை கூறுமிடத்தறிக.

சரீரம். எ - து. பிருதிவிசரீரம் இதுவென்கின்றது.

இந்திரியம். எ-து. இந்திரியம் இதுவென்கின்றது. 'கிராணம்' எனப் பெயர் கூறி, 'நாற்றத்தைக் கவர்வது', எனப் பயன்கூறிய வாறு. 'நாசி நுனியில்' எனப் பற்றுக்கோடு கூறியவாறு. இவ்வாறு மேலுமுய்த்துணர்க.

விடயம். எ - து. விடயம் இதுவென்கின்றது

கக. நீரிறை வரைப்பிற் கட்டுநீ ருடம்பு
சுவைத்திறங் கவர்வது நாவி னுனியே
கடல்யா றாதி விடய மாகும்.

*கட்டு—கண்ணது.

*ஈண்டுக் கூறுதொழிந்த இலக்கணம் மேற்சூத்திரத்தினின்றுங் கொணர்ந்து ஒட்டிக்கொண்டுணர்க. முன்னர் வருவனவற்றிற்கும் இஃதொக்கும்.

(இ - ள்.) அப்புவாவது குளிர்ந்த பரிசமுடையது. அது நித்தம், அநித்தம் என இருவகைத்து. நித்தம் பரமாணுரூபம் அநித்தம் காரியரூபம். மறித்தும், சரீர இந்திரிய விடயவேறுபாட்டால் மூவகைப் படும். சரீரம் வருணலோகத்தினுள்ளது. இந்திரியம் சிங்நுவை, சுவையைக் கவர்வது. அது நாவினுனியிலிருப்பது. விடயம் ஆறு, கடல் முதலியனவாம். (எ - று.)

அப்புவாவது. எ-து. அப்பிலக்கணங்கூறுகின்றது. தோன்றிய பொழுதே அழிவுபடும் நீரின்கண் அவ்வியாத்தி நீக்குதற்குக் குளிர்ந்த பரிசத்தோடு ஒருங்கிருக்கும்பொருண்மைக்கு அபரமான சாதியுடைமையென்பது கருத்தாகக் கொள்க. 'தண்ணென்றது சிலாதலம்', என்புழித் தட்பந்தோன்றுதல் நீரின் சம்பந்தத்தாலாகலின், ஆண்டு அதிவியாத்தியின்மையு முணர்க. ஏனையனைத்தும் முன்னுரைத்தவாறுரைத்துக்கொள்க.

*ஒருங்கிருக்குஞ் சாதி என ஈண்டும் ஒட்டுக. குற்றமின்று, சாதி பரிசத்தோ டொருங்கிருப்பதாவதே சாலுதலான்.

(கக) கதிரோன் வரைப்பிற் கட்டன வுடம்பே
யுருவங் கவர்வது கருமணி விழியே
மண்விண் வயிறு கரநால் விடயம்.

(இ - ள்.) தேயுவாவது சுடும்பரிசமுடையது. அது நித்தம், அநித்தம் என இருவகைத்து. நித்தம் பரமாணுரூபம். அநித்தம் காரியரூபம். மறித்தும், சரீர இந்திரிய விடயவேறுபாட்டால் மூவகை

ப்படும். சரீரம் சூரியலோகத்துள்ளது. இந்திரியம் சக்ஷுஸ்; உருவத்தைக் கவர்வது. அது கண்ணுறை கருமணியினுனியினிருப்பது. விடயம் மண்ணினுள்ளதும், விண்ணினுள்ளதும், வயிற்றினுள்ளதும், ஆகரத்தினுள்ளதும் என்னும் வேறுபாட்டால் நான்குவகைத்து. அவற்றுள், மண்ணினுள்ளது நெருப்புமுதலியன. விண்ணினுள்ளது மின்முதலியன, அவைநீரையே இந்தனமாகவுடையன. வயிற்றினுள்ளது உண்டவுணவு பரிணமித்தற்கு எதுவாயிருப்பது. ஆகரத்தினுள்ளது பொன்முதலியனவாம்.

தேயுவாவது. எ-து. தேயுவிலக்கணங்கூறுகின்றது. 'நீர்சுடுகின்றது' என்புழிச் சூடு புலப்படுதல் தேயுவின் சம்பந்தத்தாலாகலின், ஆண்டதிவியாத்தியின்மையுமுணர்க.

விடயம் மண்ணினுள்ளதும். எ-து. விடயத்தைப் பகுக்கின்றது. சுவர்ணம் பிருதிவியின்கூறு, பீதத்துவமாயும் குருத்துவமாயும் இருக்கையால், அரிசனம்போலே எனின்;—அற்றன்று, எரிகின்ற தழல் கூடியவழி நெய் முதலியவற்றின் நெகிழ்ச்சிக்குணத்திற்கு அழிவு காண்டலானும், நீரினிடைநின்ற நெய்யின்கண் நெகிழ்ச்சிக்கு அழிவு காணாமையானும், தடையில்லாதவழி எரிதழலின் கூட்டங்காரணமாகப் பார்த்திவநெகிழ்ச்சிக்கு அழிவுபாடாகிய காரியம் பிறத்தல் துணியப்படுவதாம்; ஆகவே பொன்னிற்கு எரிதழல் கூடியவழியும் அழிவுபடாத நெகிழ்ச்சிக்கிடமாயிருத்தலால், பிருதிவியின் கூறென்றல் பொருந்தாமை பெறும். பெறவே, ஆண்டுப் பொன்மைநிறமுடைய திரவியத்தினெகிழ்ச்சி அழியாமற்றடுப்பதற்கு நெகிழ்ச்சியுடைத் திரவியம் வேறொன்றுண்டெனல் வேண்டும், வேண்டவே, அஃது ஒரு நிமித்தத்தானாய நெகிழ்ச்சிக்கிடமாயிருத்தலின் இயல்பானே நெகிழ்ச்சியுடைய நீரின்கூறென்றலும், உருவமுடைமையின் வாயு முதலியவற்றின் அடங்குமென்றலும் பொருந்

புலப்படுகவெனல் வேண்டுதலின், மனமுமன்று பரமாணுவின் பரிசம் இந்திரியத்திற்குப் புலனுகாமையின், ஆதலால் அனுபவிக்கப் படும் பரிசத்திற்குப் பற்றுக்கோடியாது அது வாயுவென்றறிக. அற்றேல், வாயு அனுமிக்கற்பாலதென்றதென்னை? குடம்போலக் காட்சிப்பரிசத்திற்குப் பற்றுக்கோடாகலிற் காட்சிப்பொருளேயாமாலோவெனின்;—அற்றன்று, ஆண்டு உற்பூதவுருவமுடைமை உபாதியாகலின், அது திரவியமாய புறவிந்திரியக் காட்சிப்பொருளாயிருக்கும் இடமெங்கும் உற்பூதவுருவமுண்டெனச் சாத்தியத்தில் வியாபித்தலும், வாயுவாகிய பக்கத்தின்கட் கூறிய ஏதுவின் வியாபியாமையும் அறிக. அற்றேல், வெந்நீரின்கண்ணதாகிய தேயுவும் காட்சிப்பொருளன்றாதல் வேண்டுமாலெனின்;— நன்றுசொன்னாய், அதுவே எமது கோட்பாடென்க. இங்ஙனங் கூறியவாற்றால், உருவமின்மையின் வாயுக் காட்சிப்பொருளன்றென்பதறிக.

*யாண்டடங்கும் என்பது சஞ்சரிக்கும் வாயு பிராணன் எனப் படும் என்பதற்குப் பிராணன் சரீர முதலிய மூன்றனுள் விடயத்தினடங்கும் என்பது கருத்தெனக் கொள்க என்றவாறு.

*நியமம் - பிறழ்ச்சியின்மை.

*எங்கும் - உளருமிடத்தன்றி யாண்டும்.

*அனுமித்தல் - ஆராய்ந்து துணிதல்.

*காட்சிப்பரிசம்-காட்சியுணர்விற்குப் புலனுகும் பரிசம், காட்சியான் அறியப்படும் பரிசம். காட்சிப்பொருள் என்பதற்கும் இஃதொக்கும்.

*உபாதி என்பது துணிபொருள் உள்வழி இன்றியமையாது உளதாய் ஏது உள்வழி இலதாவது.

*புற இந்திரியம் - மனமல்லாத பொறி.

*புறவிந்திரியக் காட்சிப்பொருளென்றது திரவியமாய என்னுமடைகொடுத்துக் கூறியது, உருவமுதலிய குணத்தின்கண் அதிவியாத்தி வாராமற்பொருட்டு. ஈண்டு அதிவியாத்தியாண்டையதெனின் புற இந்திரியக் காட்சிப்பொருளெனவே அதன்கண் உருவமுதலிய குணமும் அகப்பட்டுநிற்றலான் ஆண்டையதென்க. குணமும் பொருள் எனப்படுதலான் பதார்த்தம், திரவியம் என்னுமிரண்டனுள் பொருள் என்பதின்னது என்பதை இடனோக்கித் தெரிந்துகொள்க.

*உருவம் சாத்தியத்தில் வியாபித்தலாவது,குடமுதலிய திரவியத்தின்கண் இருப்பதாவது; ஏதுவின் வியாபியாமையாவது, ஏதுவாய பரிசத்திற்கு இடனாகும் வாயுவின்கண் இல்லதாவது.

*காட்சிப்பரிசத்திற்குப் பற்றுக்கோடாகலின் என்னும் ஏது உபாதியுடைமையான் துணிபொருள் இல்வழியும் இருப்பதாதல் தெற்றென விளங்கலின் அது துணிபொருளைத் துணிவிக்க மாட்டாதாய்ப் போலியாய் ஒழிதலின் ஏது எனக்கோடற்பாற்றன்மையுணர்க. முன்னர் வியாப்பியத் தன்மைய சித்தங்கூறுமிடத்துப் போலியாவதறிக. உபாதியாவது ஏதுவைப் போலியாக்க வல்லதாவது என்க.

*வெந்நீரின்கண்ணதாயதேயுவும் காட்சிப்பொருளன்று ஆண்டு அதற்கும் உருவமின்மையான்.

•இனிக் காரியமாகிய பிருதிவி முதலிய நான்கிற்றோற்றவொடுக்கமுறையாமாறு:—இறைவன் உலகைத் தோற்றுவிப்பாம் என்னும் இச்சைவயத்தாற் பரமாணுக்களிற் கிரியையுண்டாம்; அத

று பரமாணுவிரண்டு கூடித் துவியணுகந்தோன்றும். துவியணுகம் மூன்றுகூடித்திரியணுகமாம்; இவ்வாறே சதுரணுகமுதலியன முறையானே தோன்றுதலின், மாபிருதிவி, மாவப்பு, மாதேயு, மாவாயுக்களாம். இவ்வாறு தோன்றிய பொருள்களை ஒடுக்குவாம் என்னும் இசைவயத்தாற் பரமாணுக்களிரண்டின் கூட்டத்திற்கு அழிவுபாடுண்டாங்கால் துவியணுகம் அழியும், அதன் பின்னர்த் திரியணுகம் சதுரணுகமென, இவ்வாறே மாபிருதிவி முதலியன அழியுமென்றுணர்க. அசமவாயிகாரணவழிவுபாட்டால் துவியணுகம் அழியும், சமவாயிகாரணவழிவுபாட்டால் திரியணுகம் அழியுமென்பது சம்பிரதாயம். யாண்டும் அசமவாயிகாரணவழிவுபாட்டானே திரவியத்திற்கு அழிவுபாடென்பர் நவீனர்.

*சமவாயி, இதனையும் போக்கிக் காண்க.

*அணுகம் - அணுவின் காரியம்.

*நவீனர் - பின்னோர்

*பிராசீனர் - முன்னோர்.

பரமாணுவுண்மைக்குப் பிரமாணம் என்னெனிற் கூறுதும். 'சாளரத்தினுழையும் என்றாழ்க்கதிரின்கண் மிகநுண்ணியதாகித் தோன்றுவதியாது, அஃது அவயவத்தோடுங்கூடியது, குடம்போலக் கட்புலப்படும் பொருளாகலின்' எனத் திரியணுகவுண்மை பெற்றும். 'திரியணுகத்தின் அவயவமும் அவயவத்தோடு கூடியது, நூல்போலப் பெரிதைத்தோற்றுவிப்பதாகலின்' என்பதனால் துவியணுகமுண்மை பெறப்பட்டது. துவியணுகத்திற்கு அவயவம் யாது அதுவே பரமாணு, நித்தமாயுள்ளது. அதுவுங் காரியமெனின், வரம்பின்றியோடுமென்க. தோற்றமொடுக்கமுண்மைக்கு "புனருற்பவம் வருமாறுணர்த்துதனுதலிற்று" என்பது முதலிய சுரு

தியே பிரமாணம். காரியமான திரவியமெல்லாம் அழிவது அவாந்தரப் பிரளயமெனவும், காரியமான பாவபதார்த்தமெல்லாம் அழிவது மாப்பிரளயமெனவும். தெரிந்துகொள்க.

*பிரமாணம், இஃது இனிவருங்காண்க.

*கட்புலனாவது திரியணுகம் என்றது அதற்குக் கீழ்ப்பட்டது கண்ணிற்குப் புலனாவ தன்மையான்.

*வரம்பின்றியோடல் - தணிவுபெறாது நிற்றல்

*ஈண்டுச் சுருதியென்றது பவமற நந்திக்குப் பசுபதியருளிய சிவஞானபோதச் சிறப்பமை நூலினை என்க. அவாந்தரம் - காலத்தின் கண்ணிடை.

௧௩ விசும்பே காலந் திசையோ டான்மா
மனமிவை யைந்து நித்தியப் பொருளே

(இ - ள்.) ஆகாயமுதலிய ஐந்தும் நித்தியப்பொருள். (எ-று)

௧௪. ஓசைப் பண்பிற் றாகா யம்மே

(இ - ள்.) ஆகாயமாவது சத்தகுணமுடையது. அது ஒன்றாய், வியாபகமாய், நித்தமாய் இருக்கும். (எ - று.)

ஆகாயமாவது. எ-து. ஆகாயத்தி னிலக்கணங்கூறுகின்றது. 'ஒன்றாய்' எ - து. ஆகாயமும் பிருதிவி முதலியனபோலப் பலவெனக் கொள்ளற்கவென்றவாறு, பலவென்றதற்குப் பிரமாணம் இன்மையினென்பதாம். 'வியாபகமாய்' எ - து. ஒன்றென்றதனானே யாண்டும் நிகழ்தலின் வியாபகத்தன்மை கொள்ளற்பாற்றென்றவாறு. வியாபகமாவது வடிவுடைப்பொருளெல்லாவற்றினும் சையோகித்திருத்தல். வடிவுடைப்பொருளாதல் வரம்புப்பட்ட பரிமா

ணமுடைமை, தொழிலுடைமை யென்றலுமாம். 'நித்தமாய்' எ-து. வியாபகத்தன்மையானே ஆன்மாவைப்போல் நிலையுடைப்பொரு ளென்றவாறு.

௧௫. இறப்புமுதல் வழக்கிற் கேதுக் காலம்.

(இ - ள்.) காலமாவது இறப்புமுதலிய வழக்கிற்கு ஏதுவா யிருப்பது. அது ஒன்றாய், வியாபகமாய், நித்தமாய் இருக்கும்.

காலமாவது. எ-து. காலத்தினிலக்கணங் கூறுகின்றது. காலம் எல்லாவற்றிற்கும் பற்றுக்கோடாயிருப்பது, எல்லாக் காரியங்கட்கும் நிமித்தகாரணம்.

௧௬. கிழக்குமுதல் வழக்கிற் கேதுத் திசையே.

(இ - ள்.) திக்காவது கிழக்கு முதலிய வழக்கிற்கு ஏதுவாயுள்ளது. அதுவும் ஒன்றாய், வியாபகமாய், நித்தமாய் இருக்கும். (எ-று)

திக்காவது. எ-து. திக்கிலக்கணங் கூறுகின்றது. திக்கும் எல்லாக்காரியங்கட்கும் நிமித்தகாரணம்.

௧௭. அறிவுப் பண்பிற் றன்மா வென்க
விறையே யீசன்முற் றறிவனோர் முதலே
யுயிர்தா னுடறொறும் வெவ்வே றாகும்.

(இ - ள்.) ஆன்மாவாவது ஞானத்திற்கு இடமாயுள்ளது. அது பரமான்மா, சீவான்மா என இருவகைத்து. அவற்றுள், பரமான்மா ஈசுரன், முற்றறிவன், ஒருவனே. சீவான்மா சரீரந்தோறும் வேறாய், வியாபகமாய், நித்தமாய் இருப்பன்.

ஆன்மாவாவது. எ-து. ஆன்மாவினிலக்கணங் கூறுகின்றது. அது. எ-து. ஆன்மாவைப் பகுக்கின்றது.

அவற்றுள், பரமான்மா. எ-து. பரமான்மாவினிலக்கணங் கூறுகின்றது. நித்தமானஞானத்திற்கு இடமாதல் ஈசுரனிலக்கணம். அற்றேல், ஈசுரன் உண்டென்பதற்குப் பிரமாணமென்னை? அருவப்பொருளாதலாற் புறவிந்திரியக்காட்சியன்று, ஆன்மாக்களின் சுகதுக்க முதலியவற்றின் வேறாதலால் அகவிந்திரியக்காட்சியுமன்று, இலிங்கமின்மையான் அனுமானமுமன்றாலெனின்;—அற்றன்று, 'அங்குரமுதலியன கருத்தாவையுடையன, காரியமாகலின், குடம்போலும்' என்னுமனுமானம் பிரமாணமாகலான் என்பது. கருத்தா உபாதானத்தைப் புலப்படக்காணும் அறிவிச்சை செயல்களையுடையபொருள். உபாதானம் சமவாயிகாரணம். பரமாணு முதலிய நுண்ணியபொருளெல்லாவற்றையுங் காண்டலின், ஈசுரன்முற்றறிவன்; "இறைவனுவான்ஞானமெல்லா மெல்லா முதன்மையனுக் கிரகமெலா மியல்புடையான்" என்றற்றொடக்கத்தாகமமும் பிரமாணமெனவறிக.

*அருவமெனவே கண்ணிற்கும், பொருளெனவே ஏனையிந்திரியங்கட்குங் காட்சியின்மை போதரல்காண்க. பொருள்என்றது ஈண்டுத் திரவியத்தை. என்னை? ஏனையிந்திரியக் காட்சியன்றாதல் சத்தமுதலிய குணங்கட்கின்று திரவியத்திற்கே யுண்டாகலான்.

*இலிங்கம்—குறி.

*ஈண்டு ஆகமம் என்றது தேனொழுகு திருவிருத்தச் சிவஞான சித்தியினை.

சீவான்மா. எ - து. சீவனிலக்கணங் கூறுகின்றது. சுகமுதலியனவுடைமை சீவான்மாவினிலக்கணம். அற்றேல், 'யான் மனிதன்' 'யான்பார்ப்பான்' என யாண்டும் யானென்னுமுணர்விற்குச் சரீரமே விடயமாகலின், சரீரமே ஆன்மாவெனிற்படுமிழுக்

கென்னையெனின்;—அற்றன்று, சரீரமே ஆன்மா என்பார்க்குக் கை கால்முதலிய சரீரம் நசித்தலால் ஆன்மாவும் நசித்ததெனல் வேண்டுமாகலினென்க. ஆயின் இந்திரியங்கள் ஆன்மாவென்றுமோவெனின்;—என்னும், 'குடத்தைக்கண்ட யானே இப்பொழுது குடத்தைத் தீண்டினேன்' என்னுந்தொடர்ச்சியறிவு நிகழாதொழிதல்வேண்டுதலின். ஒருவன் அனுபவித்ததனை மற்றொருவன் ஒட்டியுணர்தல் கூடாமையுணர்க. அதனால் சீவான்மா உடம்பு பொறி முதலியவற்றின் வேறெனப்படும், சுகமுதலியவற்றின் வேறுபாட்டான் உடம்புதோறும் வெவ்வேறென வுணர்க. பரமாணுவெனின் உடம்புமுழுதும் வியாபித்த சுகதுக்கவநுபவங்கூடாதாகலானும், இடைப்பட்ட பரிமாணமுடையதெனின் அநித்தமாதல் வேண்டும், வேண்டவே செய்த வினை அழிந்து செய்யாத வினை தோன்றிற்றெனல் வேண்டுமாகலானும், அவ்வாறன்றி நித்தமாய் வியாபகமாயுள்ளது சீவான்மா வென்றுணர்க.

*தொடர்ச்சியாவது, கண்டவனே தீண்டினானாதல். நிகழாதொழிதற்குக் காரணம் காட்டிய அடுத்தவாக்கியம் எழுந்தது என்க.

*வினையழிந்து தோன்றிற்று எனல்வேண்டும் என்றது நித்தமாய ஆன்மாவை அநித்தம்எனவே முன்னீட்டப்பட்டவினை பின்னைப்போகத்திற் கேது என்பது பெறப்படுமா றின்மையான்.

*இவ்வாறு மாறுகொளக்கூறின் அதனை மாறுகொளக் கூறுவதாய தருக்கஞ்செய்தலான்மறுப்பது இந்நூற்கியல்பாதல் உணர்க. இஃதே முன்னர்க் கூறப்படும் தருக்கம் எனப்படுவது என்க.

௧௮. மனமணு வடிவாய் வருமின் பாதி
யறிதற் கின்றி யமையாக் கருவி
யாகிப் பலவா யழிவின் றாமே.

(இ - ள்.) மனமாவது சுகம் முதலிய அனுபவத்திற்குக் கருவியாகிய இந்திரியம். அதுவும் உயிர்தோறும் நியதமாயிருத்தலின் அநேகமாய், பரமாணுரூபமாய், நித்தமாயிருக்கும். (எ - று.)

மனமாவது. எ-து. மனத்தினிலக்கணங்கூறுகின்றது. பரிசமின்றிச் செயலுடைத்தாதல் மனத்தினிலக்கணம்.

அதுவும் எ-து. மனத்தைப் பகுக்கின்றது. ஒவ்வோரான்மாவிற்கு ஒவ்வொருமனமாக, ஆன்மாக்கள் அநேகமாகலின், மனமும் அநேகமென்றவாறு. இடைப்பட்டபரிமாணமெனின் அநித்தமாய் முடியுமாகலின், 'பரமாணு' எனப்பட்டது. அற்றேல், மனம் வியாபகம். பரிசமில்லாத திரவியமாகலின், ஆகாயம்போலும் எனிற்படுமிழுக்கென்னையெனின்;—மனம் வியாபகமாயின் ஆன்மாவிற்கும் மனத்திற்குஞ் சையோகங்கூடாமையின், ஞானமுண்டாகாதாதல்வேண்டுமென்க. வியாபகப்பொருளிரண்டற்குச் சையோகமுண்டெனின்;—நன்று சொன்னாய், அச்சையோகம் நித்தமாகலின் உறக்கமின்றியிருத்தல்வேண்டும், சுழுமுனைநாடியின் வேறாய இடத்து ஆன்மாவிற்கும் மனத்திற்குமுளதாகிய சையோகம் எக்காலமும் உண்மையானென்க அணுவாயின், 'மனஞ்சுழுமுனைநாடியின் ஒடுங்கிய காலத்துத் துயில் கூடும், ஒடுங்காத காலத்து அறிவு நிகழும்' என்பதனால் அணுவாதல் பெறப்பட்டது.

*சையோகங் கூடாதென்றது வியாபகப்பொருட்குப் புடைபெயர்ச்சியின்மையின். உறக்கமின்றியிருத்தல் வேண்டும் என்றது ஒடுங்காது வேறாயகாலத்துச் சையோகம் உண்மையான் அறிவு நிகழுமாகலான். அணுவாயின் என்னும் வாக்கியம் மேல்வாக்கியத்திற்கு விளக்கமாவது காண்க

*கோடலை மறுக்க என்றது, உருவுடைப்பொருளாகிய அவயவத்திற் சமவாய சம்பந்தத்தா னிருப்பதாய அவயவியே ஒற்றுமை பற்றிக் காட்சியைப் பயப்பது எனக்கோடன் மிகையாகலான்.

௨௦. காண்சுவை நாவாற் கவரப் படுகுணங்
கார்ப்புப் புளிப்புக் கைப்புக் காழ்ப்பே
யினிப்புத் துவர்ப்பென் றிருமூன் றாகி
நீரி னினிப்பே நிலத்தா றுறுமே.

(இ-ள்) இரதம் நாவினாற் கவரப்படுங் குணம். அதுவும் தித்திப்பு, புளிப்பு, கார்ப்பு, காழ்ப்பு, கைப்பு, துவர்ப்பு என்னும் வேறுபாட்டால் அறுவகைத்து. மண்ணினும் நீரினும் இருப்பது. மண்ணில் ஆறுவிதமும்; நீரில் தித்திப்பொன்றே. (எ - று.)

இரதம். எ - து. சுவையினிலக்கணங்கூறுகின்றது. உருவம்முதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்கு 'நாவினாற்கவரப்படுவது' என்றும், சுவைத்தன்மையின் அதிவியாத்தி நீக்குதற்குக் 'குணம்' என்றுங் கூறப்பட்டது.

மண்ணினும். எ - து. சுவைக்குச் சார்பு கூறுகின்றது.

௨௧. மண்மாத் திரத்தின் மருவி மூக்காற்
கவரப் படுகுணங் காணி னாற்ற
நன்றா தீதென் றிரண்டாய் நண்ணும்.

(இ - ள்) கந்தம் மூக்கினாற் கவரப்படுங் குணம். அதுவும் நறுநாற்றம் தீநாற்றம் என இருவகைத்து. பிருதிவியின் மாத்திரம் இருப்பது. எ - று.

கந்தம். எ - து. நாற்றத்தினிலக்கணங் கூறுகின்றது. நாற்றத் தன்மையின் அதிவியாத்தி நீக்குதற்குக் 'குணம்' என்றும், உருவமு

தலியனவற்றின் அதிவியாத்தி நீக்குதற்கு 'மூக்கினாற்கவரப்படுவது' என்றுங் கூறப்பட்டது.

௨௨. ஊற்ற மீந்தோ லொன்றாற் கவரப்
பட்டுறு குணமது படிநீர் தீக்கா
லொன்றி னின்று நளிரே வெப்ப
மிரண்டு மில்லை யெனமூன் றாகு
நீரிற் குளிர்ச்சி நெருப்பின் வெப்ப
மேனை யிரண்டிற் கிரண்டி லாதே.

(இ - ள்) பரிசம் துவக்கிந்திரியத்தான்மாத்திரம் கவரப்படுங் குணம். அது குளிர்ச்சி, சூடு, குளிர்ச்சியுஞ்சூடுமில்லது என்னும் வேறுபாட்டால் மூவகைத்து. பிருதிவி அப்புத் தேயு வாயுக்களில் இருப்பது. அவற்றுள், நீரில் குளிர்ச்சி, தேயுவில்சூடு, பிருதிவி வாயுக்களில் குளிர்ச்சியுஞ் சூடுமில்லாத பரிசம். எ - று.

பரிசம். எ - து. ஊற்றினிலக்கணங்கூறுகின்றது. பரிசத்தன்மையின் அதிவியாத்தி நீக்குதற்குக் 'குணம்' என்றும், சையோகமுதலியனவற்றின் அதிவியாத்தி நீக்குதற்கு 'மாத்திரம்' என்றுங் கூறப்பட்டது.

*எண்மாத்திரம் என்றதனாற் சையோகமுதலியன விழியானுங் கவரப்படுதலின் பரிசத்தின் இலக்கணம் அவற்றிற்கு வாராதொழிதல் காண்க

*குற்றம் வருமாற்றினையும் நீங்குமாற்றினையும் பிறவும் இவ்வாறே உய்த்துணர்ந்து கொள்க.

௨௩. உருவஞ் சுவையே யூறே நாற்ற
நெருப்பா னன்கு நிலத்திற் றோன்றி

யழிவன வாமல் லவற்றியல் பாகி
யழிவன வழிவில வாம்பொருட் கேற்ப.

(இ-ள்)உருவமுதலிய நான்கும் பிருதிவியிற்பாகத்தாறறேன்று வனவாய், அநித்தமாயிருக்கும். மற்றவற்றிற் பாகத்தானன்றி இயல்பாய். நித்தமும் அநித்தமுமாயிருக்கும். நித்தப்பொருளைச சேர்ந்தவை நித்தம். அநித்தப்பொருளைசசேர்ந்தவை அநித்தம். எ - று

'பாகத்தான்' எ-து. பாகந்தேயுவின்கூட்டம். அதனுன் முன்னுருவமழிந்து வேற்றுருவந்தோன்றுமென்றவாறு. ஈண்டுப் பாகம் பரமாணுக்களுக்கே, துவியணுகமுதலியவற்றிற்கன்று. ஆதலாற்பாகமாவகாறும் சுள்ளையின் வைத்த குடத்திற் பரமாணுக்களுக்கு வேற்றுருவமுண்டாயவழிப் பசுங்குடங்கெட்டு மீளத்துவியணுகந்தோன்றுதல் முதலிய முறையானே செங்குடம் பிறக்கும். ஆண்டுப் பரமாணுக்கள் சமவாயிகாரணம், தேயுவின்கூட்டம் அசமவாயிகாரணம்,ஊழ்முதலியன நிமித்தகாரணம். துவியணுகமுதலியவற்றின் உருவத்திற்குக் காரணவுருவம் அசமவாயிகாரணமென்பர் பீலுபாகவாதிகளாகிய வைசேடிகர். பீலு அணுவென்பன ஒருபொருட்கிளவி. முற்குடத்துக்குக் கேடின்றியே பரமாணுமுடிவான அவ்யவங்களினும் அவயவியினும் ஒருங்கே வேற்றுருவம் பிறக்குமென்பர் பிடரபாகவாதிகளாகிய நையாயிகர். பிருதிவியின் பரமாணுக்களின் உருவமுதலியனஅநித்தமென்றதூஉம் இதனுனேயென்பதாம்.'மற்றவற்றின்' எ - து. நீர்முதலியவற்றினென்றவாறு. 'நித்தப்பொருளைச் சேர்ந்தவை' எ-து பரமாணுக்களைச் சேர்ந்தவையென்றவாறு. 'அநித்தப்பொருளைச் சேர்ந்தவை' எ - து. துவியணுகமுதலியவற்றைச் சேர்ந்தவையென்றவாறு.உருவமுதலிய நான்கும் உற்பூதமாயுள்ளன காட்சிக்குப் புலனும், உற்பூதமல்லாதவை காட்சிக்குப் புலனுகாவெனக்கொள்க. உற்பூதத்தன்மையாவது காட்சியைப் பயப்ப

தொரு தருமவிசேடம், அதனின்மை அநுற்பூதத்தன்மை யென்பதாம்.

*காரண உருவம்-காரணமாகும் உருவம், அஃதாவது காரணமாவதனுருவம். அவயவ உருவம் எனினும் ஆம்.

*பிடரம் - தோண்டி.

*தருமவிசேடம் - ஒருவகைத்தருமம்.

*தருமம், ஒன்றின் இருப்பதாவது.

உச ஒருமை முதலா வுறும்வழக் கிற்கோர்
கருவி யெண்ணெனக் கருதப் படும்பிற
பொருளொன் பதினும் பொருந்து மொருமை
நேர்பொரு ளாறு நிலைநிலை யாமை
யிருமை முதலெலாம் யாண்டு நிலையில.

(இ - ள்.) சங்கை ஒருமை முதலிய வழக்கிற்குக் காரணம். சங்கையெனினும் எண்ணெனினும் ஒக்கும். அது ஒன்பது பொருளினும் இருப்பது. ஒன்று முதற் பரார்த்தமீறாய் உள்ளது. அவற்றுள், ஒருமை நித்தப்பொருளைச் சேர்ந்தது நித்தம்; அநித்தப்பொருளைச் சேர்ந்தது அநித்தம். இருமை முதலிய எல்லாம் யாண்டும் அநித்தமே. (எ - று.)

*பரார்த்தம் தனக்கு மேலோர் எண்ணில்லாதது.

சங்கை, எ-து. எண்ணினிலக்கணங் கூறுகின்றது.

உரு. அளத்தல் வழக்கிற் காஞ்சிறப் பேது
வுளினள வென்ப தொன்பதி னுற்று

நுண்மை பெருமை குறுமை நெடுமை
யெனநான் காகு மென்றிசி னோரே.

(இ - ள்) பரிமாணம் அளத்தல்வழக்கிற்குச் சிறந்த காரணம். அது ஒன்பதுபொருளினும் உள்ளது. அது நுண்மை, பெருமை, குறுமை, நெடுமை என நான்குவகைத்து. (எ - று.)

பரிமாணம் எ-து. அளவினிலக்கணங் கூறுகின்றது.

அது. எ-து. பரிமாணத்தைப் பகுக்கின்றது:

உஅ. வேறென் வழக்கிற் கேது வேற்றுமை
யொன்பது பொருளினு முள்ள தாமால்.

(இ - ள்.) வேற்றுமை வேறென்னும் வழக்கிற்குச் சிறந்த காரணம். அது ஒன்பது பொருளினும் இருப்பது. (எ - று.)

வேற்றுமை. எ - து. வேற்றுமையினிலக்கணங்கூறுகின்றது. 'இது இதனின்வேறு' என்னும் வழக்கிற்குக் காரணமென்றவாறு.

* வழக்கிற்குக் காரணம் எனவே வழக்கோர்பயன் என்பதூஉம் ஒன்றைத்துணிதற்குக் கருவியாவது என்பதூஉம் பெறப்படுத லுணர்க.

உஎ. கூடிய தென்னக் கூறும் வழக்கிற்
கீடுடை யேது புணர்ச்சி யென்ப
தோர்பொருட் கோர்பா லுறுவ தாகிப்
பொருளொரான் பதினும் பொருந்து மென்ப.

(இ - ள்.) சையோகம் கூடியது என்னும் வழக்கிற்குக் காரணம். அது ஒன்பது பொருளினும் இருப்பது. (எ - று.)

சையோகம். எ-து. கூட்டத்தினிலக்கணங் கூறுகின்றது. 'இவ்விரண்டுங்கூடி னின்றன' என்னும் வழக்கிற்குக் காரணமென்றவாறு. சையோகம் தொழிலாற்றோன்றியதும், சையோகத்தாற்றோன்றியதுமென இருவகைத்து. கையின்றொழிலாற் கைக்கும் புத்தகத்திற்கும் உளதாய சையோகம் தொழிலாற்றோன்றியது. கைக்கும் புத்தகத்திற்கும் உளதாய சையோகத்தானே உடம்பிற்கும் புத்தகத்திற்கு முளதாய சையோகம் சையோகத்தாற்றோன்றியது. சையோகம் வியாபியாமலிருப்பது. வியாபியாமலிருத்தல் தன்னத்தியந்தாபாவமுந்தானும் ஓரிடத்திருத்தல், ஏகதேசத்திருப்பதென்றவாறாயிற்று.

௨௮. ஆயிற் புணர்ச்சி யழிப்ப தாகி
மெய்ப்புணர் பிறிவுள தெட்டொன் றினுமே

(இ - ள்) விபாகம் சையோகத்தை நாசம்பண்ணுங்குணம். விபாகமெனினும் பிரிவெனினுமொக்கும். அது ஒன்பதுபொருளினும் இருப்பது. எ - று.

விபாகம். எ - து. பிரிவினிலக்கணங்கூறுகின்றது. காலமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குக் 'குணம்' என்றும், உருவமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குச் 'சையோகத்தை நாசம் பண்ணுவது' என்றும், கூறப்பட்டது. விபாகமுந்தொழிலாற்றோன்றியதும், விபாகத்தாற்றோன்றியதுமென இருவகைத்து. கைக்கும் புத்தகத்திற்கும் உளதாய பிரிவு தொழிலாற்றோன்றியது. கைக்கும் புத்தகத்திற்கும் உளதாய பிரிவால் உடம்பிற்கும் புத்தகத்திற்கும் உளதாய பிரிவு விபாகத்தாற்றோன்றியது.

௨௯. மொழியின் முன்மை முன்னென் வழக்கிற்
கிழிவில் சிறப்புக் கருவி யெனப்படும்.

(இ - ள்) பரத்துவம் முன்னென்னும் வழக்கிற்குச் சிறந்தகாரணம். பரத்துவமெனினும் முன்மையெனினுமொக்கும். (எ - று.)

பரத்தும். எ - து. முன்மையி னிலக்கணங்கூறுகின்றது.

௬0. பேணு பின்மை பின்னென் வழக்கிற்
கேணுறு சிறப்புக் கருவி யெனப்படுமே.

(இ - ள்) அபரத்துவம் பின்னென்னும் வழக்கிற்குச்சிறந்த காரணம். அபரத்துவமெனினும் பின்மையெனினு மொக்கும். (எ-று.)

அபரத்துவம். எ - து. பின்மையினிலக்கணங் கூறுகின்றது.

௬௧. உரைதிசை போதா னெவ்வொன் றிரண்ட
மருவு மனதின் மண்முத னன்கின்.

(இ - ள்) அவ்விரண்டும் திக்கினாற் பண்ணப்படுவனவும், காலத்தினாற்பண்ணப்படுவனவும் என இருவகைப்படும். அவை மனத்தினும் பிருதிவி முதலிய நான்கினுமிருப்பன. அவற்றுள், திக்கினாற் பண்ணப்படும் பரத்துவம் சேய்மைக்கணுள்ளது. திக்கினாற் பண்ணப்படும் அபரத்துவம் அண்மைக்கணுள்ளது. காலத்தினாற் பண்ணப்படும் பரத்துவம் மூத்தோன்கணுள்ளது. காலத்தினாற் பண்ணப்படும் அபரத்துவம் இளையோன்கணுள்ளது (எ - று)

அவ்விரண்டும். எ - து அவற்றைப் பகுக்கின்றது.

திக்கினாற்பண்ணப்படும். எ - து. திக்கினாற்பண்ணப்படுவனவற்றிற்கு உதாரணங்கூறுகின்றது.

காலத்தினாற்பண்ணப்படும். எ-து. காலத்தினாற்பண்ணப்படுவனவற்றிற்கு உதாரணங்கூறுகின்றது.

௯௨. ஆதியில் வீழ்ச்சிக் கமைசார் பென்னு
மேதுத் திண்மை யெனப்படு மதுதா
னீர்மண் ணிரண்டி னிற்ப தென்ப.

(இ - ள்.) குருத்துவம் ஆதியில் வீழ்ச்சிக்கு அசமவாயிகாரணம். குருத்துவமெனினும் திண்மையெனினுமொக்கும். அது பிருதிவியினும் நீரினும் இருப்பது. (எ - று.)

குருத்துவம். எ - து. திண்மையினிலக்கணங்கூறுகின்றது. இரண்டாம்வீழ்ச்சி முதலியவற்றிற்கு வேகம் அசமவாயிகாரணமாகலின், வேகத்தின் அதிவியாத்தி நீக்குதற்கு 'ஆதி' எனப்பட்டது.

*இரண்டாம்வீழ்ச்சி என்பது காண்டலளவை கூறுமிடத்து விளங்கும். ஆண்டுக் காண்க. "ஓசை, ஓசையாற் பிறந்ததும்" என்பதனானுமுணர்க.

*ஒருகருமம் நெடிதுநில்லாது என்பது தருக்கநூற்றுணிவு. வீழ்ச்சிமுதலிய கருமத்திற்குச் சமவாயிகாரணம் திரவியம் எனப்படும். பாயிரத்துக் காண்க.

௯௩. ஆதியி லொழுகற் கமைசார் பென்னு
மேது நெகிழ்ச்சி யியல்பொடு நிமித்த
மென்றிரண் டாகி யியல்பா நீரி
னிலத்திற் றீயி னிமித்தத் துளதே.

(இ - ள்.) திரவத்துவம் ஆதியில் ஒழுகுவதற்கு அசமவாயிகாரணம். திரவத்துவமெனினும் நெகிழ்ச்சியெனினும் ஒக்கும். அது பிருதிவி அப்புத் தேயுக்களில் இருப்பது. அது இயல்பாயுள்ளது,

நிமித்தத்தாலுள்ளது என இருவகைத்து. நீரின் இயல்பாயுள்ளது. பிருதிவி தேயுக்களின் நிமித்தத்தாலுள்ளது. பிருதிவியின் நெய் முதலியவற்றின் நெருப்புக்கூடுதலால் உண்டாகிய நெகிழ்ச்சி. தேயுவிற் பொன் முதலியவற்றினுண்டாயது. (எ - று.)

திரவத்துவப். எ-து. நெகிழ்ச்சியிலக்கணங் கூறுகின்றது. 'ஒழுகுதல்' பாய்தல்.

அது. எ-து. அவற்றைப் பகுக்கின்றது. தேயுவின்கூட்டத்தாற் பிறந்தது நிமித்தத்தாலுண்டாயது, அதனின்வேறாயது இயல்பானுள்ளதென்க. நெய்முதலியவற்றின். எ-து. பிருதிவியின் நிமித்தத்தானாயதற்கு உதாரணம். பொன்முதலியவற்றின். எ-து. அதற்குத் தேயுவினுதாரணம்.

௫௪. நீரின் பண்ணி நேர்பொடி யாதி
திரட்டுதற் கேது சிநேக மென்னுங்
குணந்தா னென்ப நூலறி வோரே.

(இ - ள்.) சிநேகம் பொடி முதலியவற்றைத் திரட்டுவதற்கு ஏதுவாய குணம். நீரின்மாத்திரம் இருப்பது. (எ - று.)

சிநேகம் எ - து. சிநேகத்தினிலக்கணங்கூறுகின்றது. கால முதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குக் 'குணம்' எனவும், உருவமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குத் 'திரட்டுதல்' எனவுங் கூறப்பட்டது.

௫௫. ஒலிதான் செவியா னுணரப் படுகுணம்
வெளியாம் வானின் மாத்திர மேவி
யெழுத்தொலி வடிவென் றிருவகைத் தாகும்.

(இ - ள்) சத்தம் செவியாற் கவரப்படுங் குணம். ஆகாயத்தின் மாத்திரம் இருப்பது. அது ஒலிவடிவும், எழுத்துவடிவும் என இருவகைத்து. அவற்றுள், ஒலிவடிவு பேரிகைமுதலியவற்றில் தோன்றுவது. எழுத்துவடிவு வடமொழி முதலிய பாடைவடிவாயுள்ளது.

சத்தம். எ - து ஓசையிலக்கணங் கூறுகின்றது. ஓசைத்தன்மையின் அதிவியாத்தி நீக்குதற்குக் 'குணம்' என்றும், உருவமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குச் 'செவியான்' என்றுங் கூறப்பட்டது. ஓசை கூட்டத்தாற்பிறந்ததும், பிரிவாற்பிறந்ததும், ஓசையாற்பிறந்ததுமென மூவகைத்து. அவற்றுள், முதலது முரசுங்குணிலுங் கூடிய கூட்டத்திற்பிறந்தது. இரண்டாவது மூங்கில் பிளவுபடுங்கால் அவ்விரண்டின் பிரிவாற்றோன்றுவதாய சடசடவோசை. மூன்றாவது முரசுமுதலியவிடத்தோன்றுகின்ற செவிகாறும் இரண்டாமோசை முதலிய ஓசையாற்றோன்றுவது.

௩௪. உணர்ச்சியென்ப தொழிற் படுக்க
மனத்தின் கருவியா மறிவஃ துணர்வு
நினைவென் றிரண்டாய் நிலவு மென்ப.

(இ - ள்.) புத்தி எல்லாவழக்கிற்குங் காரணமாகிய அறிவு. அது நினைவும் அநுபவமும் என இருவகைத்து. (எ - று.)

புத்தி. எ-து. புத்தியிலக்கணங்கூறுகின்றது. 'அறிகின்றேன்' எனப் பின்னிகழுமுணர்ச்சியாற் குறிக்கப்படும் அறிவுத்தன்மையே இலக்கணமென்பதாம்.

*பின்னிகழுமுணர்ச்சி எனவே முன்னிகழுமுணர்ச்சி ஒன்று உண்டென்பது போதருதல்காண்க. ஈண்டு முன்னிகழுமுணர்ச்சியாவது, புத்தியாவதறிவு என்பது. அறிகின்றேன் என்பதைப் பின்

ஊரிகழுமுணர்ச்சி என்றது அறிவு என்பதைத் தெரிந்தபின்பன்றி அறிகின்றேன் என்னுமுணர்ச்சி நிகழாமையான். பிறவுமிவ்வாறேகொள்க. பாயிரத்துக்காண்க.

அது. எ-து. பகுதியைப்பகுக்கின்றது.

கூஎ. துனுவா சனைமாத் திரத்தாற் றேன்று
முணர்வு நினைவா முணர்வதின் வேறு
மின்மை யுண்மை யென்றிரு வகைத்தே.

(இ - ள்.) நினைவு வாசனைமாத்திரத்தாற்றேன்றும் ஞானம். அநுபவம் அதனின்வேறாய ஞானம். அது உண்மையநுபவம், இன்மையநுபவம் என இருவகைத்து. (எ - று.)

நினைவு. எ - து. நினைவினிலக்கணங்கூறுகின்றது. பாவனையெனப் பெயரிய வாசனை என்க. வாசனையினது அறிவுபாட்டின் அதிவியாத்தி நீக்குதற்கு 'ஞானம்' என்றும், குடமுதலியவற்றின் காட்சியுணர்வின் அதிவியாத்தி நீக்குதற்கு 'வாசனையாற்றேன்றியது' என்றும், இவன் அந்தச்சாத்தன் என்னும் முன்னதனுணர்வின் அதிவியாத்தி நீக்குதற்கு 'மாத்திரம்' என்றுங் கூறப்பட்டது.

அநுபவம். எ-து. அநுபவத்தினிலக்கணங்கூறுகின்றது. நினைவிற்கு வேறாய உணர்வு அநுபவமென்பதாம்.

*உரைத்தும் என்னும் உத்தியான் அநுபவத்தை விளங்கக்கூறாது நினைவிற்கு வேறாய உணர்வு என்றொழிந்ததென்க.

அது எ-து. அநுபவத்தைப் பகுக்கின்றது.

* வாசனை என்பது முன்னர்வரும், ஆண்டுக்காண்க.

௩௮. அஃதுடைப் பொருளி னஃதடை யாக
நிகழு முணர்வு நிலவு முண்மை
யஃதில் பொருளி னஃதடை யாக
நிகழு முணர்வு நிலவு மின்மை.

(இ - ள்.) அஃதுடைப்பொருளின்கண் அது விசேடணமாக நிகழும் அநுபவம் உண்மையநுபவம். அதுவேயிரமையென்று உரைக்கப்படும். அஃதில் பொருளின்கண் அது விசேடணமாக நிகழும் அநுபவம் இன்மையநுபவம். அதுபிரமம் என்றுஉரைக்கப்படும். (எ-று.)

*நிகழுதல்-தோன்றுதல். அஃதுடைப் பொருள் - விசேடியம், அடைகொளி எனினும் ஒக்கும்.

*விசேடணமாக நிகழும் அநுபவம், விசேடண விசேடியங்களின் சம்பந்தங்கவரும் உணர்வு. விசேடணம்-அடை, அஃதாவது இன்னதென விளங்காது தோன்றுவ தொன்றனை விளங்க வரையறுத்துணர்த்துவது என்க.

*வடமொழியின்கண் எழுவாய்த் தொடரின் வருமொழி விசேடணமாயும், ஏனையதொடரின் நிலைமொழி விசேடணமாயும் வழங்கிவரலின், விசேடணம் இஃதுஎன்பது உணர்ச்சிவகையானன்றி சொல்வகையான் உணரற்பாற்றன்று.

அஃதுடைப்பொருளின்கண். எ-து. உண்மையநுபவத்தினிலக்கணங்கூறுகின்றது. அற்றேல்,'குடத்தின்கட்குடத்தன்மை'என்னுமுணர்ச்சிக்கண் அவ்வியாத்திக்குற்றந் தங்கும், குடத்தன்மையின்கட் குடமின்மையாலெனின்;—அற்றன்று, எதன்கண் எதன்சம்பந்தமுண்டு அதன்கண் அதன்சம்பந்தத்தின் அனுபவமென்பதுபொருளாகலின். குடத்தன்மையின்கட் குடசம்பந்தம் உண்மையான்,

அவ்வியாத்தியின்மையுணர்க. 'அது' என்பது உண்மையநுபவமே பிரமையென நூலின்கட்கூறப்படுவதென்பதாம்.

*குடத்தின்கட்குடத்தன்மை என்னும் உணர்ச்சிக்கண் அவ்வியாத்திவரும் என்றது, விசேடியத்தின்கண் இருக்கற்பாலது விசேடணமென்பதற்கேற்ப விசேடியமாநிற்கும் குடத்தன்மையின்கண் விசேடணமாநிற்குங் குடமின்மையான். எதன், எதன், அதன் அதன் நிரனிறை. முன்னர்வருவதும்அது.

அஃதில் பொருளின்கண். எ - து. இன்மையநுபவத்தினிலக்கணங்கூறுகின்றது. அற்றேல்,'இது சையோகமுடைத்து',என்னும் பிரமைக்கண் அதிவியாத்தி வருமாலோவெனின்;—அற்றன்று, எதன்வரைவான் எதன் சம்பந்தமில்லை அதன்வரைவான் அதன்சம்பந்தவுணர்ச்சி இன்மையநுபவமென்பது கருத்தாகலின். சையோகமின்மையான் வரைந்த சையோகவுணர்ச்சி மயக்கமாகலின், சையோகத்தான் வரைந்த சையோகசம்பந்தவுணர்சசி உளதாகலின், அதிவியாத்தியின்மையுணர்க.

*இதுசையோகமுடைத்து என்பதன்கண் அதிவியாத்திவரும் என்னை? சையோகமில்வழியுஞ் சையோகவுணர்சசி நிகழுதலான். ஆண்டுச்சையோகமின்மை யாண்டையதெனின் இதுசையோகமுடைத்து என்புழிச்சையோகம் தான் இல்வழியும் உளதாகத்தோற்றினும் ஓர்புடையேயிருப்பதாகலிற் சையோகமுடையதன்கட் சையோகமேயல்லது அதன் முழுதுமின்மையும் உடனிகழ்வது தப்புவதன்மையிற் சையோகமின்மை ஆண்டுளதாவது அறிக. உண்மையநுபவமும் இன்மையநுபவமும் ஒருங்கு நிகழினும் வரைந்தனலான் ஒன்றன்பால் ஒன்றின்மை தெரிதலின் அதிவியாத்தியின்மையுணர்க. மயக்கம் என்றது சையோகசம்பந்தவுணர்ச்சி, சையோகமின்மையான் வரைந்தவிடத்தும் நிகழுதலின்.

௩௯. கருத்துணர் வொப்பே காட்சி யொலியென்
றொருநான் கென்ப வுண்மை யுணர்வே
கருத லொப்புமை காண்ட லுரையென்
றுரைப்பவைக் கருவியு மொருநான் கென்ப.

(இ - ள்.) உண்மையனுபவம் காட்சி, அநுமிதி, உபமிதி, சாத்தம் என்னும் வேறுபாட்டால் நால்வகைத்து. அதன் கரணமும் காண்டல், அநுமானம், உவமானம், சத்தம் என்னும் வேறுபாட்டால் நான்குவகைத்து (எ - று.)

உண்மையனுபவம், எ - து. உண்மையனுபவத்தைப் பகுக்கின்றது.

அதன்கரணமும். எ - து. தொடர்பாட்டாற் கரணத்தையும் பகுக்கின்றது. 'அதன்கரணம்.' எ - து. பிரமைக்குக் கரணமென்றவாறு. பிரமைக்குக் கரணம் பிரமாணம் என்பது பிரமாணத்தின் பொதுவிலக்கணம். உண்மையனுபவவறிவிற்குக் கருவியாயுள்ளது பிரமாணமென்பது பொருள்.

௪௦. தேருங் கரணஞ் சிறப்புக் கருவி.

(இ - ள்.) கரணமாவது சிறப்புக்காரணம். (எ - று.)

கரணமாவது. எ - து. கரணத்தினிலக்கணங்கூறுகின்றது. சாதாரணகாரணமாகிய காலம் திக்கு முதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குச் 'சிறப்புக்காரணம்' எனப்பட்டது.

௪௧, இன்றி யமையா தேய்கா ரியத்தின்
முன்னிற் பதுவே காரண மொழியிற்
பிறிதோ ராற்றுற் பெறப்படா தாற்பிற.

(இ-ள்.) காரணம் காரியத்திற்கு நியதமாய் முன்னிற்பது.எ-று.

காரணம். எ-து. காரணத்தினிலக்கணங்கூறுகின்றது. கழுதை முதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்கு 'முன்னிற்பது' என்றொழியாது 'நியதமாய்' என்றும், காரியத்தின் அதிவியாத்தி நீக்குதற்கு 'நியதமாய்' என்றொழியாது 'முன்னிற்பது' என்றும், கூறப்பட்டது. 'நியதம்' இன்றியமையாமை. அற்றேல், நூலுருவமும் ஆடையைக்குறித்துக் காரணமாலோவெனின்;—அற்றன்று, பிறிதோராற்றாற் பெறப்படாததாயென்னும் அடைகொடுக்கற்பாற்றாகலின். பிறிதோராற்றாற் பெறப்படாமை பிறிதோராற்றாற் பெறப்படுதலின்மை. பிறிதோராற்றாற் பெறப்படுதல் மூவகைத்து. எதனோடு கூடியே எதனைக்குறித்து முன்னிற்பதென்று உணரப்படுவதுயாது அஃது அதனைக்குறித்து அதனாலே பிறிதோராற்றாற் பெறப்படுவது: அது நூலோடு கூடி நூலுருவமும் நூற்றன்மையும் ஆடையைக் குறித்து முன்னிற்பதென்று உணரப்படுவது, ஒன்று. பிறிதொன்றனைக்குறித்து முன்னிற்றலுணர்ந்துழி எடுத்துக்கொண்டதனைக் குறித்து முன்னிற்றலுணரப்படுவதியாது அஃது அவ்வெடுத்துக்கொண்டதனைக் குறித்துப் பிறிதோராற்றாற் பெறப்படுவது: அஃது ஆகாயம் ஓசையைக்குறித்து முன்னிற்றலுணர்ந்துழிக் குடத்தைக்குறித்து ஆகாயம் முன்னிற்பதென்றுணரப்படுவது, ஒன்று. மற்றவிடங்களிலே நியதமாய் முன்னிற்பது இதுவென்று துணியப்பட்டதனாற்றானே காரியந்தோன்றுழி அதனோடு உடனிகழ்வது பிறிதோராற்றாற் பெறப்படுவது: அது பாகத்தாற்றோன்றும் நிலத்து உருவத்தின் முன்னபாவம் நாற்றத்தைக்குறித்து முன்னிற்பதென்பது, ஒன்று. ஆகமூன்றுந் தெரிந்துகொள்க. இங்ஙனங் கூறியவாற்றாற் பிறிதோராற்றாற் பெறப்படாததாய் இன்றியமையாது முன்னிற்பது காரணமெனக் கொள்க.

*கழுதைமுதலியவற்றின்கண் அதிவியாத்திவரும் என்றது குடத்தைநோக்க மண்கொணருங் கழுதைமுதலியவும் முன்னிற்பவாகலின். காரியத்தின் அதிவியாத்திவரும் என்றது, காரியமுந் தனக்குத்தானே நியதமாகலின் அஃதாவது காரியமுந் தன்னையின்றித் தானிருப்பதன்மையான்.

*உணரப்படுவது பெறப்படுவது என ஒட்டுக.

*அதனாலே-எதனொடு கூடிநின்றதோ அதனாலே; பற்றுக்கோடாவதனாலே.

*ஓசையைக்கிளந்தெடுத்துக் கூறியது ஆகாயந் தன்குணமாய ஓசைக்குச் சமவாயிகாரணமாகலின் அதற்கு ஆகாயம் முன்னிற்பதாவது தானே பெறப்படுதலான். திரவியங் குணத்திற்குச் சமவாயிகாரணம் என்பது சமவாயங் கூறுமிடத்தும் பெறப்படுவதறிக. மற்றவிடம்-உடனிகழ்ச்சியில்லாவிடம். துணியப்பட்டதனாற்றானே பிறிதோராற்றாற் பெறப்படுவதென ஒட்டுக. உடனிகழ்வது பிறிதோராற்றாற் பெறப்படுவது. என்னை? உடனிகழ்வதை முதனிகழ்வதொன்றன் காரியத்திற்கு முன்னிற்பதென்பது, அம்முதனிகழ்வது தன்காரியத்திற்குத் தான்முன்னிற்பதென்பது துணியப்பட்டதன்பின் அதனாற்பெறப்படுவதாகலான் என்க. உதாரணத்தின்கண் துணியப்பட்டதாவது நாற்றத்தின் முன்னபாவமாதலும், உடனிகழ்வதாவது நிலத்து உருவத்தின் முன்னபாவமாதலும் கண்டுகொள்க. உருவத்தின் முன்னபாவம் நாற்றத்தைக் குறித்துமுன்னிற்பது என்பது காரியம் முறையானன்றி ஒருங்கேதோன்றுழி வருவது. பிறவுமன்ன.

சஉ. காரியந் தானே கருதின் முன்னே
யின்மைக் கெதிர்மறை என்மனார் புலவர்.

(இ - ள்.) காரியம் முன்னின்மைக்கு எதிர்மறை. (எ - து.) காரியம். (எ - து.) காரியத்தினிலக்கணங்கூறுகின்றது.

௪௯. முதலே சார்பே மொழியு நிமித்த
மேதிவை மூன்று மெனப்படு மவற்று
ளதுவது வாவ தாமுதற் காரணங்
காரியத் துடனுக் காரணத் துடனும்
பேரார் பொருளிற் பிறிவற நின்றுங்
கேது வாவ தெணிற்சார் பேது
நிகழ்த்திரண் டலது நிமித்த மென்ப.

(இ - ள்.) அக்காரணம் சமவாயி, அசமவாயி, நிமித்தம் என்னும் வேறுபாட்டால் மூவகைத்து. எதன்கண் ஒற்றித்துக் காரியம் தோன்றும் அது சமவாயிகாரணம்: அஃதெங்ஙனம், நூல்கள் ஆடைக்குச் சமவாயிகாரணம். ஆடையும் தன்னையடைந்த உருவமுதலியவற்றிற்குச் சமவாயிகாரணம். காரியத்துடனாகத்தான் காரணத்துடனாகத்தான் ஒருபொருளிற் சமவேதித்துக் காரணமாயிருப்பது அசமவாயிகாரணம்: அஃதெங்ஙனம், நூலியைபு ஆடைக்கு, நூலுருவம் ஆடையுருவிற்கு, அசமவாயிகாரணம். அவ்விரண்டின் வேறாய காரணம் நிமித்தகாரணம்: அஃதெங்ஙனம், ஆடைக்குநாடா வேமா முதலியன. இங்ஙனங் கூறிய மூவகைக்காரணத்துள் யாது சிறந்த காரணம் அதுவேகரணம். (எ - று.)

*சமவேதித்து, சமவாயசம்பந்தத்தான் இருந்து, நீக்கமின்றி நின்று, ஒற்றித்து என்பன ஒருபொருட்கிளவி. முதற்காரணம் ஒழிந்தவற்றுள், கருத்தர் நிமித்தகாரணம், ஏனையதுணைக்காரணம் என்பதமிழ்நூலாசிரியர்,

அக்காரணம். எ - து. காரணத்தைப் பகுக்கின்றது.

எதன்கண். எ-து. சமவாயிகாரணத்தினிலக்கணங் கூறுகின்றது.

காரியத்துடன். எ - து. அசமவாயிகாரணத்தினிலக்கணங் கூறுகின்றது.

நூலியைபு. எ - து. 'காரியத்துடன்' என்பதற்கு உதாரணங் கூறுகின்றது. தன்காரியமாகிய ஆடையோடும் ஒருநூலின்கட் சமவேதித்திருத்தலான், நூலியைபு ஆடைக்கு அசமவாயிகாரணமென்றவாறு.

* ஈண்டுததன், இயைபின்மேற்று, முன்னர் வருவது உருவின்மேற்று.

நூலுருவம். எ - து. 'காரணத்துடன்' என்பதற்கு உதாரணங் கூறுகின்றது. தன்காரியத்தின் சமவாயிகாரணமாகிய ஆடையுடன் ஒருநூலின்கட் சமவேதித்திருத்தலான், நூலுருவம் ஆடையுருவிற்கு அசமவாயிகாரணமென்றவாறு.

அவ்விரண்டின். எ - து. நிமித்தகாரணத்தினிலக்கணங் கூறுகின்றது. சமவாயிகாரணம், அசமவாயிகாரணமாகிய இரண்டின் வேறாகிய காரணமென்றவாறு.

இங்ஙனங் கூறிய. எ - து. கரணத்தினிலக்கணம் முடிந்தது முடித்தலென்னுமுத்தியாற் கூறுகின்றது.

## பிரத்தியக்ஷப்பிரமாணம்.

௪௪. காட்சி யுணர்வின் கருவி காண்டல்
புகலுங் காட்சி பொறியோர் புலனை
மருவு மியைபான் மன்னு முணர்வே

யஃதடை யில்ல தடையுள தென்ன
விருவகைத் தாகி யியலு மென்ப.

(இ - ள்) அக்கரணம் நான்கனுள், காண்டலாவது புலப்படக் காணுங் காட்சியறிவிற்குக் கரணம். காட்சியறிவு இந்திரிய விடய சம்பந்தத்தாற்றோன்றும் ஞானம். அது நிருவிகற்பகம், சவிகற்ப கம் என இருவகைத்து. அவற்றுள், நிருவிகற்பகம் விசேடணமின் றித்தோன்றும் ஞானம். சவிகற்பகம் 'இவன் சாத்தன்' 'இவன் கரியன்' 'இவன் பார்ப்பான்' என விசேடணத்தோடு தோன்றும் ஞானம். எ - று.

*காண்டலாவது இந்திரியவிடயசம்பந்தம். காண்டல் செய்கை. காட்சி காரியம்.

அக்கரணம் நான்கனுள். எ-து. காண்டலளவையினிலக்கண ங்கூறுகின்றது

காட்சியறிவு. எ - து காட்சியறிவினிலக்கணங்கூறுகின்றது. இந்திரியம் கண் முதலியன. விடயம் குடமுதலியன. அவ்விரண் டன்சம்பந்தம் சையோகமுதலியன. அச்சையோகமுதலியவற் றாற் பிறந்தவுணர்வென்பதாம்.

அவற்றுள், நிருவிகற்பகம். எ - து. நிருவிகற்பக்காட்சியிலக்க ணங்கூறுகின்றது. விசேடணவிசேடியங்களின் சம்பந்தங்கவராத வுணர்வென்றவாறு. அற்றேல், நிருவிகற்பகம் உண்டென்பதற்குப் பிரமாணம் என்னை யெனின்;—'ஆத்தன்மையான் அடையடுத்த ஆவென்னும் விசேடியஞானம் விசேடண ஞானத்தாற் றோன்றற் பாலது, விசேடியஞானமாகலின், குழையனென்னு ஞானம்போ லும்' என்னும் அனுமானமே பிரமாணமென்க. விசேடண ஞான

மும் சவிகற்பகமெனின் வரம்பின்றி யோடுமாகலின், நிருவிகற்பக முண்டென்பது பெறுதும்.

*நிருவிகற்பகம் உண்டென்பது பெறுதும் என்றது அனுமானத்தாற் றுணியப்படும் விசேடணஞானமே நிருவிகற்பகம் என்பது போதருதலான்.

சவிகற்பகம் எ - து. சவிகற்பகத்தினிலக்கணங்கூறுகின்றது. பெயர் சாதி முதலிய விசேடணவிசேடியங்களின் சம்பந்தங் கவரும் ஞானமென்பதாம். 'இவன்சாத்தன்' 'இவன்கரியன்' என்றது சவிகற்பகத்துக்கு உதாரணம்.

(சரு) காட்சி யறிவின் கருவி யாய
பொறிபுலன் கூடப் பொருந்துங் கிழமை
யறுவகைத் தென்ப வறையுங் கிழமை
யுயிரார் புணர்ச்சி யொற்றுமை யிரண்டா
னியைவன மூன்றோ டெய்துறு தன்மை
யென்பன வாறு மெண்ணினர் கொளலே

(இ-ள்.) காட்சியறிவிற்கேது இந்திரிய விடய சம்பந்தம். சம்பந்தமெனினும், இயைபெனினும், யாப்பெனினும், கிழமையெனினும் ஒக்கும். அச்சம்பந்தம் சையோகமும், சையுத்தசமவாயமும், சையுத்தசமவேதசமவாயமும், சமவாயமும், சமவேதசமவாயமும், விசேடணவிசேடியத்தன்மையும் என அறுவகைப்படும். கண்ணினாற்குடத்தைக் காணுங்கால் சையோகசம்பந்தம். குடவுருவத்தைக்காணுங்கால் சையுத்தசமவாயம், கண்ணொடுசையுத்தமான குடத்தில் உருவம் சமவாயமாதலாலென்க. உருவத்தன்மைப்பொதுமையைக் காணுங்கால் சையுத்தசமவேதசமவாயம், கண்ணொடுசையுத்தமான

குடத்தில் உருவஞ் சமவேதம், உருவத்தில் உருவத்தன்மை சமவாய மாதலாலென்க. செவியாற் சத்தத்தை உணருங்கால் சமவாய சம்ப ந்தம்; செவித்துளையிலிருக்கும் ஆகாயமே சோத்திரமாதலால் சத் தம் ஆகாயகுணமாதலிற் குணகுணிகட்குச் சமவாயம் உண்மையா னெனவுணர்க. ஓசைத்தன்மையை உணருங்கால் சமவேதசமவா யம், சோத்திரத்திற் சமவேதமானசத்தத்திற் சத்தத்தன்மை சமவா யமாயிருத்தலானென்க. அபாவத்தைக் காணுங்கால் விசேடண விசேடியத்தன்மைச் சம்பந்தம். 'குடமில்லது இப்பூதலம்' என்பு ழிக் கண்ணொடு சையுத்தமான பூதலத்திற் குடமின்மை விசேடண மாயும் 'பூதலத்திற் குடமில்லை' என்புழிக் குடமின்மை விசேடிய மாயும் இருத்தலானென்க. இங்ஙனங் கூறிய ஆறுசம்பந்தத்தி னும் தோன்றும் உணர்வு காட்சி. அதற்குக்கரணம் இந்திரியம். அதனால் இந்திரியமே காண்டலளவை யென்பது பெறப்பட்டது (எ - று.)

*சையுத்தம், புடைபெயர்ச்சியின் றிச சையோகசம்பந்தத்திற்கு இடனாவது. சையோகம் தருமம். சையுத்தம் இயல்பி. சம்வேதம் சமவாய சம்பந்தத்தானிருப்பது. சமவேதம் இயல்பி. சையுத்த மான—புணர்க்கப்பட்டதான. சையுத்தசமவாயம் என்றது ஓர் இயைபியல்லது இரண்டுசம்பந்தந்தம்மிற்கூடி நிற்பதின்மையின். சமவாயமாதல், சமவாயமாயிருத்தல் - சமவாயசம்பந்தத்தானிரு த்தல் என்றவாறு.

அச்சம்பந்தம். எ - து: இந்திரிய விடய சம்பந்ததத்தைப் பகுக்கி ன்றது.

கண்ணினால். எ - து. சையோகசம்பந்தத்திற்கு உதாரணங்கூறுகின்றது. திரவியக்காட்சியில் யாண்டுஞ் சையோகமே சம்பந்தமென்பதாம். ஆன்மா மனத்தோடும், மனம் இந்திரியத்தோ

டும், இந்திரியம் பொருளோடுங்கூடும்; அதனாற்காட்சியுணர்வு நிகழுமெனவுணர்க.

*இந்திரியம் பொருளோடுங் கூடும் என்றதனுனும் பதார்த்தம் பொருள் எனப்படுவதறிக.

குடவுருவத்தை. எ - து. சையுத்தசமவாயத்திற்கு உதாரணங் கூறுகின்றது.

கண்ணோடு. எ - து. அதற்கேதுக்கூறுகின்றது.

உருவத்தன்மைப்பொதுமையை. எ - து. சையுத்தசமவேத சமவாயத்திற்கு உதாரணங்கூறுகின்றது.

செவியால். எ - து. சமவாயத்திற்கு உதாரணங்கூறுகின்றது.

செவித்துளையில். எ - து. அதனைத்தெரித்துணர்த்துகின்றது. அற்றேல், சேய்மைக் கண்ணதாகிய ஓசை செவியின்கட்சம்பந்திப்பது எவ்வாறெனின்;— வீசிதரங்கநியாயத்தானுங் கதம்பமுகுள நியாயத்தானும் வெவ்வேறோசையைத் தோற்றுவிக்கு முறையானே செவிப்புலத்தின்கட்டோன்றிய ஓசைக்குச் செவிச்சம்பந்த முண்மையாற் காட்சியுணர்வு நிகழுமென்க.

*வீசிதரங்கம், ஓசை ஓர் முகமாய் ஒன்றை ஒன்று தோற்று வித்துச் சேறற்கும், கதம்பமுகுளம், ஓர்முகமாயல்லது எப்புறத் தும் அவ்வாறு சேறற்கும் உதாரணம் என்க.

*வெவ்வேறு ஓசையைத் தோற்றுவிக்கும் எனவே, ஓரோசை ஒன்றாய் நீடித்து நில்லாதுஎன்பது போதரலின் இரண்டாம் ஓசை முதலியனவாய் வேறுபட்டுவரும் என்பது பெறப்படுதல் அறிக.

ஓசைத்தன்மையை. எ - து. சமவேதசமவாயத்திற்கு உதாரணங்கூறுகின்றது.

அபாவத்தை. எ - து. விசேடண விசேடியத்தன்மைக்கு உதாரணங் கூறுகின்றது.

குடமில்லது. எ-து. அதனைத் தெரித்துணர்த்துகின்றது. இதனானே அனுபலத்தி வேறுபிரமாணமென்பதூஉம் மறுக்கப்பட்டது. 'ஈண்டுக்குடமுண்டாயின் இப்பொழுது நிலம்போலக்காணப்படவேண்டும், காட்சியின்மையான் இல்லை' என்றுதர்க்கஞ்செய்யப்படும் எதிர்மறைப்பொருளினுண்மையினுணர்வு பெறாமையோடுகூடிய இந்திரியத்தானே அபாவவுணர்வு தோன்றுதலின், அனுபலத்திவேறுபிரமாணமென்றல் பொருந்தாமையுணர்க, இடமுணர்தற்பொருட்டு வேண்டப்படும் இந்திரியமே காரணமாயவழி அனுபலத்தி கரணமென்றல் பொருந்தாமையின். விசேடணவிசேடியத்தன்மை விசேடணவிசேடிய சொரூபமேயன்றி வேற்றுச்சம்பந்தமன்று.

*ஈண்டுக்குடமுண்டாயின் என்பதடியாய்ப் போந்தவாக்கியம் மேலதற்கு விளக்கமாவதறிக. "காட்சியின்மையின் இல்லை" என்பதன்கண் இல்லை யென்பதற்குப் பிரமாணமாய் நிற்பதாய காட்சியின்மையே அனுபலத்தி எனப்படுவதென்க. காட்சியின்மை - எதிர்மறைப்பொருளினுண்மையினுணர்வு பெறப்படாமை. அபாவவுணர்வு இல்லையென்னுமுணர்வு. பாயிரத்துப்பார்க்க. அனுபலத்தி அன்னதாவது, அதுவேறுபிரமாணமென்பதை மறுக்குமாறு கூறுவதன்கண் தெரியக்கிடப்பித்தமையினறிக. வேறுஒருகுத்து ஓதற்பாலதொன்றை இவ்வாறு மற்றொன்று கூறுவதன்கண் விளங்கவைத்துரைத்துப்போவது உடம்பொடுபுணர்த்தல் எனப்படுவது என்க.

*வேற்றுச்சம்பந்தம் பண்புத்தொகை. வேறாயசம்பந்தம் எனவிரியும். அன்றுஎன்றது அபாவத்தைக் காண்டற்கு வேண்டப்படும் சம்பந்தமாய விசேடணவிசேடியத்தன்மை அவ்வபாவத்தின் வேறா

வதன்மையான். சொரூபமாவது ஒன்றற்கு வடிவமாவதொன்று என்பது.

இங்ஙனம். எ - து. காட்சியுணர்வு முடிந்ததுமுடித்தலென்னு முத்தியாற்கூறி, அதற்குக் கருவி கூறுகின்றது. சிறப்புக் காரணமாகலின், இந்திரியம் காட்சியுணர்விற்குக் கருவியென்றவாறு.

அதனல். எ - து. காண்டலளவை முடிந்ததுமுடித்தலென்னுமுத்தியாற் கூறுகின்றது.

## அனுமானப்பிரமாணம்.

௪௬. கருதல் கருவி கருத்துணர் விற்குக்
கருத்துணர் வாக்குங் கருத லோரி
னின்றி யமையா தீண்டே னிகழ்ச்சி
யொன்ற மிடைந்து நிறைவ தோர்பா
லிருப்ப துணர்வ தெனுமா ராய்ச்சி
யாங்கது தீயி னடங்கிய புகையினை
யிம்மலை யுடைய தென்னு முணர்வா
மிம்மலை தீயுடைத் தென்னு முணர்வவ்
வாராய்ச் சியினு லுவ ததுவே
கருத்துணர் வென்னக் காட்டு நூலே.

(இ-ள்.) இனி அனுமானமாவது அனுமிதிக்குக் கரணம். அனுமிதி ஆராய்ச்சியாற்றோன்றும் ஞானம். ஆராய்ச்சி வியாத்தியடுத்த பக்கதருமத்தன்மை ஞானம்: அது 'வன்னியின் வியாப்பியமான புகையுடையது இம்மலை' என்னும் ஞானம். அவ்வாராய்ச்சியாற்றோன்றியது 'இம்மலை தீயுடைத்து' என்னும் உணர்வு. அதுவே

அனுமிதியென்க. வியாத்தி 'யாண்டுப் புகை ஆண்டுத்தீ' என நியதமான உடனிகழ்ச்சி. பக்கதருமத்தன்மை வியாப்பியமான புகை மலை முதலிய பக்கத்தினிருத்தல். எ - று.

*வியாத்தி யடுத்த, இதன்பொருள் முன்னுரையின் வருங் காண்க. தருமம் என்றொழியாது தருமத்தன்மை எனத்தன்மைமேல் வைத்துக் கூறியது அத்தன்மை உடையதனைத்தும் உள்ளுறுத்தற் பொருட்டு. இவ்வாறு கூறுவது இந்நூற்கோர்மரபாவதறிக.

இனி அனுமானம். எ - து. அனுமானவிலக்கணங்கூறுகின்றது.

அனுமிதி. எ - து. அனுமிதியிலக்கணங் கூறுகின்றது. அற்றேல், 'குற்றியோ மகனோ' என்னும் ஐயத்தின் பின்னர் 'மகன்மையான் வியாபிக்கப்படுங் கை கான்முதலியன வுடையன் இவன்' என்னும் ஆராய்ச்சியான் 'மகனே' என்னுங் காட்சியுணர்வு பயத்தலின் ஆண்டு அனுமிதியணர்வே பயப்படுதெனின், 'மகனைப் புலப்படக்காண்கின்றேன்' எனப்பின்னிகழுமுணர்விற்கு மாறுகோடலின், அதன் 'ஆராய்ச்சியாற்றோன்றும் ஞானம்' என்னும் இலக்கணத்திற்கு ஐயத்தின் பின்னர்த்தாகிய காட்சிக்கண் அதிவியாத்தி வருமாலோவெனின்;— அற்றன்று, பக்கத்தன்மையோடு கூடிய ஆராய்ச்சியாற் றோன்றும் ஞானமென்பது கருத்தாகலின். பக்கத்தன்மையாவது துணிதல்வேட்கையில்லாமையோடு கூடிய துணிபொருட்பெறுதியின்மை. துணிபொருட்பெறுதி அனுமிதியுணர்விற்குத்தடை, துணிதல்வேட்கை அதற்குமாற்று, பெறுதியுள்ளவழியும் 'அனுமிப்பேன்' என்னும் வேட்கையான் அனுமிதியுணர்வு நிகழக் காண்டலின், நெருப்பின்சூட்டைத்தடுப்பது மணி, அதற்கு மாற்று மந்திரமாதல்போலுமென்க. எனவே, மாற்றின்மையொடு

கூடியமணியின் அபாவம் சுடுதற்காரணமாதல்போலத் துணியும் விருப்பமில்லாமையோடு கூடிய பெறுதியின்மையும் அனுமிதியுணர்விற்குக்காரணமாதல் பெறப்பட்டது.

* வியாபிக்கப்படும்—உள்ளூறுத்தப்படும், அகப்படுத்தப்படும். பயத்தலின் வரும் எனவும் மாறுகோடலின் வரும் எனவும் ஒட்டுக. அதன் இலக்கணம் என இயையும். அதன்,அனுமிதியின். ஆராய்ச்சியாற் பெறப்படுவதனைக் காட்சி என்பது யாஙஙனமெனிற், குற்றியோமகனோ என்புழி அஃது இனிது விளங்காதேனும் கண்ணிற்குத் தோன்றாத தன்மையான். ஆராய்ச்சியாற்றோன்றும் ஞானம் என்றதற்குக் கருத்தாகலின் என ஒட்டிக்கொண்டுணர்க.

* பக்கத்தன்மை—பக்கத்தினது தன்மை. பக்கம், முன்னர் வருங காண்க.

* புலப்படக் காணப்பெறுவது துணிபொருட்பெறுதி என்பதூஉம், ஆராய்ச்சியான் அனுமிதிபெறற்குத் துணிபொருட்பெறுதி தடை என்பதூஉம் மேலுதாரணத்தின்கட் பெறப்படுதல் காண்க.

*பெறுதி தடையாகலின், துணிபொருட்பெறுதியின்மையொடுகூடிய ஆராய்ச்சியென்றொழியாது துணிதல் வேட்கையின்மையொடுகூடிய துணிபொருட் பெறுதி என்றது எற்றிற்காலோ வெனின், துணிதல் வேட்கை உளதாயின், ஆராய்ச்சியான் அனுமிதி பெறுதற்குத் தடையாய பெறுதியுள்வழியும், அதனானே அனுமிதி பெறப்படுதலின், ஆராய்ச்சியே கருவி என்பதூஉம் துணிபொருட் பெறுதிதடைஎன்பதூஉம் பொருந்தாமையொடு பக்கத்தின் இலக்கணத்திற்குக் குற்றமும் வருதலான்.

ஆராய்ச்சி. எ-து. ஆராய்ச்சியிலக்கணங் கூறுகின்றது. வியாத்தியை விடயமாகவுடைய பக்கதருமத்தன்மை ஞானம் யாது அது

ஆராய்சசி என்பதாம். 'அது' என்பது ஆராய்சசியைத் தெரித்துக் காட்டியவாறு. 'அவ்வாராயசசியால்.' எ-து. அனுமிதியுணர்வினைத் தெரித்துக்காட்டியவாறு.

வியாத்தி எ - து. வியாத்தியிலக்கணங்கூறுகின்றது.

'யாண்டெப்புகை' எ - து. வியாத்தியைத் தெரித்துக்காட்டியவாறு. 'நியதமான உடனிகழ்சசி' எ - து. இலக்கணம். 'உடனிகழ்ச்சி' ஒருநிலைக்களததிருத்தல். அதுநியதமாதல் ஏதுவினிலைக்களத்துளதாகிய முழுதுமபாவத்திற்கு எதிர்மறையாகாத துணிபொருளினிலைக்களத்துளதாதல். அதுவே வியாத்தியென்பதாம்.

*ஏதுவின் துணிபொருளினிலைக்களத்துளதாதலை நியதமாதல் என்றது அந்நிலைக்களம் இன்றியமையாதுநிற்கும் ஏதுதுணிபொருள்களை உடைத்தாவதாகலின், ஆண்டுஉடனிகழ்சசி உளதாவதின்மை பெறப்படுமாறின்மையான். முழுதுமபாவத்திற் கெதிர்மறையாகாத, இன்றியமையாத, இல்லாதிருத்தல்கூடாத, விட்டுநீங்கமாட்டாதவென்பன ஒருபொருண்மேலன. பாயிரம் பார்க்க.

பக்கதருமம். எ - து. பக்கதருமத்தன்மை இன்னதென்கின்றது.

சஎ. சாரா ராய்ச்சி தனக்கே பிறர்க்கென்
றிருவகைத் தாகி யியலு மென்ப.

(இ - ள்) இவ்வனுமானம் தன்பொருட்டனுமானம், பிறர்பொருட்டனுமானம் என இருவகைத்து. எ - று

இவ்வனுமானம். எ-து. அனுமானத்தைப் பகுக்கின்றது.

சஅ. தனக்கா ராய்ச்சி தானடுத் தடுத்து
மனைக்கடுக் களைமுதற் காண்ட லானே

பாண்டுப் புகையுண் டாண்டுத் தீயுண்
டெனத்துணி பொருளோ டேது விரண்டிற்
கின்றி யமையா தெய்துட னிகழ்ச்சி
கண்ட வுணர்வு கருத்தி னிருந்தோ
ரேதுத் தோன்றுழி யெழும்ப வதன்பி
னிது துணி பொருளி னிடைப்படு மேது
வுறுவ தென்னு முணர்வா மஃதே
குறியா ராய்ச்சி கூறுங் காலே.

(இ - ள்.) தன்பொருட்டனுமானம் தனக்கு அனுமிதி ஞானம் விளங்குதற்குக் காரணம்: அங்ஙனமன்றே, ஒருவன் தானே அடுத்தடுத்துக்காண்டலால் 'யாண்டுப்புகை ஆண்டுத் தீயுண்டு' என அடுக்களை முதலியவற்றின் அவ்விரண்டற்கும் வியாத்தியை உணர்ந்து, மலையின் அண்மைக்கட்சென்றான்; ஆண்டுச்சென்றுழி 'இம்மலையில் தீ யுண்டோ இல்லையோ' என ஐயுற்றான்; அம்மலையின் மேற் புகையைக்கண்டுழி 'யாண்டுப்புகை ஆண்டுத் தீ' என்னும் வியாத்தி நினைவு நிகழும். அந்நினைவுநிகழ்ந்தபின்னர், 'வன்னியின் வியாப்பியமான புகையையுடையது இம்மலை,' என்னுமுணர்வு தோன்றும்: அதுவே இலிங்கபராமரிசமெனப்படும். அதனால் 'இம்மலை நெருப்புடைத்து' என்னும் அனுமிதிஞானம் தோன்றும். இது தன்பொருட்டனுமானமென்க. இலிங்கபராமரிச மெனினும் குறியாராய்சியெனினும் ஒக்கும். எ - று.

* தனக்கு என்றது பிறரானல்லது தன்னானே தனக்கு என்றவாறு.

ஒருவன். எ - து. தன்பொருட்டனுமானத்தைத் தெரித்தலைக் காட்டுகின்றது. அற்றேல், 'யாண்டுப்பிருதிவியின் கூருந்தன்மை ஆண்டு இரும்பாற்போழற்பாலதாந்தன்மை,' என்றற்றொடக்கத்து உடனிகழ்ச்சி பலகாற்கண்டுழியும் வயிரமணி முதலியவற்றிற் பிற ழக் காண்டலின், அடுத்தடுத்துக்காண்டலால் வியாத்தி கவர்தல் யாண்டையதெனின்;— அற்றன்று, பிறழ்ச்சி யுணர்வின்மையொடு கூடிய உடனிகழ்ச்சியுணர்வே வியாத்தியைத் தெரிவிப்பதாகலின். பிறழ்ச்சியுணர்வு துணிவும் ஐயமுமென இருவகைத்து. அவற்றுள், துணிவு இயல்பானே தெரிந்து நீக்கப்படும். ஐயப்பிறழ்ச்சி தருக் கத்தாற்றெரிந்து நீக்கப்படும். புகைதீக்களின் வியாத்தியுணர்தற் கட்பிறழ்ச்சியையப்பாடு நீக்குவது காரியகாரணத்தன்மைக்குக் கேடு வருமென்னுந் தருக்கமாமென்க. அற்றேல், உலகத்துள்ள எல்லாப் புகைதீக்களும் காட்சிப்படாமையின் வியாத்தியுணர்ச்சி யாண்டைய தெனின்;— அற்றன்று, புகைத்தன்மை தீத்தன்மை யாகிய அவற்றின் பொதுமைச்சாதி உணரப்படுதலின் எல்லாப் புகை தீக்களினுணர்வும் நிகழுமாகலினென்க. 'அதனால்' என்பது இலிங்கபராமரிசத்தான் என்றவாறு.

* அடுத்தடுத்துக்காண்டலான் வியாத்தி கவரப்படும் என்பது மேலே வருவதறிக.

* பிறழ்ச்சியின்மையொடுகூடிய உடனிகழ்ச்சியுணர்வேவியாத் தியைத் தெரிவிப்பது என்றது, மேலுதாரணத்தின்கண் ஏது துணி பொருளின்றி யிருப்பதாதலின் முன்னர்ப் பலகாற் காணப்பட்ட உடனிகழ்ச்சிக்குப் பிறழ்ச்சியுண்மை எய்துதலின் அஃது இன்றி யமையாதாதல் பெறப்படாமையான்.

* பிறழ்ச்சி - ஒருமுறைபற்றி நிகழாமை, தவறு, அஃதாவது ஈண்டுப் பலகாற்காணப்பட்ட உடனிகழ்ச்சி ஓரோவிடத்துக் காணப்படாமை; அல்லதூஉம் ஏது துணிபொருளுள்வழியேயன்றி இல்வழியும் உளதாவது. இயல்பானே ஓர்வாயிலானன்றித்தானே என்பதாம்.

* பிறழ்ச்சியையப்பாடாவது புகையுள்வழித்தீயுளது என்பதனுன் உளதாமுடனிகழ்ச்சிக்கு யாண்டாயினும்பிறழ்ச்சி உண்டாங்கொலோ என்பது. அவ்வையப்பாட்டை நீக்குவது தருக்கம், அஃதாவது பிறழ்ச்சியின்மையைத் துணிவிப்பது தருக்கம் என்றது, தீயின்றுயிற் புகையுமின்றுதல்வேண்டும் என்னுந் தருக்கத்தான், விட்டுநீங்காமை, அஃதாவது ஏது துணிபொருளின்றியிராமை உணரப்படுதலின், ஆண்டு உடனிகழ்ச்சிக்குப் பிறழ்ச்சி உளதாமாறின்மையான்.

* எனவே பிறழ்ச்சியின்றி உடனிகழ்ச்சியின்றியமையாததாய வியாத்தியாவது ஏது துணிபொருளின்றியிராமையானல்லது எய்துமாறின்மைகாண்க. இவ்வாறு வியாத்தி ஏது துணிபொருளின்றியிராமையினுனுகற்பாலதென்பது இதனினுய்த்து என்பதுபட வருவதறிக. பிறழ்ச்சியின்மையானல்லது உடனிகழ்ச்சியின்றியமையாமையும் ஏது துணிபொருளின்றி இராமையினுனல்லது பிறழ்ச்சியின்மையும் உண்டாமாறின்மையுணர்க.

* காரிய காரணத்தன்மைக்குக் கேடுவருமென்னுந் தருக்கம் என்றது தீயின்றுயிற் புகையுமின்றுதல் வேண்டும் என்பதனுற் புகையுமின்றுதல் வேண்டவே புகைகாரியம் தீயதற்குக்காரணம் என்பது பெறப்படாமையான். அத்தன்மை அவற்றிற்கின்றுதலின்மையின் புகையுள்வழித்தீயுளதாதலின்மை எய்தாமை யுணர்க.

தன்மையுடையதனைத்தும் உள்ளுறுத்தற்பொருட்டுத் தன்மைமேல் வைத்துக் கூறுமாபு "பொதுமைசசாதி உணரப்படுதலின் எல்லாப் புகைதீக்களினுணர்வும் நிகழும்" என்பதனானுமுணர்க.

சகூ. பிறர்க்கா ராய்ச்சி பேசிற் றூன்முன்
றொடரே துவினற் றுணிவுற் றுணாவைப
பிறருணர் தற்குப் பேணைந் துறுப்பார்
தொடர்மொழி தன்னைச் சொல்லுவ தென்ப.

(இ - ள்.) பிறர்பொருட்டனுமானமாவது தான் புகையால் வன்னியை அனுமித்து, பிறர் உணர்தற்பொருட்டு ஐவகையுறுப்புக்களையுடைய வாக்கியத்தைக்கூறுவது. வாக்கியமெனினும் தொடர்மொழியெனினும் ஒக்கும். அது 'மலை தீயுடைத்து, புகையுடைமையால், யாது யாது புகையுடைத்து அது அது தீ யுடைத்து அடுக்களைபோல. இதுவும் அங்ஙனம், ஆதலின் இங்ஙனம்', என வரும். இதனாற் கூறப்பட்ட இலிங்கத்தாற் பிறருந் தீயுண்டெனத் தெளிவர். (எ - று.)

*அங்ஙனமாவது அடுக்களை உடையதுபோலுடையது. இங்ஙனமாவது துணிபொருளை உடைத்தாவது என்பதாம்.

பிறர்பொருட்டனுமானம். எ - து. பிறர்பொருட் டனுமானங் கூறுகின்றது.

அது. எ - து. ஐவகை யுறுப்புக்களையுடைய வாக்கியத்திற்கு உதாரணங்கூறுகின்றது.

ருO. கோதி லைவகை யுறுப்பவை கூறி
னேது மேற்கோ ளெடுத்துக் காட்டோ
டாருப நயமென் றறைகாட் டொன்றி

முறையின் முடிந்தது முடித்த லிவற்றை
யறிக புகைதீ யடுக்களை மலையான்.

(இ - ள்) ஐவகையுறுப்புக்களாவன, பிரதிஞ்ஞை, ஏது, உதாரணம், உபநயம், நிகமனம் எனவிவை. பிரதிஞ்ஞை, மேற்கோள் என்பன ஒருபொருட்கிளவி. இதனுள் 'மலை தீயுடைத்து' என்பது பிரதிஞ்ஞை. 'புகையுடைமையால்' என்பது ஏது, 'யாது யாது புகையுடைத்து அது அது தீயுடைத்து அடுக்களைபோல' என்பது உதாரணம், 'இதுவும் அங்ஙனம்' என்பது உபநயம், 'ஆதலின் இங்ஙனம்' என்பது நிகமனம் எனவுணர்க. எ-று.

ஐவகை. எ - து. ஐவகையுறுப்புக்களின் பெயர் கூறுகின்றது.

இதனுள். எ-து. எடுத்துக்காட்டிய வாக்கியத்தின்மேற்கோள் முதலிய வைந்தினையும் பகுத்துக்காட்டுகின்றது. பக்கத்தைத் துணிபொருளுடைத்தாகக் கூறுகின்றது மேற்கோள். இன், ஆன் என்னுமுருபீறாக இலிங்கத்தை எடுத்துக்காட்டுவது ஏது. வியாத்தியை எடுத்துக்காட்டுவது உதாரணம். பக்கதருமத்தன்மையுணர்தற் பொருட்டுத் திருட்டாந்தத்தைச்சார்த்திக் கூறுவது உபநயம். முடிந்தது முடித்தல் நிகமனம். மறுதலையின்மை காட்டல்முதலியன நிகமனத்திற்குப் பயனென்க.

௬௧. குறியா ராய்ச்சி கொளற்காங் கருவி
யிருகருத் துணர்விற் கெனலா னதுதான்
கருத்த லளவெனக் கட்டுரைத் தனரே.

(இ - ள்) தன்பொருட்டனுமிதி பிறர்பொருட்டனுமிதி என்னும் இவையிரண்டற்கும் இலிங்கவாராய்ச்சியேகருவி. அதனால் இலிங்கபராமரிசம் அனுமானமெனப்பட்டது. எ - று.

தன்பொருட்டனுமிதி. எ-து. அனுமிதியுணர்விற்குக் காரணங் கூறுகின்றது. அற்றேல், வியாத்திநினைவும் பக்கதருமத் தன்மை யுணர்வுமே அனுமிதியைப்பிறப்பித்தலின் அடையடுத்த ஆராய்ச்சி வேண்டற்பாலதெற்றுக்கெனின்;—அற்றன்று, 'வன்னியின் வியாப் பியமான புகையுடைத்து இது' என்னும் சாத்தபராமரிசத்தின் கண் ஆராய்ச்சி ஒருதலையான் வேண்டற்பாலதாகலின் எளிதாக யாண்டும் ஆராய்ச்சியே காரணமென்றல் பொருத்தமுடைத்தாக லின். இலிங்கமே கரணமாம் பிறவெனின்;— இறந்தது முதலிய வற்றிற் பிறழ்தலான், ஆகாதென்க. வியாபார முடைத்தாகிய கார ணமே கரணமென்பார் மதத்தின் ஆராய்ச்சிவழியான் வியாத்தியு ணர்வு கரணமெனக்காண்க. வியாபாரம் அதனிற்றோன்றி அத னிற்றோன்றற்பாலதனைத் தோற்றுவிப்பது.

* சாத்தபராமரிசம் சத்தத்தாற் பிறப்பதாய பராமரிசம். சாத்த பராமரிசத்தின்கண் என்பது தன்னாற் பெறப்படாது கேள் வியான் அஃதாவது எடுத்துக் கூறப்படும் தொடர்மொழியான் ஆராய்ச்சி பெறுமிடத்து என்றவாறு. ஆண்டு ஆராய்சசி ஒருதலை யான் வேண்டற்பாலது என்றது பிறர் சொல்வதனானல்லது தா னே உணரமாட்டாதானுக்கு வியாத்திநினைவும் பக்கதருமத்தன் மை யுணர்வும் உண்டாமாறின்மையின் ஆராய்ச்சி பிறப்பிப்பதாய வன்னியின் வியாப்பியமான புகையுடைத்து இது என்னுந்தொடர் மொழியானல்லது அனுமிதி பிறக்குமாறின்மையான். எளிதாக என்றது ஆராய்ச்சியின்றாயின் அஃதாவது எது துணிபொருளின் வியாப்பியமானதென்னு முணர்வு பக்கதருமத்தன்மையுணர்வு நிகழுமிடத்தே நிகழாதாயின் உணர்விற்கிடையறவுண்டாகலின் இடையறவுபட்டுநிற்பனவற்றைக் கொண்டு கூட்டி இடர்ப்பட வேண்டுதலான் என்க. சாத்தபராமரிசமே பிறர்பொருட்டனுமா

னத்தின்கண் உபாயம்எனப்படுவது என்பது. இறந்தது முதலியன வாவன;—புகையின்றியும் அதன் சுவடுடையதூஉம், இனிப்புகைவரற்பாலது எனக்கருதப்படுவதூஉம் எனவருவன. வியாபாரமுடைத்தாகிய காரணம் என்றது வியாத்தியை. ஈண்டு வியாபாரமாவது ஆராய்ச்சி என்பது.

அதனால். எ - து. அனுமானத்தை முடிந்ததுமுடித்தல் என்னும் உத்திபாற்கூறுகின்றது.

ருஉ. மறையுடன் பாடே மன்னு மிரண்டு
முறையொருங் கியைந்து முடியு நேர்மறை
யெனக்குறி மூன்று மியலு மென்ப.

(இ - ள்.) இலிங்கம் அந்நுவயவெதிரேகி, கேவலாந்நுவயி, கேவலவெதிரேகி என மூவகைத்து. அந்நுவயம் உடம்பாடு. வெதிரேகம் மறை அந்நுவய வெதிரேகி நேர்மறை. எ - று.

இலிங்கம். எ - து. இலிங்கத்தைப் பகுக்கின்றது.

ருங. இன்றி யமையா தீண்டுட னிகழ்ச்சி
யுடன்பாட் டானு முறுமறை யானுந்
துன்று குறிநேர் மறையெசா லதனை
யடுபுகை யுடைமையி னறிக வினிதே.

(இ - ள்.) அந்நுவயத்தானும் வெதிரேகத்தானும் வியாத்தியுடையது அந்நுவயவெதிரேகி. வன்னியைச சாதிக்குங்கால் புகையுடைமை அந்நுவயவெதிரேகி, 'யாண்டுப்புகை ஆண்டுத்தீ அடுக்களைபோல'என அந்நுவயவியாத்தியும், 'யாண்டுத் தீயில்லை ஆண்டுப் புகையில்லைமடுப்போல' எனவெதிரேகவியாத்தியும் உடைமையின்.

அந்நுவயத்தானும். எ - து. அந்நுவயவெதிரேகியைத்தெரித்துணர்த்துகின்றது. எதுவிற்குந் துணிபொருட்கும் உளதாயவியாத்தி அந்நுவயவியாத்தி, அவ்விரண்டன் அபாவங்கட்கு உளதாய வியாத்தி வெதிரேகவியாத்தியென்றறிக.

*தீயினதின்மை வியாப்பியமாவதூஉம் புகையினதின்மை வியாபகமாவதூஉம் ஒழுகக்காய்ச்சிய இரும்பின்கண் வைத்துணர்ந்துகொள்க.

நிச. உடன்பா டுடையதென் றோதுங் குறிதா
னின்றி யமையா தீண்டட னிகழ்ச்சி
யுடம்பா டொன்றி னுடைய ததனை
மன்பெய ரிட்டு வழங்கற் பால
தெண்ணுக வளக்கற் பாலதின் வைத்தே.

(இ - ள்.) இனி அந்நுவயத்தின்மாத்திரம் வியாத்தியுடையது கேவலாந்நுவயி: அஃதெங்ஙனம், 'குடம் அபிதேயம், பிரமேயத்தன்மையால், ஆடைபோல' எனவரும். ஈண்டுப் பிரமேயத்தன்மை அபிதேயத்தன்மைகட்கு வெதிரேகவியாத்தியின்று, எல்லாப்பொருளும் பிரமேயமும் அபிதேயமுமாதலால். பிரமேயம் அளவையால் அளக்கற்பாலது. அபிதேயம் பெயரிட்டு வழங்கற்பாலது. எ - று.

இனி அந்நுவயத்தின். எ - து. கேவலாந்நுவயியிலக்கணங் கூறுகின்றது. கேவலாந்நுவயியாகிய துணிபொருட்கு இலிங்கம் கேவலாந்நுவயி. முழுதுமபாவத்திற்கு எதிர்மறையாகாமை கேவலாந்நுவயித்தன்மை. இறைவனுணர்விற்கு விடயமாந்தன்மையும் எல்லாம் என்னும் மொழியான் வழங்கற்பாலதாந் தன்மையும் யாண்டுமுண்மையின், அவற்றிற்கு வெதிரேகமின்மையுணர்க.

௫௫. இன்றி யமையா தீண்டுட னிகழ்ச்சி
மறைமாத் திரத்தின் மருவுங் குறியே
மறையுடைத் தென்ன வழங்கப் படுமால்.

(இ - ள்.) இனிக் கேவலவெதிரேகி வெதிரேகத்தின் மாத்திரம் வியாத்தியுடையது: அஃதெங்ஙனம், 'பிருதிவி ஏனையவற்றின் வேறு, நாற்றமுடைமையின், யாது ஏனைப்பொருள்களின் வேறன்று அது நாற்றமுடைத்தன்று அப்புப்போல, இஃது அங்ஙனமன்று. ஆதலின் இங்ஙனமன்று' எனவரும். ஈண்டு 'யாது நாற்றமுடைத்து அது ஏனைப்பொருள்களின் வேறு இதுபோல' என அந்நுவயத்தில் திருட்டாந்தம் இல்லை, பிருதிவிமுழுதும் பக்கமேயாகலின். எ - று.

*கேவலவெதிரேகியாவது அந்நுவயம் இல்லது எனவே கேவலவெதிரேகியாகிய துணிபொருட்கு இலிங்கம் கேவலவெதிரேகி என்றதாயிற்று.

இனிக் கேவலவெதிரேகி. எ - து. கேவலவெதிரேகியிலக்கணங் கூறுகின்றது.

பிருதிவி. எ - து. அதற்கு உதாரணங்கூறுகின்றது. அற்றேல், ஏனையவற்றின் வேறுதல் முன்னர்த் துணியப்பட்டதோ அன்றோ? துணியப்பட்டதெனின் யாண்டுத் துணியப்பட்டது ஆண்டு ஏதுவுண்டாயின் அந்நுவயமுடைத்தாதல் கூடும்; ஆண்டு ஏதுவின்றாயிற் சிறப்பென்னுமநைகாந்திகமாம்; அன்றெனின், துணிபொருளுணர்ச்சியின்மையின் அதனான் விசேடிக்கப்படும் அநுமிதியுணர்வு எங்ஙனந்தோன்றும், விசேடண வுணர்ச்சியின்றி விசேடிக்கப்பட்டதனுணர்வு பிறவாமையின். அன்றியும், எதிர்மறையுண

ர்ச்சியின்மையின் வெதிரேகவியாத்தியுணர்வும் உண்டாகாதாலோ வெனின்;— அற்றன்று, அப்புமுதலிய பதின்மூன்றன்கண்ணும் ஒன்றற்கொன்று வேருந்தன்மை யுளவாமன்றே, அப்பதின்மூன்றன்கண்ணும் தனித்தனி துணியப்பட்ட வேறுதற்றன்மை பின்னர்ப் பிருதிவியின்கண் ஒருங்கு துணியப்படுமாகலினென்க. பதின்மூன்றன்றன்மையானும் வரைந்துகொள்ளப்பட்ட வேறுதற்றன்மை ஒருநிலைக்களத்திராமையின், அந்நுவயமுடைத்தாகாமையும் சிறப்பனைகாந்திகமின்மையுமுணர்க. தனித்தனி நிலைக்களத்து முன்னர்த் துணியப்பட்டதாகலின் துணிபொருள்விசேடணத்தான் அடுத்த அனுமிதியுணர்வுங்கூடும், வெதிரேகவியாத்தியும் உண்டென்க.

*வேறுதல்—வேருந்தன்மை. ஏனையவற்றின் வேறுதல்.ஒன்றுதானொழிந்தவற்றின் வேறுதல். முன்னர், பிருதிவி ஏனையவற்றின்வேறு என்னும் அனுமிதிபிறத்தற்கு முன்னர் என்பது. சிறப்பனைகாந்திகமாம் என்றது, துணியப்பட்டதன்வழி இராதவேது சிறப்பனைகாந்திகம் எனப்படுமாகலின். துணிவிசேடணமாவது ஏனையவற்றின் வேறுஎன்பது. விசேடிக்கப்பட்டதாவது பிருதிவி ஏனையவற்றின் வேறுஎன்பது என்க. ‘அப்புமுதலிய’ என்பதடியாக எழீஇய தொடர்மொழியின் உட்டொடரிரண்டற்கும், ‘பதின்மூன்றன்றன்மையானும்’ என்பதடியாகப் போந்த தொடர்மொழியும் ‘தனித்தனி நிலைக்களத்து’ என்பதடியாக எழுந்த தொடர்மொழியும் எதிர்நிரனிறையா நின்றுவைத்து விளக்கமாவதாய்த்துணர்க. பிறுண்டும் இவ்வாறு வருதலறிந்து கொள்க. தனித்தனியல்லது ஒருங்கே வரைந்துகொள்ளப்பட்ட எனத்தந்துரைக்க. ஒருநிலைக்களத்திராமையின் என்றது, பிருதிவியல்லது வேறொரு நிலைக்களத்தும் அவ்வொருங்கு துணியப்படும்வேறுதற்றன்மை இராமையான்.

*அப்புமுதலிய பதின்மூன்முவன, பாவபதார்த்தத்துட் பிருதிவியல்லாதன என்பது. தனித்தனி நிலைக்களம் என்றது பிருதிவியல்லதனை. பிருதிவியினு முன்னரே துணியப்பட்டதாயின் பதின்மூன்கன் றன்மையானும் ஒருஙகே வரைந்து கொள்ளப்பட்ட வேறுதற்றன்மைஒருநிலைக்களததிராமையின் அத்தன்மையான் விசேடிக்கப்பட்ட அனுமிதியுண்டாமாறின்மை யுணர்க.

நிசு. ஐய முற்றே யதன்பின் றுணியு
மெய்யுறு பொருட்கிடன் வேறு துணிந்த
பொய்யில் பொருட்கிடன் பொருளி லிடனே
டெய்து மிடன்மூன் றென்றிசி னோரே.

(இ - ள்.) பக்கம் ஐயுற்றுத் துணியும் பொருளுக்கிடன்: அஃதெஙஙனம், புகையுடைமையாகிய ஏதுவில மலை பக்கம். சபக்கம் துணிந்தபொருளுக்கிடன்: அஃதெஙஙனம, அவ்வேதுவில் அடுக்களை. துணிந்த பொருளில்லாவிடம் விபக்கம்: அஃதெங்ஙனம், ஆண்டு மடு. எ - று.

*பதார்த்தமும் பொருள் எனப்படுவது, எல்லாப்பொருள், ஏனைப்பொருள், துணியும்பொருள் எனபனவற்றுனும் ஏய்துவதறிக.

பக்கம். எ - து. பக்கத்தினிலக்கணங்கூறுகின்றது. அற்றேல், வேதவாக்கியங்களான் ஆன்மா உண்டென்பது துணியப்பட்டதாகலின் ஆண்டு ஐயமின்மையிற் கேள்வியின்பின்னர்த்தாகிய சிந்தனைக்கண்ணும், காட்சிப்புலனாகிய நெருப்பின்கண் துணிதல் வேட்கை உளதாயவழி அனுமிதியுணர்வுபிறத்தலின் ஆண்டும், அவ்வியாத்தி வருமாலோவெனின்;— அற்றன்று, முன்னர்க்கூறிய

பக்கத்தன்மைக்குப் பற்றுக்கோடாதல் பக்கத்துக்கு இலக்கணமாகலின்.

*பற்றுக்கோடாகாமையின் அவ்வியாத்தி இன்று என்றதாயிற்று.

*சிந்தனைக்கண்ணும், நெருப்பின்கண்ணும் அவ்வியாத்தி வரும். என்னை? சிந்தனையும் நெருப்பும் ஐயுறற்பாலதற்கிடனாகாது துணியப்பட்டதற்கிடனாகலின். அவை பக்கமாதல், ஐயப்பாடுநீக்குவதற்குச சிந்தனையும், அனுமிதிபிறத்தற்கு நெருப்பும் இடனாதல் பற்றிப் பெறப்படுவதறிக. ஆன்மா உண்டென்பது சிந்தனையின் வைத்துத் துணியப்படுவதனாற் சிந்தனை இடனாகலுணர்க.

சபக்கம். எ - து. சபக்கத்தினிலக்கணங்கூறுகின்றது.

துணிந்த. எ - து. விபக்கத்தினிலக்கணங்கூறுகின்றது.

௫௭. எண்ணிற் கருதுணர் விற்குத் தடையா
முண்மை யுணர்விற் குறுபுல னவ
தின்மை யேதுவென் னேதுப் போலி
பிறழ்ச்சி யுளது பேறில் லாது
மாறு கொள்வது மறுதலை யுளது
மறுப்புடைத் தென்றை வகைய தாமால்.

(இ - ள்.) இனி ஏதுப்போலி சவ்வியபிசாரம், விருத்தம், சற்பிரதிபக்கம், அசித்தம், பாதிதம் என ஐவகைத்து. எ - று.

இனி ஏதுப்போலி. எ - து. இங்ஙனம் உண்மையேதுவைத் தெரித்துணர்த்தி, ஈண்டு இன்மையேதுவைத் தெரித்துக்காட்டும் பொருட்டுப் பகுக்கின்றது. அனுமிதியுணர்விற்குத் தடையாய

உண்மையனுபவவுணர்விற்கு விடயமாதல ஏதுப்போலியிலக்கணம்.

*இன்மை ஏதுஎன்றது போலியாகலான். உணர்வினைத்தடை என்றது அனுமிதியுணர்வினைத் தருவதாதல் போக்குவதாதல் ஏதுவின் உணர்ச்சியல்லது ஏதுவன்மையான் என்பது.

ருஅ. அவற்றுள்:—

பிறழ்ச்சி முடிவு பெருமை பொதுவே
சிறப்பொடு மூன்றுச் செறியு மென்ப.

(இ - ள்.) அவற்றுள், சவ்வியபிசாரம் அனைகாந்திகம், பிறழ்ச்சியுடையது. அது பொதுவும், சிறப்பும், முடிவுபெருமையும் என மூவகைத்து. எ - று.

அவற்றுள். எ - து. அனைகாந்திகத்தினிலக்கணங்கூறுகின்றது. அது. எ - து. அனைகாந்திகத்தைப் பகுக்கின்றது.

*பிறழ்ச்சியாவது ஏது துணிபொருளுள்வழி இருக்கற்பாலது என்னும் நியமத்தின் வேறுபட இருப்பது.

ருகூ. பொருளி லிடத்தும் பொருந்து மேது
பிரிவார் பொதுவென் பிறழ்ச்சிய தாமே.

(இ - ள்.) அவற்றுள், பொதுவனைகாந்திகவேதுப்போலி துணிபொருளில்லாவிடத்தும் இருக்கும் ஏது: அது 'இம்மலை தீயுடைத்து, அளவையான் அளக்கற்பாலதாகலின்' என்பதாம், அளவையான் அளக்கற்பாலதாந்தன்மை தீயில்லாவிடமாகிய நீர்த்தடாகத்தினும் இருத்தலினென்க. எ - று.

அவற்றுள், பொச. எ - து. பொதுவனைகாந்திகத்தினிலக்கணங்கூறுகின்றது.

அது. எ - து அதற்குதாரணங்கூறுகின்றது.

*இவ்வேது தடையாமாறு, அனுமானவதிகாரத்திறுதிக்கணொருங்கு தொகுத்துக் கூறப்படுதலின், அவற்றை ஒவ்வொன்றாக வாங்கிக்கொணர்ந்து ஆங்காங்கொட்டிக்கொண்டுணர்க.

௬0. பொருளுறு மிடனே பொருளில் விடனே
யிருமிட னெல்லா மில்லது சிறப்பே
யிருப்ப தையுறு மிடமாத் திரத்தின்.

(இ - ள்.) சிறப்பனைகாந்திகம் சபக்க விபக்கங்களெல்லாவற்றினும் இல்லாதது: அது 'சத்தம் நித்தியம், சத்தத்தன்மையுடைமையான்' என்பது. சத்தத்தன்மை நித்த அநித்தப்பொருள் எல்லாவற்றினும் இன்றிச் சத்தத்தின் மாத்திரம் இருப்பது. (எ - று.)

சிறப்பு. எ-து.சிறப்பனைகாந்திகத்தினிலக்கணங்கூறுகின்றது

௬௧. முடிவு பெறுமை மொழியின் மறையோ
டெம்பா டிரண்டற் குறுகாட் டிலதால்.

(இ - ள்.) முடிவுபெறுமை அந்நுவயதிருட்டாந்தமும் வெதிரேகதிருட்டாந்தமும் இல்லாதது: அது 'எல்லாப்பொருளும் அநித்தம், அளவையான் அளக்கற்பாலதாகலின்' என்பது. ஈண்டு முழுவதும் பக்கமாயிருத்தலின், திருட்டாந்தமில்லை. (எ - று.)

முடிவுபெறுமை எ - து. முடிவுபெறுமையனைகாந்திகத்தினிலக்கணங்கூறுகின்றது.

௬௨. இலகு துணிபொரு ளில்லா விடத்தின்
விலகா துளதாய் மேவு மேது
குலவு மாறு கொள்வ தெனப்படும்.

(இ - ள்.) இனித் துணிபொருள் இல்லாவிடத்து வியாப்பிய மாயிருக்கும் ஏது விருத்தமென்னும் ஏதுப்போலி: அது 'சத்தம் நித்தியம், காரியப்பாட்டால்' எனவரும், காரியப்பாடு நித்தியமல்லா அழிபொருளில் வியாப்பியமாயிருப்பதாகலின் என்க. (எ று.)

இனித் துணிபொருள். எ-து. விருத்தத்தினிலக்கணங் கூறுகின்றது.

௬௩. துணிபொருண் மறுதலை யாகித் துன்னுந
துணிந்த பொருளைத் துணியும் வேறோ
ரேதுவை யுடைய வேது மறுதலை
யோதி னுடைத்தென் றுணரப் படுமால்

(இ - ள்) துணிபொருட்கு மறுதலையாகிய துணிந்த பொருளைச சாதிக்கும் வேறோரேதுவினையுடைய ஏது சற்பிரதிபக்கம் என்னும் ஏதுப்போலி: அது 'சத்தம் நித்தியம், செவிக்குப் புலனாதலின், சத்தத்தன்மை போலும்' 'சத்தம் அநித்தியம் காரியப்பாட்டால் குடம்போலும்' எனவரும். எ - று.

துணிபொருட்கு. எ - து. சற்பிரதிபக்கவிலக்கணங்கூறுகின்றது.

* சத்தம் நித்தியம். எ - து. நூலாசிரியர்மதமன்று என்க என்பது.

௯௪. ஏர்பே றிலதெ னேது விளம்பிற்
சார்பி லாமை சாற்றுரு வின்மை
யிடைநிறை வின்மை மேவு மூன்றும்.

(இ - ள்.) இனி அசித்தமென்னும் ஏதுப்போலி சார்பசித்தம், உருவசித்தம், வியாப்பியத்தன்மையசித்தம் என மூவகைப்படும். எ - று.

இனி அசித்தம். எ - து. அசித்தத்தைப் பகுக்கின்றது.

௯௫. சார்பி லேது சாற்றிற் றுணிபொருட்
கேரிட னின்மையி னிடன்றனக் கிலதே.

(இ-ள்.) அவற்றுள், சார்பசித்தமாவது 'ஆகாயத்தாமரை மணமுடைத்து, தாமரைததன்மையால், பொய்கைத்தாமரைபோலும்' எனவரும். ஈண்டு மணமுடைமைக்கு ஆகாயத்தாமரை சார்பு அதுவே இல்லை. எ - று.

அவற்றுள், சார்பு. எ - து. சார்பசித்தத்திற்குதாரணங் கூறுகின்றது.

௯௬. உருவி லேது வோரி னிடத்திற்
குருவ மாகா துறுவது தானே.

(இ-ள்.) உருவசித்தமாவது சொரூபாசித்தம்: அஃதெங்ஙனம், 'சத்தம் குணம், கண்ணுக்குப்புலனாதலின்' எனவரும். ஈண்டுக் கட்புலனாதல் சத்தத்திற்கின்று, சத்தம் செவிக்குப்புலனாதலின். எ - று.

உருவசித்தம். எ - து. உருவசித்தத்திற்கு உதாரணங்கூறுகின்றது.

*சொரூபமாவது, ஒன்றற்கு வடிவமாவதொன்று. மேலுமுரைக்கப்பட்டது.

௬எ. மிடைநிறை வில்லா வேது விளம்பி
னடர்துணி பொருளி னடங்குவ தின்மை
யுணர்த்துஞ் செயற்கை யுடைய தாற்பிற.

(இ - ள்.) வியாப்பியத்தன்மை யசித்தமாவது செயற்கையோடுகூடிய ஏது. செயற்கை சாத்தியத்தில் வியாபித்து ஏதுவில் வியாபியாதது. சாத்தியத்தில் வியாபித்தல் சாத்தியப்பொருளிருக்குமிடத்தின்கணுள்ள முழுதுமபாவத்திற்கு எதிர்மறையாகாமை. ஏதுவில் வியாபியாமை ஏதுவிருக்குமிடத்தின்கணுள்ள முழுதுமபாவத்திற்கு எதிர்மறையாதல். 'இம்மலை புகையுடைத்து, தீயுடைமையால்' என்புழி ஈரவிறகின்கூட்டம்செயற்கை. அது 'யாண்டுப் புகையுண்டு ஆண்டு ஈரவிறகின் கூட்டமுண்டு' எனச் சாத்தியப்பொருளில் வியாபகமாயும், 'யாண்டுத் தீயுண்டு ஆண்டு, ஈரவிறகின் கூட்டமின்று, ஒழுகக்காய்ச்சிய இரும்பில் ஈரவிறகின்மையின்' என ஏதுவில் வியாபகமின்றியும் இருத்தலின், ஈரவிறகின்கூட்டம் உபாதி. அவ்வுபாதியுடைமையின் வன்னியுடைமையாகிய ஏது வியாப்பியத்தன்மையசித்தம். எ - று.

*உபாதியுடைமையின் வியாப்பியத்தன்மை பெறப்படாமையாங்ஙனமெனின், உபாதியில்லாவிடத்தும் இருக்கும் ஏது உபாதியின் அடங்காதென்பதுதானே பெறப்படும், படவே உபாதியின் அடங்குவதொன்றின் அடங்காமை பெறுதற்கண் யாதும் ஆராய்ச்சி வேண்டாமையான் என்க. ஏது துணிபொருளின் வியாப்பியமாகாக்கால் வியாத்தியுணர்வு உண்டாகாமையின் அனுமிதி பெறப்படுமாறின்மை அறிக.

வியாப்பியத்தன்மை. எ - து. வியாப்பியத்தன்மையினிலக்கணங் கூறுகின்றது.

செயற்கை. எ - து. செயற்கையிலக்கணங்கூறுகின்றது. செயற்கை துணிபொருளெல்லாவற்றினும் வியாபிப்பதும் பக்கதருமத்தான் வரைந்து கொள்ளப்படும் துணிபொருளின் வியாபிப்பதும், ஏதுவான் வரைந்துகொள்ளப்படுந் துணிபொருளின் வியாபிப்பதும், யாதானுமோர் தருமத்தான் வரைந்து கொள்ளப்படுந் துணிபொருளின் வியாபிப்பதும் என நான்கு வகைத்து. அவற்றுள், முதலது ஈரவிறகின் கூட்டம். இரண்டாவது 'வாயுக் காட்சிப்பொருள், அளவையான் அளக்கற்பாலதாகலின்' என்பது. ஈண்டுப் புறப்பொருண்மையான் வரைந்துகொள்ளப்படுங் காட்சிப்பொருளின் வியாபிப்பது உற்பூதவுருவமென்க. மூன்றாவது 'அழிவுபாட்டபாவம் நாசமுடைத்து, உண்டாகற்பாலதாகலின்' என்பது. ஈண்டு உண்டாகற்பாலதாந்தன்மையான் வரைந்துகொள்ளப்படும் நாசமுடைமையின் வியாபிப்பது பாவத்தன்மை. நான்காவது 'முன்னை பாவம் நாசமுடைத்து, அளவையான் அளக்கற்பாலதாகலின்' என்பது. ஈண்டு உண்டாகற்பாலதாந்தன்மையான் வரைந்துகொள்ளப்படும் நாசமுடைமையின் வியாபிப்பது பாவத்தன்மையெனக் கொள்க.

* பக்கதருமம்-பக்கத்தினது தருமம். உதாரணத்தின்கட் பக்கமாவது, வாயு. அதன்தருமமாவது புறப்பொருண்மை அஃதாவது புறவிந்திரியத்திற்குப்புலனாகுந் திரவியத்தன்மை. புறப்பொருண்மையைத திரவியத்தன்மை என்றது அஃதல்லாத்தன்மையான் வரைந்துகொளப்படுவதன்கண் உருவம் வியாபியாமையான். அப்பொருண்மையான் வரைந்துகொளப்படும் காட்சிப்பொருள்

குடமுதலியன. புறப்பொருண்மையான் வரைந்துகொள்ளப்படும் என்றது உருவமுதலியவற்றின்கண் அதிவியாத்தி வாராமற்பொருட்டு. வாயுவைக் காட்சிப்பொருள் என்றது காட்சியானுணரப்படும் பரிசத்திற்குப் பற்றுக்கோடாகலின் என்பது. ஏனையிரண்டன்கண் பாவத்தன்மையை உபாதி என்றது எதுவிற்கிடனாகிய அழிவுபாட்டபாவமுன்னபாவங்களின்கண் பாவத்தன்மை வியாபியாமையான் என்க. பாவம்-உண்மை. அஃதாவது உளதாதற்றன்மை.

௬௮. தன்னாற் றுணியப் படும்பொருடன்னி
னின்மை மற்றோ ரளவையி னானே
துணியப் படுவது சொலுமறுப் புடைய
தெனப்படு மேது வென்னு நூலே.

(இ-ள்.) தன்னாற் சாதிக்கப்படும் பொருளினதபாவம் மற்றோரளவையாற்றுணியப்படின் அது பாதிதமென்னும் எதுப்போலி: அது 'நெருப்பு சூடல்லது, திரவியமாகலின்' எனவருநம். ஈண்டுச் சூடின்மை சாத்தியம். அதனபாவமாகிய சூடு துவக்கிந்திரியக்காட்சியான் அறியப்படுதலின் இது பாதிதமாயிற்று. அனுமானம் உரைக்கப்பட்டது. எ - று.

தன்னால். எ - து. பாதிதத்தினிலக்கணங்கூறுகின்றது.

அனைகாந்திகம், விருத்தம், சற்பிரதிபக்கம், அசித்தம், பாதிதமென்பவற்றைப் பிறழ்ச்சியுடையது, மாறுகொள்வது, மறுதலையுடையது, பேறில்லது, மறுப்புடையது என மொழிபெயர்த்துக் கொள்க.

இவற்றுள், பாதிதம் கொள்ளற்பாலதன் அபாவத்தை நிச்சயித்தலானும், சற்பிரதிபக்கம் மறுதலைப்பொருளுணர்விற்குக் கரு

வியாகலானும், அனுமிதிக்கே தடையாவனவாம். ஏனையவை ஆராய்ச்சிக்குத் தடையாய் இருந்துகொண்டே அனுமிதிக்குத் தடையாவனவாம். அவற்றுள்ளும் பொதுவநைகாந்திகம் பிறழாமையின்மையானும், விருத்தம் ஒருநிலைக்களத்துளதாகலின்மையானும், வியாப்பியத்தன்மையசித்தம் விசேடணம்அடுத்த வியாத்தியின்மையானும், சிறப்பநைகாந்திகமும் முடிவுபெறாமையும் வியாத்திக்கண் ஐயந்தோற்றுவித்தலானும், வியாத்தி யுணர்விற்குத் தடை, சார்பசித்தமும் உருவசித்தமும் பக்கதருமத்தன்மையுணர்விற்குத் தடையெனத் தெரிந்துகொள்க. செயற்கைபிறழ்ச்சியுணர்வின்வழியானே வியாத்தியுணர்விற்குத்தடை. துணிந்ததனைத் துணிவிப்பதாகிய சித்தசாதனம் பக்கதருமதத்தன்மையைச் சிதைத்தலாற் சார்பசித்தத்துள் அடங்கும். தோல்வித்தானத்துளடங்குமென்பர் நவீனர்.

*ஒருநிலைக்களத்துளதாகலின்மை ஏது துணிபொருளொடொரு நிலைக்களத்துளதாவதின்மை எனத் தந்துரைக்க. ஒரு நிலைக்களமெனினுஞ் சமானாதிகரணமெனினும் ஒக்கும். வியாத்தியின்மையான் என வாளாகூறாது விசேடணமடுத்த வியாத்தி என்றது ஏதுதுணி பொருளுள்வழி உடனிருப்பினும் அவ்வாறுளதாதல் விசேடணமில் வழி உடனிகழ்ச்சியாவதல்லது வியாத்தியாகாமையான். என்னையோ வியாத்தியாகாமையெனிற் கூறுதும். விசேடணமாவது ஏதுதுணிபொருளின்றியிராது என்பது. அதனை விசேடணம் என்றது ஏதுதுணிபொருளின்றியிராமையினானல்லது உடனிகழ்ச்சி யின்றியமையாதாதலெய்தாதென்பது இதனினாயதிது என்பதுபடநிற்பதனானறிக.

*உடனிகழ்ச்சி வியாத்தியாதற்குப்பிறழ்ச்சியின்மையும் பிறழ்ச்சியின்றாதற்கு ஏது துணிபொருளின்றியிராமையும் காரணமாவதுய்த்துணர்ந்து கடைப்பிடிக்க.

* இதுவிசேடணமாவது மேலும் பெறப்படுமாறு காண்க. இவ்வாற்றானே துணிபொருளின்றியிராத ஏது துணிபொருளுள்வழி உளதாவது விசேடணமடுத்த வியாத்தி என்பது தெரிந்துகொள்க. உபாதி உள்வழி உடனிகழ்ச்சியிருப்பினும் இன்றியமையாதாவதின்று, ஆண்டை ஏது துணிபொருளின்றியிராத ஏதுவன்மையின் விசேடணம் பெறப்படாது, பிறழ்ச்சிபெறப்படுதலான். எனவே விசேடணமில்வழி ஏத துணிபொருளோடுடனிருப்பினும் அவ்வாறுளதாதல் உடனிகழ்ச்சியாவதல்லது வியாத்தியாகாமை அறிக. பாயிரத்துக்காண்க.

* பிறழ்சியுணர்வின்வழியானே செயற்கைவியாத்தியுணர்விற்குத்தடை என்றது உபாதிவியாத்தியுணர்வு உண்டாகாமற் செய்வதாய பிறழ்சியுணர்வைத் தருதலானல்லது நேரேதடையாவதன்மையான். உபாதியாவது தானுள்வழித் துணிபொருளின்கண் ஏது அடங்குவதன்று; அஃதாவது துணிபொருளில்லாவிடத்தும் ஏதுவிருக்கும் எனக்காட்டுவதாம்.

* துணிந்ததனைத் துணிவிப்பதாகிய சித்தசாதனம் கொள்ளற்பாலதன்மையிற் குற்றமுடைத்து என்பதறிக. துணிந்ததனைத் துணிவிப்பதாவது ஒன்றாகத் துணியப்பட்டதனைப் பின்னர் மற்றொன்றாகத் துணிவிப்பது; அல்லதூஉம் தன்னாற்றுணியப்பட்டதொன்றற்கு மாறுகொள்வதைத் துணிவிப்பதாவது என்பது. சித்தசாதனம் இத்தன்மைத்தாதல் தீந்தமிழ்ச்செழுந்தேன் தேங்குபு நிறைந்த சிவஞானபோதச் சிற்றுரை முதலியவற்றினும் இந்நூலிற் பிரமாணியவாதத்தினும் காண்க.

## உவமானப்பிரமாணம்.

உறுபெயர்க் கோர்பொருட் கியைபை யுணரு
மறிவொப் புமையா லுவதொப் புணர்வே.

(இ - ள்.) உவமானம் உவமிதியறிவிற்குக் கரணம். உவமிதி பெயர்க்கும் பெயர்ப்பொருட்குமுள்ள சம்பந்தம்அறியுமறிவு. அதற்குக் கரணம் ஒப்புமையறிவு. அஃதெங்ஙனமெனின், ஆமா என்னுஞ் சொற்குப் பொருளுணராதான் ஒருவன் 'ஆவினையொக்கும் ஆமா' என ஓராண்மகன் கூறக் கேட்டுக் காட்டகம் புக்கானாக; அவன் கூறிய தொடர்மொழிப்பொருளைக்கருதி ஆவொப்புமையடுத்த பிண்டத்தைக் கண்ட பின்னர் 'இது ஆமா' என்னும் உவமிதியறிவு தோன்றுமென்க. உவமானம் உரைக்கப்பட்டது. எ - று.

உவமானம். எ-து. உவமானத்தினிலக்கணங்கூறுகின்றது.

உவமிதி எ-து. உவமிதியிலக்கணங்கூறுகின்றது.

## சத்தப்பிரமாணம்.

எ0. உரையென் னளவை யுண்மை கூறு
முரியோ னுரைக்க வுறுதொடர் மொழிமற்
றுற்ற னுடைய ததுமொழி யாற்ற
லிப்பொரு ளுணர்த்துக விச்சொ லாலெ
னிறைவன் விருப்ப மென்மனார் புலவர்.

(இ - ள்.) சத்தப்பிரமாணம் ஆத்தன்வாக்கியம். ஆத்தன் உரியோன் என்பன ஒருபொருட்கிளவி. ஆத்தனாவான் உண்மைப் பொருளைக் கூறுவான். வாக்கியம் பதங்களின் கூட்டம்: அது

'ஆவைக்கொணு' என்பனமுதலியவாம். பதமாவது ஆற்றலுடையது. ஆற்றல் 'இப்பதத்தால் இப்பொருளுணர்த்துக' என்னும் இறைவன் சங்கேதம். எ - று.

*சங்கேதம்—இச்சை.

சத்தப்பிரமாணம். எ-து. சத்தப்பிரமாணத்திலக்கணங் கூறுகின்றது.

ஆத்தன். எ - து. ஆத்தன் இன்னன் என்கின்றது.

வாக்கியம். எ - து. வாக்கியமின்னதென்கின்றது.

பதம். எ - து.பதத்தினிலக்கணங்கூறுகின்றது.

ஆற்றல். எ - து. பொருணினைவு நிகழ்தற்கு அனுகூலமாய பதங்கட்கும் பதார்த்தங்கட்கும் உளதாயசம்பந்தம்ஆற்றலெனவும் அது வேறுபதார்த்தமெனவும் சைமினிமதநூலார் கூறுப, அதனை மறுத்து ஆற்றலின்னதென்கின்றது. ஆதன் பூதன் முதலியவற்றிற் குப்போலக் குடமுதலிய பதங்கட்கும் சங்கேதமே ஆற்றலாகலின், அது வேறுபதார்த்தமென்பது பொருந்தாதென்பதாம்.ஆ முதலிய பதங்களாற் சாதியே முன்னர்க் கருதப்படுதலின் பதங்கட்குச் சாதியின்கண்ணே ஆற்றலெனவும், பொருட்பேறுதி கடா முதலியவற்றால் நிகழுமெனவும், கூறுவாருமுளர். அதுபொருந்தாது, 'ஆவைக்கொணு' என்றற்றொடக்கத்து முதியோர்வழக்கின்கண் யாண்டுங் கொணர்தல் முதலியன பொருளின்கண்ணே நிகழக் காண்டலிற் சாதியடுத்த பொருளின்கண்ணே ஆற்றலென்பதே பொருத்தமுடைத்தாகலின். ஆற்றலுணருமாறு முதியோர்வழக் காற்றுணியப்படும்: அங்ஙனமன்றே, சொற்பொருளுணர்தல் வேட்கையுடையானொரிளையோன் 'ஆவைக்கொணு' என முதி

யோன் கூறுந்தொடர்மொழியைக் கேட்டபின்னர், இடைப்பட்ட முதியோன் முயலுந்தொழிலை நோக்கி, ஆவைக்கொணர அதனையுங்கண்டு, இடைப்பட்ட முதியோன் முயலுந்தொழில் நிகழ்தற்குக் காரணமாகிய ஞானம் உடன்பாட்டானும் மறையானுந் தொடர்மொழியாற்றோற்றற்பாலதெனத் தெளிந்து, 'குதிரையைக் கொணா' 'ஆவைக்கட்டு' என்னும் வேறுதொடர்மொழிக்கண் முன்னும்பின்னும் உற்றுநோக்கி, ஆவென்னும் பதத்திற்கு ஆத்தன்மையடுத்த பிண்டத்தின்கண் ஆற்றல், குதிரையென்னும் பதத்திற்குக் குதிரைத் தன்மையடுத்த பிண்டத்தின்கண் ஆற்றல் எனச் சொற்பொருளுணர்ந்துகொள்ளுமென்க. அஃதங்ஙனமாக, வழக்கமனைத்தும் யாண்டும் காரியப்பொருட்டாகலின், காரியப்பொருட்டு நிகழுந் தொடர்மொழிக்கண்ணே சொற்பொருள் உணரப்படுமன்றி நிகழ்ந்ததன்மேற்றாய தொடர்மொழிக்கட் சொற்பொருளுணர்ச்சி நிகழாதாலெனின்;— அற்றன்று, 'கூடலின்கண் முதுகுடிமிப்பெருவழுதியுளன்' என்றற்றொடக்கத்து நிகழ்ந்ததன்கண்ணும் வழக்கமுண்மையானும், 'மலர்ந்த தாமரைக்கண் வண்டுளது' என்றற்றொடக்கத்து யாண்டும் உணரப்படும் பதத்தினைச் சார்த்தி வழங்குதலான் நிகழ்ந்ததன்கண்ணும் வண்டு முதலியவற்றின் சொற்பொருளுணர்வு நிகழக் காண்டலானும், என்க.

*அனுகூலமாய சம்பந்தம் என முடிபுசெய்க.

*ஆதன் முதலியவற்றை உதாரணங்காட்டியது பெயர் இச்சையானல்லது சம்பந்தத்தான் இடப்படாமை வெளிப்படையாகத் தோற்றுதற் பொருட்டு என்பது. வழக்காவது ஆட்சி. அஃதாவது சொல்லையெடுத்து வழங்குவது.

*காரியமாவது தொழிலான் முற்றுப்பெறுவது. அதனைப்போக்கிக்காண்க.

2. ஒளிரு மாற்ற லுடைய தாகற்
பாலதன் கிழமை பன்னிலக் கணைதான்
புரையி லவ்வப் பொருளி னுணர்ச்சி
விருப்பா னுரைக்கப் படுவ தொன்றுந்
தன்மை கருத்துத் தானிக ழாமை
பெண்ணி னிலக்கணைக் கேது வென்ப.

இலக்கணையும் சத்தத்தின் கணுள்ளது. ஆற்றலுடைத்தாகற் பாலதன்சம்பர்தம் இலக்கணை: அது 'கங்கையின்கணிடைசசேரி' என்பது. ஈண்டுக் கங்கையென்னுஞ் சொற்குப் பொருளாகிய வெள்ளத்தின் சம்பந்தத்தானே கரையென்பது உணரப்படுமாக லின், கரையின்கண்ணும் ஆற்றலுடைத்தென்றல் வேண்டாமை யுணர்க. மா முதலிய பதங்கட்காயின் மாமரத்திற்குங் குதிரைக்கும் ஒன்றற்கொன்று சம்பந்தமின்மையின், ஆண்டு வெவ்வேருற்றல் வேண்டற்பாலனவாம். அவ்விலக்கணை விட்டவிலக்கணையும், விடாதவிலக்கணையும், விட்டுவிடாதவிலக்கணையு மென மூவகைத்து. சொல்லின்பொருட்குக் கொண்டுகூட்டில்லாதவிடத்து விட்டவிலக்கணை: அது 'கட்டில் கரைகின்றது' என்பது. சொல் லின்பொருட்கும் கொண்டுகூட்டுள்ளவிடத்து விடாதவிலக்கணை: அது 'கவிகையாளர் செல்கின்ருர்' என்பது. சொற்பொருளின் ஏகதேசத்தை விட்டு ஏகதேசத்திற்குக் கொண்டு கூட்டுள்ளவிடத்து விட்டுவிடாதவிலக்கணை: அது 'அது நீயாகின்ருய்' என்பது. 'குன்றம்யானை' என்றுறபோல உருவகமுதலியனவும், குறிக்கப்படுங்குணத்தின் சம்பந்தத்தான் உணரப்படுதலின். இலக்கணையே யாம் குறிப்பும் ஆற்றல் இலக்கணை என்னுமிவற்றுள் அடங்கும்.

பொருளாற்றலால் உணரப்படுங்குறிப்பு அனுமான முதலியவற்றான் வேறோராற்றாற்பெறப்படுவது. தாற்பரியவுணர்வு நிகழாமை இலக்கணைக்குக் காரணம். தாற்பரியம் அவ்வப்பொருளுணர்ச்சி விருப்பான் உச்சரிக்கப்படுந்தன்மை. வெவ்வேறு பொருள்பயத்தலின். தார்பரியவுணர்வும் தொடர்மொழிப்பொருளுணர்ச்சிக்குக் காரணம். தாற்பரியத்தை உணர்விப்பது வினை, சார்பு, இடமுதலியனவெனவறிக. "பிறவிப் பெருங்கட லீந்துவர்" என்புழிச் 'சேர்ந்தார' என்பது சொல்லெச்சம். அற்றேல், சொற்களெல்லாம் பொருளுணர்தற்பொருட்டாகலிற் பொருளுணர்ந் தன்றிச் சொல்வருவிக்கலாகாமையிற் பொருளெச்சமென்றலே பொருத்தமுடைத்தெனின்;— அற்றன்று, சொல்விசேடத்தாற் றோன்றற்பாலதாய சொற்பொருளுணர்ச்சியே சொல்லுணர்ச்சிக்கேதுவாகலின். அவ்வாறுகொள்ளாக்கால், 'குடம் செயப்படுபொருண்மை கொணர்தல் வினைமுதற்றன்மை' என்றவழிக் "குடத்தைக்கொணர்ந்தான்" என்னுஞ் சொல்லாற் பெறப்படு முணர்ச்சி நிகழ்தல் வேண்டுமென்பது. பங்கயமுதலிய சொற்களின் அவயவவாற்றல் காரணமும் பொதுவாற்றல் இடுகுறியும் விளக்குதலின்; இன்னோரன்னவை காரணவிடுகுறியென்க. நியதமாய்த் தாமரையுணர்வே நிகழ்தற்பொருட்டுப் பொதுவாற்றலும் வேண்டப்பட்டது, அல்லாக்காற் குவளை முதலியவற்றையும் பங்கயமெனல்வேண்டுதலின். பிரபாகரமதநூலார் மற்றொன்றனோடு கொண்டு கூட்டுதற்கண் ஆற்றலென்பர். கௌதமமதநூலார் கொண்டுகூட்டுதல் தொடர்மொழிப்பொருளின் றன்மையாக உணரப்படுதலின், கொண்டுகூட்டுங்கூற்றின்கண்ணே ஆற்றல் கொள்ளற்பாலதன்றென்பர்.

*கொண்டு கூட்டு எனினும், அந்நுவயம்எனினும், இயைபுஎனினும் பொருந்தும் என்க.

*பொருளாற்றல் என்பது ஓர்சொற்பொருள் பிறிதோர்சொற்பொருளைப் பயத்தற்கேதுவாதற்றன்மை. அங்ஙனமாதல், ஏலாதோர் முடிவெவனுந் தன்மேன், மேலோருத்தரவேதமெனத்தகை, சாலோர் தமிழ்ப்பொதுத் தனிமறையின்கண், "சினமென்னும்" என்னும் அருமைத் திருக்குறளின். அருள்வாக்கென்னவான்றோர்கொள்ளுரை யுரையாளர் பரிமேலழகியருரையாலும், சீர்த்தமிழரசி செறிபகையடங்க, ஓர்த்துறு பயனுன்குற்றிடத் தெருட்டித, தார்ப்படையாவிறறமைழ தொல்காப்பியம், "எடுத்தமொழி" என்னுஞ் சூத்திர முதலியவற்றின் சீரிருமொழிவலசேனாவரையர் உரையானு முணர்க. இன்னும் இந்நூலின்கண் அருத்தாபத்தி கூறுமிடத்துப், "பொருளால்" என்பதனானுங் காண்க.

*அனுமானத்தாற் பெறப்படும் என்பதூஉம் அருத்தாபத்தி கூறுழிக் காண்க. வேறோராற்றான் என்றது பொருளாற்றல், - இசைச, இலக்கணை இரண்டனுள்ளும் அடங்குவதன்மையான். தாற்பரிய வுணர்வு - தாற்பரியத்தோற்றரவு, தாற்பரியத்தைத் தெரியுமுணர்வு. 'அவ்வப்பொருள், வெவ்வேறு பொருள்' என்றமையான் மரபிற் பிறழாது பலபொருள் பகுமிடத்தல்லது தாற்பரியம் நிகழாதென்பதறிக. தாற்பரியம் இற்றாவது தமிழ்ப் பொதுத்தனிமறையின்கண், "ஒழுக்கமுடையவர்க்கு"-என்றற்றொடக்கத்து அருமைத் திருக்குறளின், 'வாயால்' 'உள்ளத்தால்' என்றற்றொடக்கத்துப்பெருமொழிக்குஉரையாளரிட்டவுரையானுமுணர்க.

*சொற்பொருளுணர்ச்சியே சொல்லுணர்ச்சிக்கேது என்றது பெயர்தெரியாவிடத்து ஒன்றனைத் தெரிந்தும் அதனான் அதன் பெயர் வருவிக்கலாகாமையான் என்பது.

*அவயவ ஆற்றலாவது ஓர்சொல் பிரிந்து நின்று உறுப்பாற் பொருள்பயத்தற்றன்மை. பொதுவாற்றலாவது பிரியாது ஒரு சொல்லாய் நின்றே பொருள் பயத்தற் றன்மை.

பிரபாகரர்—குருமதத்தர்.

எக. அவாய்நிலை தகுதி யண்மை மூன்று
மோவி றொடர்மொழிப் பொருளை யுணர
மேவுங் கருவி யெனவிளம் புவரே.

(இ - ள்) வாக்கியப்பொருளுணர்விற்குக் காரணம் அவாய் நிலையும், தகுதியும், அண்மையுமாம். எ - று.

அவாய்நிலையும் தகுதியும் அண்மையும். எ - து. அவற்றின் ஞானமென்றவாறு.

எஉ. ஒருசொற் றன்னை முடித்தற் குரிய
வுரைதா னில்வழி முடிவை யுறாது
நிற்ப தவாய்நிலை நினையுங் காலை
வாதை பொருட்கு வராமை தகுதி
தெரியி னண்மை சேர்ந்த மொழிக
ளொருதொட ராக விரைய வோதல்.

(இ - ள்.) அவாய்நிலை ஒருபதம் தன்னை முடிப்பதொருபதம் இல்லாதவழி முடிவுபெறாது நிற்றல். தகுதி பொருட்கு வாதையின்மை. அண்மை பதங்களை ஒருதொடராக விரையக் கூறுதல். எ - று.

அவாய்நிலை. எ - து. அவாய்நிலையிலக்கணங்கூறுகின்றது.

தகுதி. எ - து. தகுதியிலக்கணங்கூறுகின்றது.

அண்மை. எ - து. அண்மையிலக்கணங் கூறுகின்றது. சொல்லின்பொருளுணர்ச்சி விரையத் தோன்றுதல் அண்மையென்றவாறு. உச்சரித்தலும், அதனைப் பயப்பிப்பதாதலின், அண்மையெனப்பட்டது.

எகூ. ஒல்லு மவாய்நிலை முதலிய மூன்று
மில்லாத் தொடர்மொழி யேது வாதல்
சொலினின் றென்ப துகளி லோரே.

(இ - ள்.) அவாய்நிலை முதலிய மூன்றும் இல்லாதவாக்கியம் பிரமாணமன்று. 'ஆகுதிரை ஆண்மகன்யானை' எ - து. அவாய்நிலையின்மையாற் பிரமாணமன்று. 'தீயானனை' எ - து. தகுதியின்மையாற்பிரமாணமன்று. 'ஆவைக்கொணு' என்றன்முதலியன, ஒரு தொடராகக்கூறுத யாமத்துக்கு ஒன்றொன்றாகக் கூறின் அண்மையின்மையால், பிரமாணமன்று. எ - று.

ஆ குதிரை. எ - து. அதற்குதாரணங்கூறுகின்றது. 'குடஞ் செயப்படுபொருண்மை கொணர்தல் வினைமுதற்றன்மை'. எ - து. அவாய்நிலை யின்மைக்கு உதாரணமெனக் காண்க.

எச. ஒருமறை மொழியென் றுலக மொழியென்
றிருவகை தொடர்மொழி யென்ப திறைவ
னுரியோன் வாய்மொழி உண்மை யென்ப
தெரியி னல்லன தேறப் படாவே.

(இ - ள்.) இத்தொடர்மொழி வேதவாக்கியம், உலகவாக்கியம் என இருவகைப்படும். வேதவாக்கியம் இறைவன் வாய்மொழியாதலான் எல்லாம்பிரமாணமேயாம். உலகவாக்கியத்தின் உரியோன் வாய்மொழி பிரமாணம், ஏனையது அப்பிரமாணம். எ - று.

வேதவாக்கியம். எ - து. வேதவாக்கியத்துக்கு விசேடங்கூறுகின்றது. வேதம் அநாதியாயுண்மையின் இறைவன் வாக்கியமென்றலெங்ஙனமெனின்;— அற்றன்று, வேதம் புருடனாற் செய்யப்பட்டது, வாக்கியத்திரட்சியாயிருத்தலின், பாரதமுதலியவற்றின் வாக்கியம்போலும் எனவறிக. இவ்வனுமானத்திற்குக் கருத்தாவுண்மை நினைக்கப்படுதல் செயற்கையாம் பிறவெனின்;— கௌதமர் முதலியோரால் மாணாக்கர் பரம்பரையின் வேதத்திற்குங் கருத்தாவுண்மை நினைக்கப்படுதலின் எதுவினும் வியாபித்தலின், ஆகாதென்க. "அவனிடத்தினின்றும் வேதமூன்றும் பிறந்தன" என்னுஞ் சுருதியுண்மையும் உணர்க. அற்றேல், 'இஃது அந்தக்ககரம்' என முன்னதனுணர்வே நிகழ்தலின் எழுத்துக்களெல்லாம் நித்தமாதல் பெற்றும், பெறவே, வேதம் அநாதியென்றாற் படுமிழுக்கென்னை யெனின்;— அற்றன்று, 'ககரந்தோன்றிற்று' 'ககரமழிந்தது' என்னுமுணர்வு நிகழ்தலான் எழுத்துக்களெல்லாம் அநித்தமாதல் பெறப்பட்டமையின். 'இஃதந்தக்ககரம்' என முன்னதனுணர்வு நிகழ்தல் 'இஃதந்த விளக்கின்சுடர்' என்பதுபோல அதன்சாதியற்றியென்க. எழுத்துக்களை நித்தமெனக் கொள்ளினுந் தொடர்ப்பாடாகக் கோவைப்படும் வாக்கியம் அநித்தமேயாம். ஆதலான், வேதம் இறைவன் வாய்மொழியேயெனக்கொள்க. மனு முதலிய மிருதிநூல்களும் ஒழுக்கமும், வேதத்தை முதனூலாகவுடைமையின், பிரமாணமேயாம். மிருதிக்கு முதனூலாகிய வேதவாக்கியம் இக்காலத்து ஓதுவாரின்மையின் மிருதிக்கு முதனூலாயுள்ளதொருசாகை இறந்ததென்று கொள்ளற்பாற்று. இக்காலத்து வழங்கப்படும் வேதவாக்கியம் முதனூலாமெனக்கோடல் பொருந்தாமையின், என்றும் அனுமித்தறியற்பாலதோர் வேதம் முதனூலாக உண்டெனின்;— அது பொரு

ந்தாது. அவ்வாறுண்டாயினும் எழுத்துக்களின்றொடர்ப்பாட்டுணர்வு பிறவாமையின், உணர்வாரின்மையாமென்க. அற்றேல், 'இப்பதங்கள் நினைப்பிக்கப்படும் பொருட்சம்பந்த முடையன, அவாய்நிலை முதலியவற்றையுடைய சொற்றிரட்சியாகலின், நம்மனோர் வாக்கியம் போலும், என்னும் அனுமானத்தானே யாண்டும் உணர்வு நிகழ்தலிற்சத்தம் வேறு பிரமாணமன்றெனின்;— அற்றன்று, சத்தவுணர்வு அனுமிதியுணர்விற்கு வேறாய இலக்கணமுடைத்தென்பதற்குச்'சொல்லானறிந்தேன்' எனப் பின்னிகழுமுணர்வேசான்றுதல் எல்லார்க்கும் ஒப்ப முடிந்ததாகலின்.

இனிப் 'பகலுண்ணான் சாத்தன் பருத்திருப்பன்' எனக்கண்டாயினுங் கேட்டாயினும் உணர்ந்துவழிப்பருமை வேறோராற்றலாகாமையின் இரவுண்டல் பொருளாற் கொள்ளப்படுமாகலின். அருத்தாபத்தியும்வேறு பிரமாணமாமாலோவெனின்;— அற்றன்று, 'சாத்தன் இரவுண்பன். பகலுண்ணானும் பருத்திருத்தலின்' என்னும் அனுமானத்தானே இரவுண்டல் பெறப்படுதலினென்க. 'நூற்றில் ஐம்பதுண்டு' என்னுமுண்மையும் அனுமானமேயாம். 'இவ்வாலிற் பேயுண்டு' என்னும் ஐதிகமும் அறியப்படாததன்மேற்றாகிய சத்தப் பிரமாணமே. கை கால் முதலியன அசைத்தலாகிய சேட்டையும், சத்தானுமானத்தின் வழியானே வழக்கிற்கு ஏது வாகலின், வேறு பிரமாணமன்று. ஆதலால், காண்டல், கருதல், ஒப்புமை, உரையெனக் கூறப்பட்ட நான்குமே பிரமாணமெனக் கொள்க.

* சத்தானுமானத்தின் வழியானே சத்தத்தின்வழியானேனும், அனுமானத்தின்வழியானேனும் எனக் கூறியவாறு. சத்தம் என்றொழியாது அனுமானத்தை உடன் கூறியது சேட்டை தன்னாற்குறித்துணரப்படும் சொல்லின்வழியானே ஏதுவாவதினும்

அனுமானத்தின் வழியானே ஏதுவாவது எளிதாகப் பெறப்படலான்.

## பிரமாணியவாதம்.

3. விளைந்த வுணர்வு மெய்பொய் யாத
றுலங்கியா தானே துணியற் பால
தெனுமா ராய்ச்சியி னேய்பொய்த் தன்மை
துனுபிறி தானே துணியப் படுமா
லோர்மெய் யாத லுறுதன் றன்மை
சூழ்பிறி தானே துணிவ தென்னு
மவ்விரு திறனு ளாகு முணர்வைக்
கவரு மெல்லாக் கருவியி னானுங்
கவரப் படுவ தென்பது காணிற்
றன்னாற் றுணியப் படுவது தானா
முணரப் படுபொரு ளுறநேர் கிடைத்துப்
புணர்பயன் படலாற் போக்கறத் துணியப்
படுவது பிறிதாற் படுவது துணிய
வென்ப மெய்யி னியல்புணர்ந் தோரே.

இனி ஞானங்கள், அதனையுடையதன்கண் அது விசேடணமாகத் தோன்றுதல் தன்னாலுணர்தற்பாலதோ பிறிதானுணர்தற்பாலதோவென்று ஆராயத்தக்கன. ஈண்டு ஞானம் பிரமாணமாதல் அது பிரமாணமாதலின்மையைக் கவராது எல்லா ஞானங்களையுங் கவருங் கருவியாற் கவரற்பாலதோவன்றோ என்பது ஐயப்பாடு. இவ்விரண்டனுள், முன்னையது தன்னானுணர்தற்பாலதா

தல். பின்னையது பிறிதானுணர்தற்பாலதாதல். அனுமானத்தாற் கவரற்பாலதாகலான் துணிந்ததனைத் துணிதலென்னுங் குற்றம் வாராமல் நீக்குதற்பொருட்டு 'எல்லாம்' என்றும், இவ்வுணர்வு மெய்யனுபவமன்றென்னும் ஞானத்தாற் பிரமாணமாதல் கவரப் படாமையின் ஆண்டுமேறப்புவாராமை நீக்குதற்குப் 'பிரமாணமாத லின்மையைக் கவராது' என்றும், இவ்வுணர்வு மெய்யனுபமன் றெனப் பின்னிகழுமுணர்வு பிரமாணமாதலைக் கவருங் கருவிக்குப் பிரமாணமாதலின்மையைக் கவராமையின்மையால் தன்னாலாதல் இன்றாய்முடியும், அதனைநீக்குதற்கு 'அது' என்றும், கூறியவாறு. அது பிரமாணமாதலின்மையைக் கவராதென்றது பிரமாணமாதற் குச் சார்பாயுள்ளது பிரமாணமாதலின்மையைக் கவராதென்ற வாறு. எடுத்துக்காட்டிய உதாரணத்தின்கண் முந்திய முயற்சியிற் பிரமாணமாதலின்மையைக் கவர்வது பின்முயற்சியின் அதனைக் கவராமையின், தன்னாலாதல் பெறப்படும். அற்றேல், 'குடத்தை யான் காண்கின்றேன்' என்னும் பின்னிகழ்ச்சிக்குக் குடமும் குடத்தன்மையும்போல அவற்றின் சம்பந்தமும் விடயமாகலின் முயற்சி வடிவாகிய சம்பந்தம் ஒப்ப நிகழ்தலின் முன்னர்த்தோன் றும் உருவின் விசேடணத்தின் சம்பந்தமே மெய்யனுபவத்தன்மை யாகிய பதார்த்தமாகலிற் பிரமாணமாதல் தன்னாலே உணரப்படு மாலோவெனின்;— அற்றன்று, பிரமாணமாதல் தன்னாலுணர்தற் பாலதாயின் புனலுணர்வுதோன்றியது மெய்யோ அன்றோவெனப் பயிலாதகாலத்து மெய்யனுபவத்தன்மைக்கண் ஐயப்பாடின்றாதல் வேண்டும், பிரமாணமாதல் பின் முயற்சியாற்றெளியப்படுதலான். முன்னர் ஐயப்பாடுண்மை பெறப்படுதலின், தன்னாலுணர்தற்பால தாதலின்மையால் பிறிதாலுணர்தற்பாலதேயாம்: அங்ஙனமன்றேர், முதற்கட்புனலுணர்வு தோன்றியபின்னர் முயன்று சென்றுழிப் புனல்கிடைத்ததாயின், முன்னர்த் தோன்றிய புனலுணர்வு மெய்

யனுபவம், முயன்றுசென்றது பயப்படசசெய்தலின். 'யாதுமெய் யனுப்வமன்று அது பயப்படச்செய்யாது, பொய்யனுபவம் போலும்' என்னுங் கேவலவெதிரேகி யனுமானததான் மெய்யனுபவத் தன்மை தெளியப்படும். இரண்டாவது நிகழ்வது முதலிய ஞானங் களின் முன்னைஞானம் திருட்டாந்தமாதலுண்மையான், அதன் சார்தியுடைமையாகிய இலிங்கததானே அந்நுவயவெதிரேகி யனுமா னத்தானுந் தெளியப்படும். மெய்யனுபவத தோற்றததின்கட் பிறி தானுதல் குணததானுண்டாதற் பாலதாதல். மெய்யனுபவததிற குச சிறந்த காரணம் குணம, பொய்யனுபவததிற்குச சிறந்த கார ணம் குற்றம், அவற்றுள், காட்சியுணர்வின் கட் குணம் விசேடணத தையுடைய விசேடியத்தின் சம்பந்தம், அனுமிதிக்கட்குணம் வியா பகமுடையதன்கண் வியாப்பியமென்னு முணர்வு, உவமிதிககட் குணம் மெய்யான ஒப்புமையுணர்வு, சததவுணர்வின்கட்குணம் மெய்யான தகுதி முதலியவற்றினுணர்வு என்னுமின்னோரன்ன பிறவும் ஆராய்ந்துணர்ந்துகொள்க. முன்னர்த்தோன்றுகின்ற உரு விற் பிரகாரமின்மை பின்முயற்சியினுணரப்படாமையின், பொய் யனுபவமாதல் பிறிதானுணர்தற் பாலதேயாம். தோற்றததின்கட் பிறிதானுதல் பித்தமுதலிய குற்றத்தான் உண்டாகற்பாலதாதல். அற்றேல், பொய்யுணர் வென்பதேயில்லை அனைததுணர்வும் மெய் யாகலின், இப்பியின்கண் 'இதுவெள்ளி' என்னுமுணர்வான் முயற்சி நிகழக்காண்டலின் மலைவுண்டு என்பது கூடாது. வெள்ளியி னினைவும் முன்னர்த்தோன்றுகின்றதனுணர்வும் என்னும் இரண் டானுமே முயற்சி நிகழ்தல் கூடுமாகலின், முன்னர்த்தோன்றிய தன்கண் வேறுபாடு தோன்றாமையே யாண்டும் முயற்சி பிறப்பித்த லான், 'இது வெள்ளியன்று' என்பது முதலியவற்றின் மிகைப் பாடின்மையான் எனின்;— அற்றன்று, மெய்யாகிய வெள்ளியிட த்து முன்னர்த தோன்றுகின்றது விசேடியமாகவும் வெள்ளித்தன்

மை விசேடணமாகவும் உடைய ஞானம் முயற்சியைப் பிறப்பிக்கு மென வொப்பிற்கோடல் பொருத்தமுடைத்தாகலின், இப்பியின் கண்ணும் வெள்ளியின் விழைவானே முயற்சியைப் பிறப்பிப்பதாக லின் அடையடுத்தஞானமே கொள்ளற்பாற்றாகலாமென்க.

*ஞானங்கள் ஆராயத்தக்கன என வினை முடிபுசெய்க. தோ ன்றுதல் - மனத்தின்கண் ணிகழுதல், புலப்படுதல் என்பதாம். அதனை என்றது மெய்யனுபவத்தன்மையை. உடையது என்றது மெய்யனுபவமாகிய ஞானத்தையென உய்த்துணர்க. மெய்யனுபவத் தன்மை இயல்பாதலும் அதனையுடைய மெய்யனுபவமாகிய ஞா னம் இயல்பியாதலும் அறிக. ஞானம் பிரமாணமாதல் கவரற்பால தென இயையும். பிரமாணமாதல் என்பது மேற்கூறிய உண்மை யனுபவத்தொடு இயைபுடைத்தாதலறிக. கவர்தல்,விடயமாகக்கோ டல், உணர்த்துதல் என்பன ஒரு பொருண்மேலன. பிரமாணமா தல், மெய்யனுபவமாதல், பிரமாணியம் என்பன ஒரு பொருட்பன் மொழி.

* ஞானம் பிரமாணமாதலின்மையைக்கவராது, ஞானத்தைக் கவருங்கருவி எல்லாவற்றினாலும், ஞானம் பிரமாணமாதல் கவரற் பாலதோ அன்றோ என்பது ஐயப்பாடு எனப் பெயர்த்துரைத்துக் கொள்க. எல்லாக்கருவியானும் என்பது கவர்தற்குரிய கருவியாதி னானும் என்றவாறு. பிரமாணமாதல் தன்னானுணர்தற் பாலதென் புழி எல்லாம் என்றது ஞானத்தைக் கவருங்கருவி என்றொழியின் துணிந்ததனைத் துணிதல் என்னுங்குற்றம் வரும் என்றது பிரமாண மாதல் பிறிதானுணரற்பாலதென்னும் பிறர் மதத்தின்கண் பிறி தெனப்படும் அனுமானமும் ஞானத்தைக்கவருங் கருவியாகலான். அக்குற்றம்வரின் தன்னானுணரற் பாலதென்னுந் தன்கோள் இழ ந்துபடும் என்க.

* எல்லாம் எனவே அக்குற்றம் வாராது என்றது பிரமாண மாதல் தன்னாலாவது எனப்படும் பின்னிகழுமுணர்வாற் கவரப் படுவது என்பார்க்கும் அங்ஙனம் கவருங்கால் தடையுண்டாயின் அனுமானத்தாற் கவரற்பாலது என்பது உடம்பாடேயெனினும் தடையில்வழி அப்பின்னிகழுமுணர்வே சாலுமாகலின், ஞானத் தைக்கவருங்கருவி அனுமானமாத்திரமன்று வேறுமுள என்பது அவ்வெல்லாம் என்பதனானெய்துதலான்.

* இவ்வுணர்வு மெய்யனுபவமன்று என்பதன்கண், இவ்வுணர் வென்பது முன்னிகழுமுணர்வு எனவும் அதனைக் கவர்தாயமெய் யனுபவமன்று என்பது பின்னிகழுமுணர்வு எனவுங் கூறப்படும், ஒன்றுண்டான பின்னர் மற்றொன்று உண்டாதலின். இவ்வுணர் வென்பது ஈண்டு இப்பியின்கண் இது வெள்ளி என்றற் றொடக் கத்தது ஆண்டு' அஃதாவது தன்னாலாவது என்பதன்கண், மறுப்பு வரும் என்றது; மெய்யனுபவமன்று என்னும் ஞானத்தாற் கவரப் படும், அஃதாவது தன்னானே கவரப்படும், இவ்வுணர்வு என்பது பொய்யாதல் பெறப்படுதலின் பிரமாணமாதல் தன்னாற் கவரப் படாமையான்.

* பின்னிகழுமுணர்வு பிரமாணமாதலைக் கவருங்கருவி என் றது 'மெய்யனுபவமன்று' என்பது பொய்யன்று மெய்யே என உணர்வதாய மூன்றாவது நிகழும் ஞானத்தை என உய்த்துணர்ந்து கொள்க. தன்னாலாதல் இன்றாய் முடியும் என்றது பிரமாணமாத லைக் கவர்வதுதானே பிரமாணமாதலின்மையையும் கவருதல் கூடாமையான். பிரமாணமாதலைக் கவர்வதுதானே பிரமாணமாத லின்மையையுங்கவருதல் யாண்டையதெனின் மெய்யனுபவமன்று என்னும் இரண்டாவதுஞானம் பொய்யன்று மெய்யே என்னும்

மூன்றாவது நிகழும் ஞானந்தான் மெய்யனுபவமன்று என்பது பிரமாணமாதல் கவரப்படுவதுபோல, இவ்வுணர்வு என்பதாய முதலாவது ஞானம் பொய்யாதலும் அஃதாவது பிரமாணமாதலின்மையுங் கவரப்படுதலானறிக. தன்னாலாதலின்று என்னுங் குற்றம் "அது" என்பதனானீங்கும் என்றது, மேற்போந்தவாற்றான் மெய்யனுபவமன்று என்பது பிரமாணமாதலைக் கவருங்கருவி பிரமாணமாதலின்மையையுங் கவரினுங் கவரப்படும் பிரமாணமாதலின்மை என்றது பிரமாணமாதற்குச் சார்பாயுள்ளதின் வேறாயதொன்று பிரமாணமாதலின்மையை என்பது, 'அவ்வது' என்பதனாற் பெறப்படுதலான். சார்பாயுள்ளது பிரமாணமாதல் என்பது விளைப்பெயர்கொண்டு முடிந்து நிற்கும் ஓர் எழுவாய்த்தொடர். அல்லதூஉம் சார்பாயுள்ளதன் பிரமாணமாதல் எனினும் ஆம்.

* "குடத்தை யான் காண்கின்றேன்" என்பதைப்பின்னிகழுமுணர்வு என்றது குடமாவது இன்னதெனத் தெரிந்தபின்பல்லது குடத்தை யான் காண்கின்றேன் என்னுமுணர்வு நிகழாமையான் என்பது. மேலுமுரைக்கப்பட்டது.

* 'முயற்சிவடிவாய சம்பந்தம்' என்றது சம்பந்தம் தன்னை யகப்படுத்து நிற்பதாய முயற்சிவாயிலாயல்லது உணரப்படுமாறின்மையான். முயற்சி, விவசாயம், உணர்ச்சி என்பன ஒரு பொருட்கிளவி என்க.

*புனலைப்பயிலலாவது தண்ணீரைப் பெற்றுவைத்து அதன் கண்மூழ்கல், அதனைக்குடித்தல் முதலியன செய்வது. முன்னர் - பயிலுவதன்முன்னர். அனுபவத்தன்மை அனுபவமாதற்றன்மை

* அதன் சாதியாவது இரண்டாவது நிகழ்வது முதலியவற்றினும் முன்னையதாவதினும் ஒப்பநிகழ்வதாய ஓர் பொதுத்தன்மை.

* தோற்றத்தின்கட் பிறிதாஞதல் என்பது அனுபவத்தன்மை உணருமாறு அற்ருக, அனுபவம் உண்டாமாறு யாங்ஙனமென்னும் கடாவிற்குக் குணத்தாஞதல் குற்றத்தாஞதல்அல்லது உண்டாகாதென விடைகூறுகின்றது.

* முன்னர்த் தோன்ருநின்ற உரு என்பது இப்பியின்கண் இது வெள்ளி என்றற்ருெடக்கத்தது. பிரகாரமின்மை விசேடணத்தின் சம்பந்தமின்மை, அஃதாவது இப்பியின்கண் வெள்ளித்தன்மையின் சம்பந்தமின்மை என்பதாம்.

* உணர்வில்வழிமுயற்சிநிகழாதன்றே; முயற்சிநிகழக்காண்டலின் இப்பியின்கண் இது வெள்ளி என்பது உணர்வாதல் பெறப்படும். அவ்வுணர்வு மெய்யன்றன்றே. ஆகலின் பொய்யுணர்வு என்பதேயில்லை என்றதற்கு மலைவு உண்டெனின் அது கூடாதென விரித்துரைத்துக் கொள்க.

*இரண்டானுமே முயற்சிநிகழுமெனின் 'இதுவெள்ளியன்று' என்றற்ருெடக்கத்தவற்றினும் அவ்விரண்டானு முயற்சி நிகழற்பாற்ருகலின் அவற்றின்கண் மிகைப்பாடுவருமாற் பிறவெனின்:— அற்றன்று, முன்னதின் வேறுபடத்தோன்ருமையும் முயற்சி நிகழுதற்கோர் காரணமாக் கொள்ளப்படலான். ஈண்டுமிகைப்பாடென்றது முன்னர்த் தோன்றியதன்கண் முயற்சியை நிகழ்த்துவது அதின் வேறுபடத் தோன்றுவதினும் சேறலை என்க.

* மிகைப்பாடின்மையான் இரண்டானுமே முயற்சி நிகழ்தல் கூடும் என்வும், கூடுமாகலின் மலைவு உண்டென்பது கூடாது எனின் எனவும் ஒட்டிக்கொண்டுணர்க.

* அடையடுத்தஞானமே அஃதாவது தோன்றாநின்றது விசேடியமாகவும் வெள்ளித்தன்மை விசேடணமாகவும் உடையஞானமே கோடற்பாற்று என்றது மெய்யனுபவத்தின்கண் அடையடுத்தஞானமே முயற்சியை நிகழ்த்துவது என்பது எல்லார்க்கும் ஒப்பமுடிந்ததாகலானும், முயற்சியைப் பிறப்பித்தற்கு வெள்ளியினினைவு முன்னர்த்தோன்றா நின்றதன் உணர்வு என்னும் இரண்டனொடு முன்னர்த்தோன்றியதன்கண் வேறுபாடு தோன்றாமையும் கூட்டி மூன்றனைக்காரணமாகக் கோடலினும் அடையடுத்தஞானம் ஒன்றனையே கோடல் எளிதாகலானும் என்பது. எனவே பொய்யுணர்வு உண்டென்பஃது இதனாற்போதும் பயன் என்க.

*பிரமாணமாதல் தன்னானுணர்தற்பாலது என்பது மமாஞ்சகர் மதம். பிறிதானுணர்தற்பாலது என்பது நையாயிகர்மதம். பொய்யுணர்வு இல்லையென்பது குருமதம் என உணர்க.

௭௫. ஓர்தொடர் மொழிப்பொரு ளுணர்ச்சி யென்னு
மொலியா னுய வுணர்ச்சிக் கேது
வுரையா முண்மை யுணர்வா மிதுவே.

(இ ள்.) வாக்கியப் பொருளுணர்ச்சி சத்தத்தாலாய வுணர்ச்சி; அதற்குக்காரணம் சத்தம். இங்ஙனம் மெய்யனுபவம் தெரித்துரைக்கப்பட்டது. எ - று.

௭௬. பொய்யுணர் வதனைப் புகலிற் றருக்க
மையந் திரிவென் றூமூ வகைத்தால்.

(இ - ள்.) இனிப் பொய்யனுபவம் ஐயம், திரிவு, தருக்கம் என்னும் வேறுபாட்டான் மூவகைத்து. எ - று.

இனிப்பொய்யனுபவம். எ-து. பொய்யனுபவத்தைப்பகுக்கின்றது. கனவு மானதக் காட்சித் திரிபாகலின், மூவகைமையின் மாறுபாடின்மை யுணர்க.

௭௭. உறையொரு தன்மை யுடைய தொன்றன்
மாறு பட்டு வருபல தன்மை
யடுத்த வுணர்வே யைய மென்ப.

(இ - ள்.) அவற்றுள், ஐயமாவது ஒரு தருமியின் மாறுபட்ட பலதருமங்களான் விசேடிக்கப்பட்ட வுணர்வு. தருமமெனினும் தன்மையெனினும் ஒக்கும். அது 'குற்றியோ மகனோ' என்பது.

அவற்றுள், ஐயம். எ-து. ஐயவிலக்கணங் கூறுகின்றது. 'புலி விற்கெண்டை' எனத் திரட்சிபற்றியதன்கண் அதிவியாத்தி நீக்குதற்கு 'ஒருதருமியின்' என்றும், 'குடந்திரவியம்' என்பது முதலியவற்றின் குடத்தன்மை திரவியத்தன்மை எனப் பலதன்மை உண்மையின் ஆண்டதிவியாததி நீக்குதற்கு 'மாறுபட்ட' என்றும், 'ஆடைத்தன்மையின் மாறுபட்ட குடத்தன்மையுடையது' என்பதன்கண் அதிவியாத்தி நீக்குதற்குப் 'பல' என்றும் கூறியவாறு.

௭௮. எனுமதி னிலதை யிருப்ப தாகத்
துணித றிரிவெனச் சொல்லுணர் வென்ப.

(இ - ள்.) திரிவு மித்தையினுலாயவுணர்வு: அது இப்பியை வெள்ளியென்பது. எ - று.

திரிவு. எ-து. திரிவிலக்கணங் கூறுகின்றது. அஃதில்லாததன் கண் அது விசேடணமாதலுடைமை நிச்சயித்தலென்றவாறு.

௭௯. மேலிடு நிறைவே மிடைநிறை வென்னச்
சொலுமிரு தன்மை துகளறத் தேற்றி·
படுமிடை நிறைவைப் படைத்துரைப் பதனாற்
படர்மிகு நிறைவைப் படைத்து மொழிவ
தீடார் தருக்க மெனப்படு வதுதான்.

(இ - ள்.) தருக்கம் வியாப்பியத்தை ஆரோபித்தலான் வியாபகத்தை ஆரோபிப்பது: அது 'தீயில்லையாகில் புகையுமில்லையாதல் வேண்டும்' என்பது. எ - று.

தருக்கம். எ-து. தருக்கத்தி னிலக்கணங்கூறுகின்றது. தருக்கம், திரிவினுளடங்குமாயினும், பிரமாணத்திற்கு உபகாரமாதலான், வேறுகூறப்பட்டது.

* ஒழுகக்காய்ச்சிய இரும்பின்கண் தீயிருப்பினும் அதன்கட் புகையின்மையான், புகையுள்வழியேயல்லது இல்வழியும் தீயிருத்தலின் தீயினதுண்மை வியாபகத்தன்மையும், புகையினதுண்மை வியாப்பியத் தன்மையும் ஆவதூஉம், புகையினதின்மை தீயில்வழியேயல்லது உள்வழியும் இருத்தலிற் புகையின்மை வியாபகமும் தீயினதின்மை வியாப்பியமும் ஆவதூஉம் உய்த்துணர்ந்துகொள்க.

* தருக்கம் எனினும், படைத்துமொழிதலெனினும், ஆரோபித்தலெனினும் ஒக்கும். படைத்துமொழிதல் - இலதை உளதாகக் கொண்டு கூறுவது. உளதையிலதாகவைத்துக் கூறுவதென்றாற் படுமிழுக்கென்னையோ வெனின்;—அற்றன்று, ஒன்றுஉளதாகத்தோன்றுவதல்லது இலதாகத்தோன்றுமாறின்மையான். படைத்துமொழிதல் அன்னது என்பதனைக் குழவித்திங்கட் குழுகுங்கண்ணி, யழலவிர்சோதி யருமறைக் கடவுள், கருணைகூர்ந் தருளிய களவியலென்னும், விரிசான் மறைமுடி வீற்றிருந் தருளும், இறையனாரகப்

பொருள் "குறையுறுங்கிழவனை" என்னும் அருமைத்திருச் சூத்திரத்து, உரைவரை மரணபினை யுணர்ந்துயக்காட்டிப், பொருவினற் கீரர் புகன்றருளுரையிற் கூறியவாற்றானுணர்க. இவ்வாறு ஆரோபித்தலான் விளையும்பயன் காரியகாரணத்தன்மைக்கட்குக் கேடு வரும் எனக் காட்டி மேற்கோளை வலியுறுத்ததுவது என்க.

௮௦. மெய்பொய் யென்ன மேவனு பவத்தா
லெய்யு நினைவு மிரண்டா மென்ப

(இ - ள்.) நினைவு மெய், பொய் என இருவகைத்து. மெய்யனுபவத்தாற்றோன்றிய நினைவு மெய். பொய்யனுபவத்தாற்றோன்றிய நினைவு பொய். புத்தி உரைக்கப்பட்டது எ - று.

நினைவு. எ-து. நினைவைப் பகுக்கின்றது.

௮௧. நாடி னெவர்க்கு நன்றென் றுணரப்
படுவ தின்பம் பகருங் காலை.

(இ - ள்.) சுகம் எல்லார்க்கும் நலமாக உணரப்படுவது. எ-று.

சுகம். எ-து. இன்பத்தினிலக்கணங்கூறுகின்றது. 'இன்புறுடையேன்யான்' என்றற்றொடக்கத்துப் பின்னிகழ்ச்சியாற் குறித்துணரப்படும் இன்பத்தன்மை முதலியனவுடைமையே இலக்கணமென்க. ஈண்டுக்கூறியது சொரூபமென்க.

* ஈண்டுக்கூறியதாவது, சுகம் எல்லார்க்கும் நலமாக உணரப்படுவது என்பது. பின்னிகழ்ச்சி - பின்னுணர்ச்சி.

௮௨. தெரியி னெவர்க்குந் தீங்கென் றுணர
வருவது துன்ப மாண்புணர் வார்ப்பெறின்.

(இ-ள்.) துக்கம் எல்லார்க்குந்தீங்காக உணரப்படுவது. எ-று.

அங. விருப்ப மிச்சை வெறுப்பு வெகுளி.

(இ - ள்.) வெளிப்படை.

அச. முயற்சி தொழிலென மொழியப் படுமால்.

(இ - ள்.) வெளிப்படை.

அரு. அறம்விதி வினையா னுவ தென்ப.

(இ - ள்.) தர்மம் விதிவினையாற் றோன்றியது. எ - று.

அசு. மறமறு வினையான் வருவ தெனப்படும்.

(இ - ள்.) அதர்மம் விலக்குவினையாற் றோன்றியது. எ - று.

அஎ. உணர்ச்சி முதலா வுறுமோ ரெட்டு
முணர்வுடைப் பொருட்கே யுரிய குணங்கண்
முயற்சி விருப்ப முணர்ச்சி மூன்று
முயிர்க்கு நிலையில வோரிறை தனக்குப்
பெயரா நிலையுள பெற்றி யோரின்

(இ - ள்.) புத்திமுதலிய எட்டும் ஆன்மாவிற்கே யுரியகுணங்கள். புத்தி, இச்சை, முயற்சி என்னும் மூன்றும் நித்தமும் அநித்தமுமாம். இறைவனுடைய புத்திமுதலிய மூன்றும் நித்தம், உயிருடைய புத்தி முதலிய மூன்றும் அநித்தம். எ-று.

அஅ. வேகம் பாவனை மேனாக்ல் பெறுத்தல்
வாசனை மூன்று வகைய தாகும்.

(இ - ள்.) வாசனை வேகமும், பாவனையும், நிலைபெறுத்தலையும் என மூவகைத்து. எ - று.

வாசனே. எ-து. வாசனையைப் பகுக்கின்றது. வாசனைத்தன்மையாகிய சாதியுடைமை வாசனையிலக்கணம்.

அகூ. மண்முத ஞன்கின் மனத்தின் வேக
மென்னப் படுவ திருக்கு மென்ப.

(இ - ள்.) அவற்றுள், வேகம் பிருதிவிமுதலிய நான்கினும் மனத்தினும் இருக்கும். எ - று.

அவற்றுள், வேகம். எ து. வேகத்திற்குப் பற்றுக்கோடு கூறுகின்றது. வேகத்தன்மைச் சாதியுடையது வேகம்.

* வேகம் என்னும வாசனே, கறங்குமுதலியவற்றின்கட் சுழற்றுகை விட்டபின்னர்க் கிடப்பது காண்க.

கூo. அனுபவ மதனின் காரிய மாகி
நினைவிற் கேது வாய்நிற் பதுதா
னுணர்பா வனைமற் றுயிர்க்கல திலையால்.

(இ - ள்.) பாவனை அனுபவத்தின் காரியமாய் நினைவிற்குக் காரணமாயுள்ளது. அது ஆன்மாவின்மாத்திரம் இருக்கும். எ - று.

பாவனே. எ-து. பாவனையிலக்கணங் கூறுகின்றது. ஆன்மாமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்கு 'அனுபவத்தின்காரியம்' என்றும், அனுபவத்தின் அழிவுபாட்டின் அதிவியாத்தி நீக்குதற்கு 'நினைவிற்குக்காரணம்' என்றுங்கூறியவாறு. நினைவே வாசனைக்குக் காரணமென்பர் நவீனர்.

கூக. நிலைபெறுத் துகைதா னேர்வே றியல்பா
யலரச் செயப்பட் டதுவே மீட்டு

மந்நிலை யாக்குவ ததுபாய் முன்னு
மண்ணின் கண்ணே மருவு மாற்பிற.

(இ - ள்.) நிலைபெறுத்துகை வேறுதன்மையாகச் செய்யப்பட்டு மீட்டும் அந்நிலையேயாக்குவது. அது பாய்முதலிய பிருதிவியினிருக்கும். குணம் கூறப்பட்டது. எ - று.

நிலைபெறுத்துகை. எ - து. நிலைபெறுத்துகையி னிலக்கணங் கூறுகின்றது. எண்ணல்முதலிய எட்டும், நிமித்தத்தானுகிய நெகிழ்ச்சியும், வேகமும், நிலைபெறுத்துகையும் பொதுக்குணங்கள். ஏனை உருவமுதலியன விசேடகுணங்கள். திரவியத்தைப் பகுக்கும் உபாதியிரண்டின் ஒருநிலைக்களத்து இராதசாதியுடைமை விசேடகுணத்தன்மை.

* உபாதியிரண்டின் ஒருநிலைக்களம் என்றது ஒன்றற்கல்லது இரண்டற்கு நிலைக்களமாவதோர் குணத்தை என்க. ஒருநிலைக்களம் சமானுதிகரணம். பாயிரத்துக்காண்க. திரவியத்தைப் பகுக்கும் உபாதி மண்டன்மை, நீரின்றன்மை என்றற்றொடக்கத்தன. உபாதியிரண்டன் ஒருநிலைக்களம் - இருமை, வேற்றுமை, சையோகமுதலியன என்றவாறு.

## ரு. கருமம்.

கஉ. சாற்றிற் கருமந் தான் புடைபெயர்ச்சி
தீக்கா னீர்மண் சீர்மனத் துறுமால்.

(இ-ள்.) கருமம் புடைபெயர்ச்சி. கருமமைந்தனுள், எழும்பல் மேலிடத்திற் கூடுதற்கேது. வீழ்தல் கீழிடத்திற் கூடுதற்கேது. வளைதல் உடல்வளைந்து கூடுதற்கேது. நிமிர்தல் நிமிர்ந்து கூடுதற்

கேது. எனையனைத்தும் நடித்தலெனப்படும். அது பிருதிவிமுதலிய நான்கினும் மனத்தினும் இருக்கும். எ - று.

கருமம். எ - து. கருமத்தினிலக்கணங்கூறுகின்றது.

கருமமைந்தனுள். எ-து. எழும்பல் முதலியவற்றின் காரியவேறுபாடு கூறுகின்றது. உடலின்கண் மிகவுங்கோணலை உண்டாக்குவது வளைதல். செவ்விதாகலை உண்டாக்குவது நிமிர்தல்.

## ௪. சாமானியம்.

கூ௩. துன்று பொதுமை தொழில்குணம் பொருளே
மூன்றினு முளதாய் முரணழி விலதா
யொன்றாய்ப் பலவற் றொருங்கு சேற
லுடைய தன்மை யோதிரு வகைய
தடைமெய் மேல தல்லன கீழே.

(இ - ள்.) இனிச் சாமானியமாவது நித்தமாய், ஒன்றாய், பலவற்றின் ஒருங்கு சேறலையுடைய சாதி. அதுமேல், கீழ் என இருவகைத்து. திரவியம், குணம், கன்மம் என்னும் மூன்றினுமிருக்கும். இருவகையுள், உண்மைத்தன்மை மேற்சாதி, திரவியத்தன்மைமுதலியன கீழ்ச்சாதி. எ - று.

இனிச்சாமானியம். எ - து. சாமானியத்தினிலக்கணங் கூறுகின்றது. சையோகத்தின் அதிவியாத்தி நீக்குதற்கு 'நித்தம்' என்றும், பரமாணுவின் பரிமாணமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குப் 'பலவற்றின்' என்றும், கூறியவாறு. ஒருங்குசேறல் சமவேதமாதலென்பதாம். ஆகவே.அபரவமுதலியுவற்றின் அதிவியாத்தியின்மையுணர்க.

*பலவற்றின் எனவே அதிவியாத்தி நீஙகும் என்றது பரமாணு வின்கண் பரிமாணமுதலியன ஒவ்வொன்றும் ஒன்றினிருப்பது ஒன்றினின்றி வெவ்வேறாயுளவாகலான். அபாவமுதலியவற்றின் கண் அதிவியாத்தியின்று என்றது அபாவம் பலவற்றின்கணிருப் பினும் சமவாய சம்பந்தத்தான் இருப்பதன்றாகலான் என்பது.

## ரு. விசேடம்.

கூச. மாணிலைப பொருடா மண்கா றீநீர்
நான்கி னணுவு நல்லான் முதலா
னைந்து மான வழியில் பொருளா
னோரவை வெவ்வே றாகி நிற்ற
றெரிப்பன சிறப்புச சேர்நதவற் றுற்றே.

(இ - ள.) இனி விசேடம் நித்தப்பொருள்களின் இருப்பன வாய், அவை வெவ்வேறாய் நிற்றலைத் தெரிப்பனவாம். நித்தப் பொருள்களாவன பிருதிவிமுதலிய நான்கின் பரமாணுக்களும் ஆகாயமுதலிய வைந்துமெனவுணர்க. எ - று.

இனிவிசேடம். எ - து. விசேடத்தினிலக்கணங கூறுகின்றது.

## சு. சமவாயம்.

கூரு. நீக்க மின்றி நிற்பன வற்றி
னெட்டி யிறப்பின் றான்றுங் கிழமை
யொற்றுமை யென்ப தூறவன நீங்கா
திரண்டனு ளொான்றாங் கேய்பிற் கொன்றற
யொருவறப் பற்றி யுறமவை யயானற

முதல்சினை குணங்குணி மூள்வினை வினைமுதல்
பொதுமை யுருவ நிலைமை சிறப்பாம்.

(இ - ள்.) இனிச்சமவாயமாவது நித்தமாகியசம்பந்தம். அது நீக்கமின்றி இருப்பனவற்றின்கணிருக்கும். யாவை இரண்டனுள் ஒன்று மற்றொன்றனைப் பற்றியேநிற்கும் அவை நீக்கமின்றி இருப்பன. அவைசினையும் முதலும், குணமும் குணியும், வினையும் வினைமுதலும், சாதியும் வடிவும், விசேடமும் நித்தியப்பொருளும் என்பன. எ - று.

இனிச்சமவாயம். எ - து. சமவாயத்தினிலக்கணங் கூறுகின்றது. சையோகத்தின் அதிவியாத்தி நீக்குதற்கு 'நித்தம்' என்றும், ஆகாயமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்கு 'சம்பந்தம்' என்றும், கூறியவாறு.

யாவை. எ - து. நீக்கமின்றியிருத்தலினிலக்கணங் கூறுகின்றது 'கரியதுகுடம் என்னும் அடையடுத்தவுணர்வு விசேடண விசேடியங்கட்கு உளதாகிய சம்பந்தத்தை விடயமாகவுடையது', அடையடுத்த உணர்வாகலின், குழையன் என்னுமுணர்வுபோலும் என்னும் அனுமானத்தால், சமவாயம் உண்மை பெறப்பட்டது.

சினையும் முதலும். எ - து. திரவிய சமவாயி காரணம் சினை, அதனால் உண்டாகற்பாலதாய திரவியம் முதலெனக்காண்க.

## எ. அபாவம்.

௬௬. முன்னின் மையினை மொழியிற் றோற்ற
மின்றி யழிவை யேய்வ தாகி
யுறுகா ரியத்திற் குளதான் முன்னே.

(இ - ள்.) அபாவம் நான்கனுள், முன்னபாவம் தோற்றமின்றி நாசமுடையது: அது காரியத்தோற்றத்திற்கு முன்னுள்ளது. எ-று.

முன்னபாவம். எ - து. முன்னபாவத்தினிலக்கணங் கூறுகின்றது. ஆகாயமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்கு 'நாசமுடையது' என்றும், குடமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குத் 'தோற்றமின்றி' என்றும், கூறியவாறு. முன்னபாவம், தன்னெதிர் மறைப்பொருளின் சமவாயி காரணத்தின்கண் இருந்து, எதிர் மறைப்பொருளைத் தோற்றுவிப்பதாய், 'தோன்றும்' என்னும் வழக்கிற்கு எதுவாயதாம்.

௬எ. சாற்றுென் றழியச் சார்பி னின்மை
தோற்ற முடைத்தாத் துன்றழி வின்றி
யுறுகா ரியத்திற் குள்ளது பின்னே.

(இ - ள்.) அழிவுபாட்டபாவம் தோற்றமுடைத்தாய், நாசமின்றியிருப்பது: அது காரியத்தோற்றத்தின் பின்னுள்ளது. எ-று.

அழிவுபாட்டபாவம். எ-து. அழிவுபாட்டபாவத்தினிலக்கணங் கூறுகின்றது. குடமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்கு 'நாசமின்றி' என்றும், ஆகாயமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குத் 'தோற்றமுடைத்தாய்' என்றும், கூறியவாறு. அழிவுபாட்டபாவம், தன்னெதிர்மறையாற்றோன்றி, எதிர்மறையின் சமவாயி காரணத்தின் இருப்பதாய், 'அழிந்தது' என்னும் வழக்கிற்கு எதுவாவதாம்.

௬அ. முழுது மின்மை முக்கா லத்து
முளதா யோரி னென்றிமை பதனுள்

வரைந்து கொளப்பட மன்னு மெதிர்மறைத்
தன்மை யுடைத்தாய்ச் சார்வது தானும்.

(இ-ள்.) முழுதுமபாவம் முக்காலத்தினும் உளதாய சமுசர்க்கத் தான்வரைந்து கொள்ளப்படும் எதிர்மறைத்தன்மையை யுடையது: அது 'நிலத்திற்குடமில்லை' என்பதாம். எ - று.

*உளதாய என்னும் பெயரெச்சம் உடையது என்னுங் குறிப்பு வினைப்பெயர்கொண்டது.

முழுதுமபாவம். எ - து. முழுதுமபாவத்தினிலக்கணங்கூறு கின்றது. ஒன்றினென்றபாவத்தின் அதிவியாத்தி நீக்குதற்குச 'சமுசர்க்கததான் வரைந்துகொள்ளப்படும்' என்றும, அழிவபாட் டபாவம் முன்னபாவங்களின் அதிவியாத்தி நீககுதறகு 'முக்காலத தினும் உளதாய' என்றும் கூறியவாறு.

* சமுசர்க்காபாவம் என்றது வாளாபெயராய் நின்றது, அல்ல தூஉம் இயைபின்மைநீக்கிய விசேடணம் அடுத்து நின்றது எனலு மாம்.

* சமுசர்க்கததான் வரைந்துகொள்ளப்படும் என்றது எதிர் மறைத்தன்மை சமுசர்க்கத்தான்வரைந்து கொள்ளப்படாதாயின் அதனானுண்டாகற்பாலதாய அபாவமுண்டா மாறின்மையான். வரைந்துகொளப்படுவதன் அபாவத்தை வரைந்துகொளப்படும் என்றது உபசாரவழக்கு. உபசாரம் என்பது ஒன்றன் இயல்பை மற்றொன்றன்மேல் வைத்துக்கூறுவது.

கக. அதுவது வாத லதன்வடி வென்ப
ததனான் வரைந்த பொருளை யாங்கே

யெதிர்மறை யாக வெய்து மின்மை
யிதுவது வாகா தெனவரு மதுதா
னொன் றினொன் றின்மை யென்றிசி னோரே.

(இ-ள்.) ஒன்றினொன்றபாவம் அதன் வடிவான்வரைந்த பொருளைப் பிரதியோகியாகவுடைய இன்மை: அது 'குடம் ஆடையன்று' எனவரும். எ-று.

✻அதன் வடிவான்வரைந்த - பிறிதொன்றாகாத என்றபடி.

ஒன்றினொன்றபாவம். எ-து. ஒன்றினொன்றபாவத்திலக்கணங்கூறுகின்றது. எதிர்மறைப்பொருளொன்றேயுடைய முழுதுமபாவமும் ஒன்றினொன்றபாவமும், எதிர்மறைத்தன்மையை வரைந்துகொள்வதனை ஆரோபித்தலான் உளதாய சமுசர்க்க வேறுபாட்டால், பலவகையாம். அங்ஙனமாமாறு, 'சாத்தனுளனாயினும், குழையுடைய சாத்தனிலன்' என்னுமுணர்ச்சி நிகழ்தலான் அடையடுத்ததனபாவம், 'ஒன்றுளதாயினும் இரண்டில்லை' என்னு முணர்ச்சியான் இரண்டன் றன்மையான் வரைந்துகொள்ளப்பட்டதனபாவம், சையோகசம்பந்தத்தாற் குடமுடைய நிலத்துச் சமவாயி சம்பந்தத்தாற் குடமில்லை என்னுமபாவம் எனப்பலவாய் விரிதல் காண்க. குடமுடையநிலத்து வெவ்வேறு வகைப்பட்ட குடங்களின்மையின், குடத்தன்மையான் வரைந்து கொள்ளப்படும் பிரதியோகியையுடைய பொதுவபாவம் வேறெனக்கொள்க. ஒன்றினொன்றபாவமும் இவ்வாறே காண்க. 'குடத்தன்மையான்வரைந்துகொள்ளப்படும் ஆடையில்லை' என வேற்று நிலைக்களத்துளதாய தன்மையான் வரைந்துகொள்ளப்பட்டதனபாவம் வேறு கொளற்பாற்றன்று, ஆடையிற் குடத்தன்மை இல்லையென்பதே அதன்பொருளாகலின். வேறெனக்கொள்ளின், கேவ

லாற்றுவதியாம். காலவிசேடக் கிணுணரப்படும் அபாவம்முழுதுமபாவமே, வேறன்றென்க. குடமில்லாக்காலத்தது குடங்கொணராதுழி முழுதுமபாவம் வேறிடத்துச் சேறலில்லாவழியும் உணர்ச்சி நிகழாமையின், குடங்கொண்டு போயபின்னர் உணர்ச்சிநிகழ்தலின், நிலத்திற்குங் குடத்திற்கும் உள்ள சையோகத்தின் முன்னபாவமும் அழிவுபாட்டபாவமும் முழுதுமபாவ உணர்ச்சியை நிலைபெறுத்துவதெனக் கொள்ளற்பாற்று. அதனானே குடமுடைய நிலத்து அதன்சையோகத்தின் முன்னபாவமும் அழிவுபாட்டபாவமும் இன்மையின் முழுதுமபாவத்தினுணர்ச்சி நிகழாதெனவும், குடங்கொண்டுபோயவழி அதன்சையோகத்தின் அழிவுபாட்டபாவமும் குடங்கொணர்தற்குமுன்னர் அதன்சையோகத்தின் முன்னபாவமும் உண்மையின் அவ்விரண்டிடத்தும் அதனுணர்ச்சி நிகழ்வதெனவும் கொள்க. வெறுநிலைக்களமாதலானே 'இல்லை' என்னும் வழக்கம் நிகழ்தல் கூடுமாகலின், அபாவம் வேறுபதார்த்தமன்றென்பது குருமதம். அதுபொருந்தாது, அபாவங்கொள்ளாக்கால் 'வெறிது இன்னது' எனப்பொருள் கூறமாட்டாமையின். இல்லதன் அபாவமாவது பாவமேவேறன்று, வேறெனக் கொள்ளின் வரம்பின்றியோடுமாகலின். அழிவுபாட்டின் முன்னபாவமும் முன்னபாவத்தின் அழிவும் தத்தம் எதிர்மறைப்பொருளே, வேறல்லவெனக்கொள்க. இல்லதனபாவம் வேறொன்றே, மூன்றுமபாவம் மூன்றிய அபாவமாகலின், வரம்பின்றியோடுமாறில்லை என்பர் நவீனர்.

* ஆரோபித்தல்—புனைந்துமொழிதல். மேலுமுரைக்கப்பட்டது. குழையுடைய சாத்தனிவன் என்றொழியாது சாத்தனுள்ளுழியினுமென மேலே ஒட்டிக்கூறியது இவன் என்னுமபாவம் இயல்பாறேயதன்று ஆரோபித்தலானுளதாயதொன்று எனத்தெரிவித்தற்பொருட்டு என்க. பிறவுமிவ்வாறேகொள்க. ஒட்டிக்கூறுங்கால் அபாவம்

ஆரோபுத்தாருய்து என்பது எய்துமாறின்றாம். ஆகவே எதிர்மறை ஒன்றேயாகத் தானும் ஒன்றாகற்பாலதாய அபாவம் பலவாதற்குக் காரணம் ஆரோபித்தல் என்பது எய்தப்படாமையறிக என்பது. பாயிரத்துக்காண்க.

* பொதுவபாவம் என்றது வெவ்வேறுவகைப்பட்ட குடங்கள் எல்லாவற்றின்கண்ணும் ஒப்பநிற்றலாற் பொதுவெனப்படும் குடத்தன்மையான் வரைந்து கொள்ளப்பட்ட பிரதியோகியை யுடையதாகலின். வேறென்பது ஆண்டுளதாயதோர் குடத்தின் அபாவத்தின் வேறு என்றவாறு. வேற்றுநிலைக்களத்துளதாயதன்மையான் வரைந்துகொள்ளப்பட்டதன் எனவே தன்மைவடிவு எனப் படுவதெய்துதலுணர்க. கேவலாந்நுவயியாம் என்றது குடத்தன்மையான் ஆண்டைவரைந்துகொள்ளப்படுதல், ஆண்டையினும் அஃதொழிந்தபிறிதியாதினும் இன்மையான் அவ்வபாவம் யாண்டுமுளதாவதாகலான். இல்லையென்னும் வழக்கம் எனவே வழக்கம் என்பது சொல்லை எடுத்தாளுவது என்பதெய்துவதறிக.

* பேறென—பாவமன்றென.

௧00. இறைகாண் பெயர்ப்பொரு ளெல்லா முறையா
னறைந்தவற் றுள்ளே யடங்கலி னவைதா
மேழென் பதுதா னெய்து மினிதே.

(இ - ள்.) எல்லாப்பதார்த்தங்களும் முறையானே கூறியவற் றுள் அடங்குதலின், பதப்பொருள்கள் ஏழென்பது பெற்றாம். எ-று.

4, அளவை யளக்கற் பால தைய
மொளிர்பயன் காட்டே யுடைய தளவென்
றுடன்பட் டதுபடைப் புறப்புத் துணிவு

மெய்ம்மை யுணர்தல் வேட்கை யோன்கதை
யேயுங் கருவி யிரண்டுள் ளதன்கண்
வெல்லும் வேட்கை யுள்ளோன் கதையொடு
தன்கோள் நிலைபெறுத் தாது பிறன்கோட்
களைதன் மாத்திர முடிவுடைக் கதைகா
ணோர்தரு மேதுப் போலி தன்னே
டொருகருத் துட்கொண் டுரைத்த மொழிக்குப்
படைத்து வேறு பொருள்கொடு பழித்தல்
போலி விடையே புகல்வார் தோல்வி
யேலுறற் கேது வென்ன வொருநூ
லியம்பும் பெயர்ப்பொரு ளீரெட் டென்றே.

5. ஓர்கதை யென்ப துணரிற் கூறு
வார்பல ருடைத்தாய் வருவினு விடைகள்
பயக்குந் தொடர்மொழிக் கோவைப் பாடே.

6. ஆயி னீரா றளக்கற் பால
துயிரே யுடம்பே யுறுபொறி பொருளொடு
பெயருள முணர்வே பேணுற மறனொடு
வினையி னுகர்வே வினிவே குற்றந்
துன்பம் வீடெனச் சொலப்படும் வீடு
மீண்டுந் தோன்ற மேவோர் துன்பந்
தருமுன் னின்மை சார்ந்தொருங் குறாத
துன்பத் தழிவே துனவ்வீ டினிதே.

எல்லாப்பதார்த்தங்களும். எ - து. பிரமாணம், பிரமேயம், ஐயம், பிரயோசனம், திருட்டாந்தம், சித்தாந்தம், அவயவம், தர்க்கம், நிண்ணயம், வாதம், செற்பம், விதண்டை, எதுப்போலி, சலம், சாதி, தோல்வித்தானம் என்பவற்றின் உண்மையறிவால் வீடடைதல் உளதாமென நியாயநூலிற் பதினாறுபதார்த்தங்கூறுதலான், ஏழென்றதென்னையென்னுங் கடாவிற்கு விடை கூறுகின்றது. எல்லாப் பதார்த்தங்களும் ஏழனுள் அடங்குமென்றவாறு. ஆன்மா, சரீரம், இந்திரியம், அருத்தம், புத்தி, மனம், பிரவிருத்தி, தோடம், பிரேத்தியபாவம், பலம், துக்கம். அபவர்க்கம், எனப்பிரமேயம் பன்னிருவகைத்து. பிரமேயம் பிரமாணத்தால் அளக்கற்பாலதென்றவாறு. பிரவிருத்தி தன்மாதன்மங்கள். தோடம் விருப்பு வெறுப்பு மயக்கங்கள். விருப்பு காமம். வெறுப்பு வெகுளி. மயக்கம் சரீரமுதலியவற்றை ஆன்மாவென மருளுதல். பிரேத்தியபாவம் சாக்காடு. பலம் போகம். அபவர்க்கம் வீடுபேறு. அது தன்னிலைக்களத்துளதாகிய துன்பத்தின் முன்னபாவத்தோடு ஒருங்குநில்லாத துன்பத்தினழிவுபாடு. பிரயோசனம் சுகமும், துக்கக்கேடும். திருட்டாந்தம் அடுக்களைமுதலியன. சித்தாந்தம் பிரமாணமுடையதென உடன்பட்டது நிண்ணயம் நிச்சயித்தல். அது பிரமாணத்திற்குப்பயன். வாதம் உண்மையுணர்தல் வேட்கையோன்கதை. செற்பம் சாதனமிரண்டுள்ளதன்கண் வெல்லும்வேட்கை யுடையோன்கதை. விதண்டை தன் கோட்பாட்டை நிலைபெறுத்தாது பிறன் கோட்பாட்டைப் பழிப்பதுமாத்திர முடிவு பேறுடைய கதை. கதையாவது கூறுவார்பலரையுடைத்தாய்ச் சங்கையுத்தரங்களைப் பயக்குந் தொடர்மொழியின் கோவைப்பாடு. சலம் ஒருகருத்துப் பற்றிக்கூறிய மொழிக்கு வேறுபொருள் படைத்திட்டுக்கொண்டு பழித்தல். சாதிபோலியுத்தரம். அது பொதுவியல்பு, வேற்றியல்பு,

உயர்ச்சி, தாழ்ச்சி, புகழ்ந்துரை, பழித்துரை, விகற்பம், சாத்தியம், அடைவு, அடையாமை, பிரசங்கம், வேறுதிருட்டாந்தம், உற்பத்தியின்மை, ஐயம், பிரகரணம், ஏதுவின்மை, அருத்தாபத்தி, விசேடமின்மை, உபலத்தி, அநுபலத்தி, நித்தம், அநித்தம், காரியம், சமமாதல்என்க. தோல்வித்தானம் வாதம்பேசுவார் தோல்வியுறுதற்கேது. அவைமேற்கோளழிவு, வேறுமேற்கோள், மேற்கோண்மாறுபாடு, மேற்கோள்விடுதல், வேற்றேது, வேர்றுப்பொருள், பொருளின்மை, பொருளுணரப்படாமை, பொருட்போலி, காலம்பெறாமை, குன்றக்கூறல், மிகைபடக்கூறல், கூறியதுகூறல், பிர்கூற்றின்மை, அறியாமை, மறுக்கப்படாதமதத்தையுடன்பட்டுக்கூறல், உடன்படற்பாலதனையவாவுதல், உடன்படர்பாலதல்லதனையுடன்படுதல், சித்தாந்தப்போலி, ஏதுப்போலி என்பனவாம். ஏனையவை வெளிப்படை.

அற்றேல், பதார்த்தம் ஏழென்றதென்னை? கைத்தலத்தின் நெருப்பேந்தியவழியும் தடையுண்டாயிற் சூடு பிறவாமைகாண்டலின் ஆற்றல் வேறுபதார்த்தமாலோவெனின்;—அற்றன்று, தடையினபாவம் காரியமெவற்றிற்குங் காரணமாகலான் ஆற்றலுடன்பாடன்மையின், காரணமாதற்றன்மையே ஆற்றலென்னும்பதார்த்தமாகலினென்க. அற்றாயினும், சாம்பர்முதலியவற்றானே வெண்கலமுதலியவற்றிற் றூய்மைபிறத்தல் காண்டலின், சார்புபற்றிய ஆற்றல் கொள்ளற்பாற்றெனின்;—அற்றன்று, தூய்மையென்னும் பதார்த்தமாவது சாம்பர்முதலியனகூடுங்காலத்து ஒருங்குகிற்பதாகிய தீண்டற்பாலதல்லதனைத் தீண்டுதலாகிய வாலாமையை எதிர்மறையாகவுடைய அபாவமெல்லாவற்றோடும் உடனிகழும் சாம்பர்முதலியவற்றின் அழிவுபாடேயாகலின். உடையபொருண்மையும் வேறு பதார்த்தமன்று, வேண்டியவாறே ஏவப்படுதற்குரிய

உடைய பொருண்மையென்னும் பதார்த்தமாகலின். உடைய பொருண்மையை வரைந்துகொள்வது ஏற்றல் விலைகொடுத்தல் முதலியவற்றாற் கொள்ளப்படுந் தன்மை.

* ஆற்றல் ஈண்டுச் சூடு பிறப்பிக்குந் தன்மை. பதார்த்தமாவது அழிவுபாடே எனவும் நிற்பதாகிய வாலாமை எனவும் வினைமுடிபுசெய்க. உடைய பொருண்மை உடைய பொருளாதற்றன்மை. அது பொருண்மை என வாளா கூறுவதின் வேறுபடு பொருள்படத் தோன்றுவதறிக. பாயிரததுக் காண்க.

## விதிவாதம.

மொழியின் விதிதான் முயறலை விளக்கும்
விழைவினைத் தோற்று விக்கு முணர்வாற்
கவரப் படுவது காணி னதுதான்
றொழிலான் முற்றுப் பெறுவ தாகி
விழையப் படற்குக் கருவித் தன்மை
யுடைத்தென் றுணரப் படுவ தொன்றென்
றுறுதி காண்போ ருரைத்தன ரினிதே.

இனி விதி இன்னதெனத் தெரிக்குமாறு;—விதியாவது முயற்சியைப் பிறப்பிப்பதாகிய இச்சையைத் தோற்றுவிக்கும் ஞானத்திற்கு விடயமாயுள்ளது. அவ்விதியை உணர்த்துவது வியங்கோள் விகுதி முதலியன. தொழில் முற்றுப்பெறாததன்கண் முயறல் செல்லாமையின், தொழில் முற்றுப்பெறுமென்னும் உணர்வு முயறலை நிகழ்த்துவது. அற்றேல் நஞ்சுண்டல் முதலியவற்றினும் முயற்சி செல்லற்பாற்றெனின்;—அற்றன்று, காமிய விதிக்கண்

விழையப்படுதற்குக் கருவித்தன்மையாகிய இலிங்கமுடைய தொழில் முற்றுப்பெறுமென்னும் ஞானமும்,நித்தவிதிக்கண் விதித்தகாலத்து நிகழற்பாற்று என்னும் ஞானமும், நைமித்திகத்தின்கண் நிமித்தவுணர்வாற் றோன்றும் ஞானமுமே முயறலைத் தோற்றுவிப்பதாகலின். குருமதத்தார் விசேடணத்தையுடையதன்றன்மையின் நினைவாற் றோன்று ஞானம் உடனிகழுமாகலான், உடனிகழ்ச்சியுண்டென்பர். அது பொருந்தாது, தொழிலான் முற்றுப்பெறும் விழையப்படுவதற்கேதுவை உணருஞானமே இசசை வாயிலாக முயற்சியைப் பிறப்பிக்குமெனச் சுருங்கக்காட்டலாற் கொள்ளற்பாற்றாகலின். அற்றேல், நித்தவிதி விழையப்படும் பலத்துக்குக் கருவியன்மையின், ஆண்டு முயற்சிசெல்லாமை வரப்பெறுமெனின் ;—அற்றன்று, நித்தவிதிக்கண்ணும் விதித்தன செய்யாமையான் வருங்குற்றங் களைதலாதல் பாவக்கேடாதல் பலமெனக் கொள்ளற்பாற்றாகலின். இதனானே தொழிலான் முற்றுப்பெறும் விழையப்படுதற் கேதுவாதற் றன்மையே வியங்கோள் விகுதிக்குப் பொருளெனக்கொள்க. அற்றேல், "துறக்கம் விழைவோன் சோதிட்டோமத்தான் வேட்க" என்புழிக் ககரவிகுதியாற் றுறக்கத்திற் கேதுவாகிய காரிய நிகழ்ச்சி யுணரப்படும். அக்காரியம் வேள்வியெனின் அது விரையக் கெடுவதாகலான் எதிர்காலத்தின் வரக்கடவதாய துறக்கத்திற்கேதுவாதல் கூடாமையின், அதற்குத் தகுதியாகிய நிலைபெற்ற காரியமாகிய அபூர்வமே விகுதிப்பொருளெனக் கோடற்பாற்று. காரியம் செய்கையான் முற்றுப்பெறும். செய்கை செயப்படுபொருளுடைத்தாகலால் 'செயப்படுபொருள் யாது' என்னும் அவாய்நிலைக்கண் வேட்டல் செயப்படுபொருளாய் முடிவுபெறும். 'எவனுடைய காரியம்'என ஏவப்படுவா னவாய்நிலைக்கண் 'துறக்கம் விழைவோன்' என்னும் பதம் ஏவப்படுவான் மேற்

ளாய் முடிவுபெறும். ஏவப்படுவோன் காரியம் புந்திசெய்வான். அதனானே சோதிட்டோமமெனப் பெயரிய யாகமாகிய செயப்படுபொருள் துறக்கம் விழைவோனாற் செயற்பாலதென வாக்கியப்பொருள் முடிவுபெறும். இவ்விகுதி வேதத்தின் கண்ணதாகலின், "சாங்காறும் எரியோம்புக" என்னும் நித்திய விதி வாக்கியத்தினும் அபூர்வமே சொற்குப் பொருளாகக் கோடற்பாற்று. "பிணியின்மை விழைவோன் மருந்துதின்னுக" எனவும், உலகத்தின் கண்ணதாகிய வியங்கோள் விகுதிக்கு இலக்கணையாற் றொழிற்காரியமே பொருளெனக் கோடற்பாற்றெனின்;—அற்றன்று, யாகத்தின் கண்ணும் தகுதியின்றெனத் தெளிவுபெறுமையின் ஏதுவே விகுதிப்பொருளாக உணர்ந்தபின்னர் உறுதிப்பொருட்டு அவாந்தர வியாபாரமாக அபூர்வங் கோடற்பாலதாகலின். "புகழ்ந்தெடுத்துரைத்தலாற் கெட்டது" என்னுஞ் சுருசிபானு புணர்க. வேள்வியினழிவுபாடு வியாபாரமன்று. உலகின்கட் சொற்பொருளுணர்ச்சி வலியான் வினைமுற்றின் கண்ணே வியங்கோளானுணர்த்தப்படுவது செய்கையான் முற்றுப்பெறுவதாய் விழையப்படுவதற்கு ஏதுவாயுள்ளதேயாமாகலின், வியங்கோட்டன்மையான் விதிப்பொருண்மையும், விகுதித்தன்மையான் முயர்சிப்பொருண்மையுமுடைத்து. 'அடுகின்றான்' அடுதலைச் செய்கின்றான் என்னும் பொருடோன்றக் காண்டலானும், 'யாது செய்கின்றான்' என்னுங் கடாவின்கண் 'அடுகின்றான்' என இறை நிகழ்தலானும், முயலுதலே விகுதிக்குப் பொருளாதல் தெளியப்பட்டமையானென்பது. "தேர் நடக்கின்றது" என்றற்றொடக்கத்தின் இலக்கணையான் அதற்கனுகூலமான புடைபெயர்ச்சிபொருள். "சாத்தன் அடுகின்றான்" 'சாத்தனால் அரிசி யடப்படுகின்றது' என்றற் றொடக்கத்தின்கண் வினைமுதலும் செயப்படுபொருளும் விகுதிக்குப் பொருளல்ல, அவற்றின் ஒருமை முதலிய எண்

# தருக்கவிளக்கம்.

க்னே பொருளென்க. வினைமுதலும் செயப்படுபொருளும் அவற்றை ஆசங்கித்தலாற் பெறுதும். 'கைகண்டேன்' என்புழித் தெளியக்கண்டேன் எனத் தெளிவின்கட் பகுதிக்கே ஆற்றல். உபசர்க்கங்கள் அவற்றை விளக்குதன்மாத்திரமே, அவற்றின்கண் ஆற்றலின்றென்க.

* அற்றேல் - முயறலை நிகழ்த்தலதேல். நைமித்திகமாவது செய்யாது விடிற்குற்றம் பயப்பதாய பிதிர் கரும முதலியன என்க. ஈண்டு விசேடணமாவது, விருப்பம் என்பது. விசேடணமுடையது என்றது விழையப்படுவதற் கேதுவாவதனை. அதன் தன்மையாவது விழைவிற்கும் ஏதுவாயதற்கும் உள்ள சம்பந்தம். அச்சம்பந்தத்தின் நினைவு, விழையப்படுவதற்கு இது கருவியாயுள்ளது என்னுமுணர்வு. அந்நினைவாற் றோன்றும் ஞானம், இது செய்யவேண்டியதென்னுமுணர்வு. அது உடனிகழும் என்பது விதி ஒவ்வொன்றினும் முயற்சியைப் பிறப்பிப்பதாய ஞானத்தொடு இது செய்யற்பாலதென்னு முணர்வு கூடிவரும் என்றவாறு. புந்திசெய்வான் தெரிந்து கொள்வான். இலக்கணையாற் கோடற்பாற்று என்றது, அபூர்வமே விகுதிக்குப் பொருள் என்பார்க்கு உலகத்தின் கண்ணதாகிய விகுதிக்கு அபூர்வங்கோடல் வேண்டப்படாமையின் அதற்குக் காரணமாதற் சம்பந்தம்பற்றித் தொழிற்காரியங் கோடற்பாலதாகலின். தொழிற்காரியம், தொழிலான் முற்றுப்பெறுவது என்க.

* அற்றன்று என்பது அபூர்வமுதலியன விகுதிக்குப் பொருளாகா என்றவாறு. என்னை? யாகத்தின் கண்ணும் ஏதுவே விகுதிக்குப் பொருளாகவுணர்ந்தபின்னர் அவ்வேள்வி விரையக்கெடுவதாகலின் உறுதிப்பொருட்டு அவாந்தர வியாபாரமாக அபூர்வங்கோடற்பாலதல்லது அபூர்வமுந் தொழிற்காரியமும் விகுதிக்குப் பொருளா

[illegible]மையின், ஏதுவே விகுதிக்குப் பொருளாவதென்பது எளிதி
னெய்துதலான். அபூர்வமாவது ஓர் வியாபாரம் என்பது. தகுதி
யுறுவாதற்றன்மை. உறுதி ஏதுவாதற்றன்மையைத் துணிவது.

* சுருதியானும் அபூர்வமே வியாபாரமாகக் கோடற்பாற்றாத
லுணர்க என விரித்துரைத்துக்கொள்க; எஞ்சிநிற்றலிற் கெடற்பா
லது அபூர்வமேயாகலின். தான் செய்த நற்காரியத்தைத் தானே
புகழின் அது கெட்டுப்போம் என்பது தருமநூற்றுணிவு. வேள்வியி
னழிவுபாடு வியாபாரமன்று அழிவுபாட்டிற்கோர் கேடின்மையின்.

* விதிப்பொருண்மையும் முயற்சிப்பொருண்மையும் தரினும்
இவ்விகுதி பலபொருள் ஒருசொலின் வேறு; வெவ்வேறு தன்மை
யான் இருபொருள் பயத்தலான் என்க.

* தெளியப்பட்டமையான் முயற்சிப்பொருண்மையும் உடை
த்து என இயையும். வினைமுதலும், செயப்படுபொருளும் விகுதிக்
குப் பொருளாகா என்றது அவை பொருளாயின் சாத்தன் அடு
கின்றான், அரிசியடப்படுகின்றது என்னும் வழக்கின்கண் சாத்தன்
அரிசி என்பன நின்று வற்றுமாகலான். விகுதிக்கு முயற்சியேயன்றி
என்னும்பொருளாம் என்றவாறு. வியங்கோள் விகுதிக்கு ஏதுவா
தற்றன்மை பொருள் என்பது நையாயிகர்மதம். அபூர்வமும் தொ
ழிற் காரியமும் பொருள் என்பது குருமதம் என்பது.

பதார்த்த வுணர்விற்கு வீடுபேறே மேலாய வுறுதிப்பயன்.
"மூர்த்திய வொருமையாலே மொழிந்தவை கேட்டல் கேட்ட, சிந்
தனை செய்த லுண்மை தெளிந்திட லதுதானாக, வந்தவாறெய்தநி
ட்டை மருவுத லென்று நான்கா, மித்தவா றடைந்தோர் முத்தி யெ
ய்திய வியல்பினாரே." என்னுஞ் சுருதியாற் கேள்விமுதலாயின
முத்திப் பேற்றுக்கு ஏதுவாதல் கூறுதலின், கேள்வியான்

ம்பு முதலியவற்றிற்கு வேறாய ஆன்மா உண்டென்றுணர்ந்தழியும் ஐயநீங்குதல் உத்தியாற்பலசாற்பயிறலாகிய சிந்தனையாற் பெறற்பாலதாகலின், சிந்தனையைப் பிறப்பிப்பதாகிய பதார்த்தங்களினுண்மை தெரித்தலாற் சுருதியன்றிச் சாத்திரமும் முத்தியைப் பயப்பிப்பதேயாம். சிந்தனைசெய்தபின்னர்ச் சுருதியான் உபதேசிக்கப்படும் யோகவிதியால் தெளிதல் நிகழ்ந்துழி அதன்பின்னர் உடம்பு முதலியவற்றிற்கு வேறாய ஆன்மாவைப் புலப்படக் காணும். காணவே, உடம்பு முதலியவற்றை யானென்னுஞ் செருக்காகிய மயக்கவுணர்வு கெடும். கெடவே, குற்றமின்மையின், முயறலின்றாம். ஆகவே, அறம் பாவங்கள் நிகழாமையிற் பிறவி நீங்கும் பிறவி நீங்குழி, முன்னர்ச் செய்துகொண்ட அறம் பாவங்கள் அனுபவத்தானீங்கும். நீங்கவே, இறுதித் துன்பத்தினழிவுபாட்டை இலக்கணமாகவுடைய வீடுபேறுண்டாம். வீடுபேற்றிற்கேது ஞானமே. மயக்கவுணர்வு நீங்குதல் ஞானமாத்திரத்தாற் றேன்றும், "ஞானத்தில் வீடென்றே" எனத் தேற்றேகாரத்தால் வினையேதுக்கள் அதுவல்லவென விலக்குதலின். அற்றேல், "சன்மார்க்கஞ் சகமார்க்கஞ் சற்புத்திர மார்க்கந் தாதமார்க்கமென்று சங்கரனை யடையுநன்மார்க்க நான்கு" என வீடுபேற்றிற்கு நான்கு காரணமென்றலின், ஞானங் கருமமென்னும் இரண்டுங் கூடியே வீடுபேற்றிற்குக் காரணமாமெனின்;—அற்றன்று, ஈண்டுச் சரியை கிரியா யோகங்களைச் செய்துழி நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டியல்லது மோக்கத்தைக் கொடாவென்றும், "சரியை கிரியாயோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்" என்றும், "கிரியையென மருவுமவையாவு ஞானங் கிடைத்தற்கு நிமித்தம்" என்றும், கருமமனைத்தும் ஞானத்திற்கு ஏதுவாகக் கூறுதலின், கருமமனைத்தும் ஞானம் வாயிலாக வீடுபேற்றிற்குக் காரணமாவதல்லது நேரே